1233

[N]o. M. 2210

வருஷ சந்தா ரு. 1-8-0

PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் VI ஜகன்மோகினி இதழ் 7 & 8



ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JC
ஈ211, N122J11
M 29.6.7,8.
182858

தனிப் பிரதி அணா 3.

குறிப்பு:—இவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 2-வது ரகம் ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0

ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0

ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபாற் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை

ஏஜண்டுகள் தேவை.

OFFICE OF THE REGISTRAR
23 NOV 1929
MADRAS

14-வது அதிகாரம்

அன்பே செல்வம் — அறிவே பூஷணம்

அதற்குள் அங்கிருந்த அம்புஜமும் பங்கஜமும் வனஜத்துக்கு மூர்ச்சை தெளியவைத்தார்கள். வனஜவல்லி சற்றுத் தெளிந்து எழுந்ததும் அவளுடைய மனத்திலுண்டாகிய பயத்தினல் முகம் மாறுபட்டுவிட்டது. தனது கற்பைப் பற்றி எழுதி யிருப்பதை எண்ணியதும் அவள் தேகம் பற்றி எரிகின்றது. அன்னிலைமையில் அவள் பரிதாபகரமான பார்வையுடன் அங்கு நிற்கும் தலைவியையும் கிழவரையும் நோக்கி "ஆகா! என்னை வளர்த்த பாட்டனுரே! என் கல்வித் தலைவி! யான் கைம்பெண் ஈன்ற கழிபட்டவளா! கசடியா! உலகத்து மக்களுக்குக் கீழ்ப்பட்டவளா! என் மானங்கெட்ட பிறவியின் மர்மத்தை இதுகாறும் அறியாது மகிழ்ச்சியாக விருந்த என்னை மீளாத் துயரக் கடலில் ஆழ்த்தி விட்டனரே கடவுள்! ஆ! அந்தோ! நான் கற்பழிபட்டவளா! என்ன செய்வேன்? இத்தகைய கொடுஞ் சொற்களைக் கேட்டு என்னல் சகிக்கக் கூடவில்லையே! யான் இனி இவ் வுலகத்தில் மான மழிந்து எல்லோருக்கும் தாழ்மையாக ஏன் வாழவேண்டும்? நான் தற்கொலை செய்துகொண்டால்தானென்ன? விதவையான விபசாரி பெற்ற பெண் என்று எல்லோரும் என்னைச் சிறுமையாகப் பேச நான் ஆளாய் விட்டேனே! என் இருதயம் துடிக்கின்றதே! என்பெற்ரோரை இன்னுரென்று அறியவில்லையே என்று நான் வருத்த முற்றிருக்கையில் என் பிறவியின் வரலாறு இவ்வித ஆபாஸமாகவா முடிந்துவிட்டது! ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று ப்ரலாபிக்கின்ருள். இவளுடைய பரிதாபகரமான புலம்பலைக் கண்டு சகியாத கிழவரும் தலைவியும் மற்றையோரும் கண்ணீர் விட்டுக் கலங்கிவிட்டார்கள். தலைவி வனஜவல்லியைச் சேர்த்து அணைத்துக்கொண்டு "என் செல்வமே! வனஜவல்லி! நீ இனி இவ்விதக் கவலைப்பட்டுப் புலம்ப வேண்டாம்; உன்னுடைய பிறவியைப் பற்றி நீ ஏன் விசனிக்க வேண்டும்? நீ எத்தகைய குற்றமும் இழைத்தவளன்று. இக்

கடிதத்தில் குறித்திருப்பதை நீ உண்மை என்று நம்பிவிடலாகுமா! இதை யான் சற்றும் நம்பவில்லை. இக் கடிதத்தினிடத்தில் எனக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது. இது உண்மையான கடிதமேயல்ல. முழுமோசமான கடிதமென்றே எனக்குத் தோற்றுகின்றது. வனஜவல்லி! நீ அன்று நடந்த சம்பவத்தை மறந்துவிட்டாய் போலும்! அது விஷயமாய் சம்மந்தப்பட்ட கடிதமென்று என்னுள்ளம் கூறுகின்றது. மேலும் உன் பிறவி ஆபாஸமான தாயிருப்பினும் எனக்கும் எனது ஆசிரமத்திற்கும் அதனால் சிறிதும் அவசியமில்லை. உன்னுடைய நன்னடக்கையும் மேம்பட்ட குணமுமே எனக்குப் பிரதானமேயன்றி மற்ற விஷயங்களைப் பற்றி யான் சிறிதும் சிந்திக்கவில்லை. என் அன்பான வனஜவல்லி! நீ சற்றும் அஞ்சவேண்டாம். இக் கடிதம் வீணான அபத்த மூட்டை! இதை நம்பாதே! இக் கடிதத்தைக் கொண்டே யான் இதை எழுதியவனைக் கண்டுபிடித்துவிடும் வழியைத் தேடுகிறேன் பார். நீ விசனத்தை யொழித்துவிடு." என்று தேறுதலான வார்த்தைகளைக் கூறி அன்புடன் அவளைத் தேற்றினாள்.

கிழவர், தாங்க இயலாத விசனத்துடன் நாத்தடுமாறிய வண்ணம் பேசத் தொடங்கி "என் கண்மணி! வனஜவல்லி! உன்னை யான் வீதியில் கண்டு எடுத்து எனது உயிராக பாவித்து வளர்த்த வரலாறு யாவரு மறிந்த விஷயம். அகஸ்மாத்தாக அகப்பட்ட குழந்தையை யான் எடுத்தவுடன் போலீஸில் தகவல் கொடுக்க வேண்டியது எனது கடமை. அதிருக்க யான் மக்களற்ற மாபாவியானதால் உன்னைக் கண்டவுடன் என் கலி தீர்ந்துவிட்டதாக எண்ணினேன். எண்ணிய என் மனத்தில் என்னை யறியாமலே உற்சாகம் பிறந்து தூண்டியபடியால் நான் போலீஸுக்குத் தெரியாமல் சில தெருக்களில் விசாரித்துவிட்டு என் குறையைத் தீர்க்கவந்த கோமளத்தை யானே வைத்துக்கொண்டேன். என் செல்வியை யான் வெகு மேன்மையாய் என்னிடமே வைத்துக் கொண்டு வளர்க்க எண்ணினேன். என் எண்ணத்தில் மண்ணைப் போட்டது போல என் உடன்பிறந்தவள் தனது இரு குழந்தைகளையும் என் வசமே விட்டு உயிர் விட்டபடியால், மூன்று குழந்தை

162858

களையும் வைத்துக்கொண்டு வளர்ப்பது பெண்கள் சகாய மில்லாத எனக்குக் கஷ்டமாயிருக்கு மென்பதை யோசித்து இங்கு கொண்டு வந்து சேர்ப்பதுதான் உசிதமென்று தீர்மானித்து அவ்விதமே சேர்த்தேன். தங்களுடைய தயவால் குழந்தைகள் மூவரும் க்ஷேமமாயிருக்கிறார்கள். இடையில் இத்தகைய பாழும் குழப்பங்கள் ஏன் சம்பவிக்கவேண்டும்? எனது மனமும் குழந்தையின் மனமும் வருத்தமுறுவதற்குத் தானே இவ்விதம் கடிதம் வந்திருக்கின்றது!'' என்று கிழவர் விசனித்துக் கண் கலங்கினார்.

தலைவி:—பெரியவரே! தாங்கள் எல்லா மறிந்திருந்தும் இவ்விதம் விசனப்படலாகுமா? இக் கடிதத்தைத் தாங்கள் சற்றும் நம்பவே வேண்டாம். இது சுத்த மோசடியானது. இக் கடிதத்தை யான் வெறுமெனே விடப்போவதில்லை. போலீஸ் அதிகாரிகளில் எனக்குத் தெரிந்தவர் ஒருவரிருக்கிறார். அவரை வரவழைத்து அவரிடம் கடிதத்தைக் கொடுத்து வனஜவல்லியின் தகவலையும் கூறி அவரையே யோசனை கூறும்படியாகச் செய்கிறேன். அவர் என்ன சொல்கிறாரோ அவ்விதமே செய்வோம். இதுதான் சரியான வழி. இதில் வரைந்துள்ள விலாஸமும் சரியானதாக விருக்குமென்று என் புத்தியில் படவில்லை; எனினும் இதற்கும் ஓர் யுக்தி அந்தப் போலீஸ் அதிகாரியையே கேட்கிறேன். யாரடா! குப்பா!'' என்று அழைத்தார்கள்.

உடனே ஒரு சேவகன் வந்து நின்றான். தலைவி அவனை நோக்கி "அடே! நீ உடனே சென்று போலீஸ் ஐயாவை நானழைப்பதாக அழைத்துக்கொண்டுவா!'' என்று உத்தரவிட்டாள். சேவகன் உத்தரக்ஷணமே சென்று போலீஸ் அதிகாரியுடன் திரும்பினான்.

தலைவி:—ஐயா! நமஸ்காரம். உங்களைப் பார்த்து வெகு நாளாயிற்று. க்ஷேமந்தானே! வீட்டில் எல்லோரும் க்ஷேமந்தானே!

போலீஸ்:—ஆகா! யாவரும் க்ஷேமந்தான். என்னை யழைத்த காரணம் யாது? ஆசிரமம் சரியாக நடைபெறுகின்றதா! சிறுமிகள் எல்லோரும் நன்றாகப் படிக்கின்றார்களா?

தலைவி:—ஆகா! கடவுளின் கருணையால் எல்லாம் செழிப்பாகவே இருக்கின்றது. இங்குள்ள பெண்மணிகள் எல்லோரும் வெகு புத்திசாலிகளாயும், யூகசாலிகளாயும், ஊக்க முடையவர்களாயும் படித்து வருகிறார்கள். இங்குள்ள பெண்மணி யொருத்தியின் விஷயமாகத்தான் தங்களை இங்கு அழைத்தது. அதோ நிற்கும் பெண்ணைத் தாங்கள் பார்த்திருப்பீர்களல்லவா? அவளைப் பற்றிய விஷயந்தான் என்று தொடங்கி, வனஜவல்லியின் வரலாறு முற்றிலும் கூறி அன்று வந்த கடிதத்தின் செய்தியையும் சவிஸ்தாரமாகத் தெரிவித்து, இது பற்றித் தான் தம்மை விசாரிக்கலாமென்று வரவழைத்தேன். இக் கடிதம் படுமோசமாகத் தோன்றுகின்றதே யன்றி நிச்சயமானதாகத் தெரியவில்லை. அபத்தக் களஞ்சியமான இக் கடிதத்தைக் கண்டு குழந்தை வருந்துகிறாள். அது சகிக்கக்கூடவில்லை. அவள் மகா புத்திசாலி. மேன்மையான உத்தம குணமுடைய சிரோமணி. அவளுடைய விஷயத்தில் எனக்கு ஒரு தனியான அன்பும் ஆர்வமும் உதித்துவிட்டன. இந்தக் கடித மெழுதிய சண்டாளனைத் தாங்கள் எவ்விதமேனும் கண்டுபிடித்துப் பழி தீர்க்கவேண்டும். குழந்தையின் பரிதாபத்திற் கிரங்கி அவள்மீது தயவு செய்து இக் காரியத்தைத் தாங்கள் செய்து முடித்து அவளுடைய குறையைத் தீர்க்கவேண்டும். அநாதைச் சிறுமி யவள். அவள் மனம் வருந்தாமல் காப்பது தமது பாரம்'' என்று வெகு அன்புடன் கூறினாள்.

இதைக்கேட்ட அவர் வருத்தமடைந்த பார்வையுடன் வனஜவல்லியை உற்றுநோக்கினார். மீண்டும் தலைவியை நோக்கி ''அம்மணீ! தாங்கள் கூறும் விஷயத்தில் யான் வேலை செய்யத் தடை யொன்றுமில்லை. மேலும் இக் குழந்தையின் விஷயம் மனத்தை உருக்குகின்றது. என்னால் கூடிய மட்டிலும் வேலை செய்கிறேன். எனக்கு மேலதிகாரியான இன்ஸ்பெக்டர் முத்துக் கிருஷ்ணன் என்பவர் திடீரென்று எங்கேயோ போய்விட்டார். அது விஷயமாகப் போலீஸ் ஸ்டேஷனே குழப்பமடைந்திருக்கின்றது. அவர் ஓர் கொலைக் கேஸ் விஷயமாக மேலதிகாரிகளால் இவ்விடத்திற்கு வருவிக்கப்பட்டார்; அவர் தமது குதிரைமீது ஏறிக்கொண்டு

ஒரு கொலையாளியைத் தேடும் பொருட்டு எங்கேயோ சென்றூர்; திரும்பி வரவில்லை. அதை யறிந்த போலீஸ் வீரர்கள் அவரைத் தேடிச் சென்றதில் ஊருக்குப் பத்து மைல் தூரத்திற் கப்பாலுள்ள காட்டில் ஓர் மரத்தடியில் அவர் ஏறிச்சென்ற குதிரை மட்டும் கட்டப்பட்டிருப்பதாயும் அவரைக் காணவில்லை என்றும் சென்ற வீரர்கள் திரும்பிவந்து கூறிவிட்டார்கள். அந்த வனத்தில் அந்த மனிதரை எங்கென்று தேடுதல் கூடும்? அப்படியும் முயற்சியை விடாது தம்மாலான வரையில் காடு முற்றிலும் தேடி யலைந்துவிட்டு வந்தார்கள். அந்த விஷயமாக நாங்கள் பெரிய குழப்பத்தை யடைந்திருக்கின்றேம். அவர் காணுத தகவலை நாங்கள் இன்னும் வெளிப்படுத்தவில்லை. அவருடைய சம்சாரத்திற்கும் தகவலனுப்ப வில்லை. இன்று தெரிவிப்பதாக ப்ரஸ்தாபம். அந்தக் கொலை விஷய மாகச் சகல துப்புக்களையும் துலக்கிய பின் தாம் செல்வதாக எங்களிடம் தெரிவித்தார். இப்போது நாங்கள் என்னவென்று எண்ணுவது? ஒன்றுமே தோன்றவில்லை. ஒரு பெரிய போலீஸ் இன்ஸ்பெக்டரைக் காணேம் என்றுல் கேட்போர் பரிகஸிக்கமாட் டார்களா! அதனுல் அதை விளம்பரப்படுத்தவில்லை. இப்போது நாங்கள் எல்லோரும் அவரைத் தேடும் விஷயமாக வேலை செய்து கொண்டிருப்பதால் சற்றும் ஓய்வில்லை; ஒழிந்தநேரத்தில் இந்த விஷ யத்தையும் மறக்காது பார்த்துக்கொள்கிறேன்; பயப்படாதீர்கள். இதற்காகத் தாங்களேனும் சரி, அந்தக் குழந்தையேனும் சரி சற்றும் வருந்தவேண்டாம். என்னுல் கூடியவரையில் செய்கிறேன்.'' என்று கூறிப்பின் வனஜவல்லியை நோக்கி "அம்மா! நீ கவலைகொண்டு கலங் காதே: உனது தலைவியாரின் தயவு உன்மீது பூர்ணமாயிருக்கின்ற பரியந்தம் நீ சற்றும் வருந்தவேண்டாம். உனக்கு ஒருவித மான இடுக்கணும் அணுகாது. நான் சென்றுவருகிறேன். கடவு ளையே நம்பி இரு.'' என்று கூறிவிட்டு எழுந்திருந்தார்.

அப்போது வனஜவல்லியின் வளர்ப்புப் பாட்டனுராகிய கிழவர் சற்று ஆச்சரியக்குறியுடன் வந்தவரை நோக்கி, "என்ன! என்ன! போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துக்கிருஷ்ணையா காணேம்! அடாடா! அவன் நல்ல மனிதனுயிற்றே! உம். சொல்லிக்கொள்ளவும்

வெட்கமாயிருக்கின்றது. அவன் எனது தம்பியின் மகளுகவேண்டும். அவன் தாயாரும் தமக்கையும் கொடிய விஷம்போன்ற மனத்தையுடையவர்கள். என் தம்பி இறக்கும் முன்னரே எங்களுக்குள் த்வேஷம் வந்துவிட்டது. அதாவது, எனக்கு குழந்தை குட்டி யில்லாமையாலும், மனைவியும் இறந்துவிட்டமையாலும் யான் மனவெறுப்புற்று மணம் செய்துகொள்ளாது தேச யாத்திரை சென்றுவிட்டேன். பின்னர் சில வருடங்கள் சென்று யான் திரும்பிவந்த காலத்தில் என் தம்பி இறந்துவிட்ட செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றுத் துக்கம் விசாரிக்க அவர்கள்வீடு சென்றேன். என்னையவர்கள் நிரம்பவும் விசாரித்து உபசரித்துத் தடபுடலாக உபசாரம் செய்தார்கள். 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா!' ஆடாதன்றோ? அதுபோல அவர்கள் என்னை வீணுக்கு உபசரிக்கவில்லை. ஏதோ ஒரு முக்கியமான காரியத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் செய்கிறார்கள் என்பதை யான் தெரிந்துகொண்டேன். சில தினங்களாயதும் என்னைக்கண்டு என் தம்பியின் பெண் என்னுடைய ஆஸ்தி முற்றும் தமக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், பங்காளி சொத்துப் பங்காளிக்குத்தான் சேர வேண்டுமென்றும் நியாயங்கூறத்தொடங்கினாள். நான் எண்ணிய வாறுதான் நடந்தது என்பதை யான் கண்டுகொண்டேன். பிறகு அவள் கேட்டதற்கு நான் "அம்மா! கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது! எல்லாம் உங்களுடையதுதான்! என் காலத்திற்குப் பிறகு உங்கள் வசமாகுமேயன்றி என்னுயிர் இருக்கையில் என் கையைவிட்டு ஒரு துரும்பும் அசைக்க இயலாது. அப்போதைக்கப்போது வேண்டுவனவற்றைத் தருகின்றேன். அவ்வளவு தான் செய்ய முடியும்'' என்றேன்.

இதைக் கேட்டதும் என் மேலாத்திரங்கொண்டு தாறுமாறுக மகளும் தாயும் கூடிச் சண்டையிட்டு வைது "இப்போது எல்லாவற்றையும் வைக்காவிட்டால் வீட்டைவிட்டு நடக்கலாம்'' என்று கூறினார்கள். யான் அந்தப் பதிலுக்கே காத்துக்கொண்டிருந்தபடியால் உடனே வெளியேறிவிட்டேன். ஆனால் முத்துக்கிருஷ்ணனின்மீது மட்டும் எனக்கு உண்மையான ப்ரியம் உண்டு. அவனையும் என்

முகத்திலும் விழிக்கவொட்டாமல் செய்துவிட்டார்கள். அப்போது அவன் சிறியவன்; தாயாருக்கும் தமக்கைக்கும் பயந்து நடந்து வந்த வனுகையினுல் அவன் என்னைத் திரும்பிப்பாராமலே இருந்துவிட்டான். அதற்குப் பின் இது பரியந்தம் அவர்கள் வீட்டில் நடக்கும் சுபம், அசுபம் ஒன்றிற்கும் எனக்குச் சொல்வதுமில்லை; அழைப்பதுமில்லை. நான்தான் ஏகாங்கி; என் வீட்டில் ஒன்றும் நேரவுமில்லை. எனக்கு ஒரு தங்கையிருந்தாள். அவள் மிகவும் ஏழை. அவளுக்கு நான் சற்று உதவிபுரிந்து வந்தேன். அந்த ஆத்திரத்தினுல் அவளையும் துறந்துவிட்டார்கள். அவளும் இக்குழந்தைகளை விட்டு உயிர் நீத்தாள். எல்லாம் எனக்குக் கால்கட்டாய்ச் சேர்ந்துவிட்டன. எனது தம்பியின் மகன் பெரிய உத்யோகத்திலிருக்கிறுன் என்று கேட்டுச் சந்தோஷமடைந்திருந்தேன். பேரிடிபோன்ற இவ் வார்த்தையைக் கேட்டதும் விலக்கினுலும் விலக்க இயலாத பாசம் என் மனத்தில் வந்து மூடுகிறது. மனம் கொடிய வேதனையை அடைகின்றது. அவனுக்கு இரண்டு முறை விவாகம் செய்ததாகவும் கேள்வி. மூத்த மனைவி இறந்துவிட்டதாகச் சிலர் கூறுகின்றனர். உயிருடனிருப்பதாயும் ஒரு குழந்தையிருப்பதாகவும் சிலர் கூறுகின்றனர். அவள் நடத்தை சரியாக இல்லை என்றும் அதனுல் விலக்கிவிட்டதாயும் சிலர் கூறுகின்றுர்கள். அவள் மகா உத்தமி என்றும் சிலர் கூறுகின்றுர்கள். உலகம் பலவிதம். இந்த உண்மையை யார் அறிவார்கள்! அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். விலக்கிவிட்டுத் தலை முழுகிவிட்ட பின்னர் அந்த விஷயத்தில் நாம் தலையிடலாகாதென்று தீர்மானித்துவிட்டேன். அதனுல் யான் அவ்வூரையும் விட்டு இவ்விடம் வந்து சேர்ந்துவிட்டேன். ஏதோ என் விதியை எண்ணிக் கடவுளின் மீது மனத்தைச் செலுத்திக் காலத்தைக் கடத்துகையில் பரதேசிக் குழந்தையாக அகப்பட்ட இதனிடம் ஏதோ ஒருவிதமான அன்பு சுரந்துவிட்டதால் இதை நானே வைத்துக்கொண்டேன். அவளுடைய உத்தமமான குணமே என்னை அவளிடத்தில் அன்பு செலுத்தும்படியாகத் தூண்டிவிட்டது. ஐயா! அவனுக்குச் சத்ருக்கள் யாரேனுமுண்டோ?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் அவர் "ஐயா! போலீஸாருக்குச் சத்ருக்கள் இருப்பதற்கு குறைவு உண்டா? துட்டர்களெல்லோரும் எங்களுக்குச் சத்ருக்கள் தான். மேலும் அந்த முத்துக்கிருஷ்ண னுடைய ஸம்ஸாரம் நவநீதம் என்பவர்களின் சாமர்த்தியமும் உன்னதமான தெய்வபக்தியும், புத்தியின் மேன்மையும், சமயோசிதமான மதியூகமும் இன்னுமற்ற விசேஷ குணங்களும் சாதாரணமென்று சொல்லிவிடச் சாத்தியமன்று. ஒவ்வொரு அம்சத்தையும் கண்டால் வியப்புறாத மனிதரிருக்கமாட்டார்கள். வெகு நாட்களாய் ஒரு போலீஸாரிடமும் அகப்படாமல் ஜனங்களுக்கு இம்சை செய்துவந்த கொள்ளைக் கூட்டத்தாரை அந்தம்மாள் தங்கள் வீட்டிலேயே அடக்கிவிட்டார்கள் என்று, நவநீதம் கள்ளரைப்பிடித்த செய்தியை விளங்கக்கூறி, இத்தகைய சாமர்த்தியத்திற்காகக் கவர்ன்மெண்டார் தங்கப்பதக்கம் அந்தம்மாளுக்குப் பரிசளித்துள்ளார். அந்தக் கூட்டத்தவர்களில் எங்கேயாகிலும் ஒரு வகுப்பார் பிடிபடாமலோ—அகப்படாமலோ—தப்பியிருந்திருக்கக்கூடும். அவர்களால் இவருக்கு ஏதேனும் உபத்திரவம் நேர்ந்திருக்குமோ எனக்கருதுகிறேன். செய்தி எவ்விதம் முடியுமோ தெரியவில்லை. மனிதனை காணப்படவில்லை. கடவுள் என்செய்ய எண்ணி இருக்கின்றாரோ! உம். நேரமாய்விட்டது; யான் சென்றுவருகிறேன்". என்று கூறிவிட்டுப்போய்விட்டார்.

வனஜவல்லிக்கோ கவலை நீங்கியபாடில்லை. தனக்கு ஏதோ பெரிய ஆபத்து சூழ்ந்துவிட்டதாகவே அவள் எண்ணிவிட்டாள். பிறகு கிழவர் உத்தரவு பெற்றுக்கொண்டு வனஜவல்லிக்குத் தேறுதல் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஆசிரமத் தலைவியும் மற்றபெண்களும் வனஜவல்லிக்கு எத்தனையோ விதத்தில் தேறுதல் கூறித் தேற்றினார்கள். அவளுக்கு இம்மொழிகளெல்லாம் செவியில் படவில்லை. குழம்பிய மனம் தெளிவுபடவில்லை. தான் கைம்பெண்ணாகிய விபசாரி ஈன்ற மகளல்லவென்பதை அறிந்த பின்புதான் தன் உள்ளம் தெளிவுறும் என்ற எண்ணத்திலேயே அவள் மூழ்கிவிட்டாள். சில தினங்களாயின. வீண் வேதனையினால் இரவு பகல் ஊணுறக்கமற்றிருந்தபடியால் வனஜவல்லி இளைத்துத் துரும்பு

போலாய்விட்டாள். அம்ருதம்போன்றதும், ஹாஸ்யச்சுவை ததும்பியது மாகிய அவளுடைய வசனங்களும், மலர்போன்ற முகத்தில் அனவரதமும் தவழும் புன்னகையும், சுறுசுறுப்பும் எல்லாம் அவளை விட்டு அகன்று விசனக்கடலில் ஆழ்ந்துவிட்டதுபோல மறைந்து விட்டன. அவளைக் காண்போர் அவளுடைய விசனகரமான வரலாற்றைக் கேளாதிருக்கும்போதே கண்ணீர் உகுக்கும் நிலைமையில் அவள் வந்துவிட்டாள்.

ஒரு தினம் நித்திரை கொள்ளாது இரவு சுமார் 10 மணி நேரத்தில் வனஜவல்லி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏக்க முற்றுப் படுத்திருந்தாள். அச்சமயம் வீதியில் யாரோ வெகு ரம்மியமாயும் ஆநந்தமாயும் பாடும் தொனி அவள் செவியில் விழுந்தது. அக் குரலின் இனிமையையும் பாடலில் சாரமான அர்த்தத்தையும் செவியுற்ற வனஜவல்லி தன் விசனத்தை யெல்லாம் மறந்து தன் மனத்தை அப் பாடலின் மீது செலுத்தி அதையே வெகு கவனமாய்க் கேட்கலானாள்.

நாதநாமக்ரியை ராகம்

ஈசன் வகுத்திட்ட இருஜாதி மானிடரில்
எனைப்போற் கண்டதுண்டோ!
நீசனாய்ப் பிறந்தாலும் நிமலா! நின்னடி போற்றி
நினையாத நேரமுண்டோ!
ஆசையும் மோகமும் ஆருயிர் இன்பமும்
அனைத்தும் நீ என நினைந்து
பாசமாய்ப் பணிந்திடும் பாவியை வருத்தாது
பாலித்தருள் செய்குவாய்.

பைரவி ராகம்

மற்றொன்றும் வேண்டிலேன் மாதவா! உன்றனிரு
மலரடித் துணை வேண்டி நின்றேன்
குற்றங்கள் பலவுண்டு ஏழை நான் செய்தவவை
குறியாமல் ஆண்டருளுவாய்
கற்பகலையா லுன்றன் கருணைதனை யடையவோ
கடையனேன் திடமுற்றிலேன்

உற்ற துணை உன்றனிரு பாதமென நம்பினேன்
உபேட்சியா தடிமை கொள்வாய்

ராகமாலிகை

சகானா

மண்ணாய்ப் பிறந்தாலும் மாதவனின்னடியார்
மிதித்திடும் மாண்பெய்துமே!

வளமைதரு பயிர்களும் கனியுதவு தருக்களும்
மலர்ச்செடியும் வளர்ந்தோங்குமே!

கானடா

வண்ணானின்பொதி சுமக்கும் வாலேயமாயினும்
மக்களுக்குதவியாமே!

வாஞ்சையுடன் காவல்செயும் ஞமலியாய்ப்பிறப்பினும்
வளர்த்திடும் மேன்மை பெறுமே!

காபி

தண்ணீர் பெருக்காகித் தங்காது ஓடிடில்
சகலர்க்குமுதவியாமே!

சாலேயோரந்தனில் கல்லாயிருந்திடில்
சலித்தோரை இளைப்பாற்றுமே!

மத்யமாவதி

எண்ணாத நன்மையில் எள்ளளவும் பயனிலா
ஈனமாம் ஜென்மமுற்றேன்

கண்ணா! நீ இனியேனும் கருணைபுரிந் தேழையென்
கவலையைப் போக்குவாயே!

ஆகா! என் தாய்மார்களே! தந்தைமார்களே! பரதேசியின் பாடலைக் கேட்கக் கூட்டமாய் நிற்பதைத் தவிர ஒரு கவளம் அன்னமளிக்கும் தாதாக்கள் ஒருவருமில்லையா! அநாதையைக் கவனிக்க யாருக்கும் மனமில்லையா! பரதேசியின்மீது ஒருவருக்கும் மனமிளகவில்லையா! அட ராமா ஏ கோவிந்தா! சங்கரா!

ஆநந்தக்களிப்பு மெட்டு

(1) ஹர ஹர சாம்ப சிவமே—உந்தன்
திருநாமம் ஓதிடில் தீரும்பவமே!
(2) ஒரு சாண்குட்சிக்கிந்தப்பாட்டு—பாடித்
திரிந்திடச் செய்வதோ உன் விளையாட்டு
(3) ஒரு பிடி யன்னமும் காணேன்—எந்தன்
கரும வினையினல் கருத்தொன்றும் தோனேன்.
(4) அறுபது நாழிகை யலைந்தும்—ஒரு
தரும ப்ரபுவின் தயவின்றி மெலிந்து
(5) வருந்துமிப்பாவியைக் கண்டு—இன்றே
திருவருள் செய்குவாய் அன்பினைக் கொண்டு.
(6) உருகிடும் பத்தனுக்குந்தன்—எழில்
திருவடி யின்றினி வேறெது சொந்தம்
(7) வரும் வினை நீக்கிட உன்னை—யின்றி
வருவனே வேறொருவள்ளலும் பின்னை!
(8) திரிந்திடச் செய்ததும் போதும்—இனி
மறைந்து நிற்காமல் முன் வந்தருள் பாதம்
(9) பரந்த உலகினில் எந்தன்—வினை
மறைந்திடா திருப்பதும் மாபெரும் பந்தம்
(10) முருகனே! என்னிடர் நீக்கி—அருள்
பெருகிடச் செய்குவாய் இருவினை தாக்கி—ஹர ஹர

ஹரஹரா! சிவ சிவா! ஒரு கவள அன்னத்திற்குத் திரியாத விட மெல்லாம் திரிந்தும் அன்ன மகப்படாது அலையும் பெரும் பாவி யாய்விட்டேனே! என் பாப ஜன்மாவைப் போல உலகில் இனிவேறு எங்கேனும் படைத்திருக்கின்றாயா? ஐயனே! ஆதி சிவ பரம் பொருளே! பாழும் வயிற்றைப் பாழ் படுத்த மாட்டாயா! பசியை நசிக்கச் செய்ய உனக்கு சக்தி யில்லையா! பசியின் கொடுமையை என் உலகத்தோருக்கு உண்டாக்கினாய்! ஐயா! தரும துரைகளே! தாய்மார்களே! சந்திப் பிச்சை யிடும் சாதுக்கள் ஒருவரு மில்லையா! ஆகா! நாம் வாய்விட்டுப் பேசாது பாடிக்கொண்டே இருந்தால் வெகு ஜனக் கூட்டம்! பாட்டை நிறுத்தி அன்னம் கேட்டால் எடுப்பது ஓட்டம்! அட ராகவா!

புன்னாகவராளி ராகம்

சிந்து

பசியோ பொறுக்கவில்லை—இந்தப்
பாவிக்குணவு கொடுப்பாரில்லை
நிசியோ நெருங்கிட்டதே!—மக்கள்
நித்திரை செய் நேரம் கிட்டிவிட்டதே! (பசி)

ஆகா! ஆறுமுகா! என் பசி ஆறுமுகத்தைக் காண்கிலேனே! என்ன செய்வேன்?' என்று ஓர் பண்டாரம் பாடிக்கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கும் தொனியை நமது வனஜவல்லி தனது முழுக் கவனத்துடனும் கேட்டவாறு படுத்திருந்தாள். பாடலின் இனிமை அதிகரிக்க அதிகரிக்க வனஜவல்லி ஆநந்த உருவமாய்விட்டாள். பாடல் நின்றதும் பரிதாபகரமான பேச்சுக்குரல் கேட்டதும் வனஜ வல்லியின் மனம் இளகிவிட்டது. "ஐயோ! இத்தனை அருமையாகப் பாடும் பண்டாரம் பசியால் வருந்துகிறனே! ஒரு பிடி அன்னமளிக் கும் மனிதர் ஒருவரையும் காணவில்லையே! ஐயோ! நாமோ பரதந் திரி! நமது மனமோ துடிக்கின்றது. ஆகா! என்ன செய்யலாம்?' என்று சற்று நேரம் யோசனையுடன் வருந்தினள். அவளுடைய இளகிய மனம் அவளைப் படுக்கையில் இருக்க வொட்டாது கிளப்பி விட்டது. அவள் மெல்ல சந்தடியின்றி எழுந்து தன்னறையின் ஜன்னலண்டை சென்று நின்றுகொண்டு வீதியைக் கவனித்தாள்.

வீதியில் பாடும் பண்டாரத்தைச்சுற்றிப் பத்து மனிதர்கள் நின்று அவனது பாடலை வெகு ஆநந்தமாய்க் கேட்டுக்கொண்டிருக் கக் கண்டாள். அப்போதுதான் அப்பண்டாரம் மண்ணாய்ப் பிறந் தாலும் என்ற பாடலைப் பாடவாரம்பித்தான். அந்தப் பாடலை நான்கு இராகங்களில் அமைத்து இராகமாலிகையாய்ப் பாடும் இனி மையும், அதன் அர்த்தபாவமும் ஒன்றுகூடி நமது வனஜவல்லியைப் பரவசமடையச் செய்துவிட்டன. "ஐயோ! இவ்வுலகில் மகா பாபத் தைச்செய்த பாவி நான்தான் என்று எண்ணி இருந்தேனே! இந்தப் பண்டாரம் எத்தகைய மனவெறுப்புற்றிருந்தால் தன்னை நொந்து மண்ணாய்ப்பிறந்தாலும், மரமாய்ப்பிறந்தாலும் செடி, கொடி புஷ் பம், கழுதை, நாய், தண்ணீர், கல் முதலியனவாய்ப் பிறந்தாலும்

பயனுண்டே! இப்பாவி பிறப்புப் பிறந்தேனே! என்று பாடுவார். ஐயோ! அவர் எத்தகைய கஷ்டங்களை யனுபவித்தவரோ தெரிய வில்லையே! பாழும் வயிற்றிற்காகவல்லவா ஆண்சிங்கமாகிய அவரும் அலைந்திட விதியாயிற்று. கேவலம் பெண் ஜன்மம் கொண்ட எனது நிலைமையை எண்ணவும் வேண்டுமோ! ஐயோ! என்ன ஜன்மம்! ஆகா! நூறு இருநூறு ரூபாயைக் கொட்டிப் பாட்டுக்கச்சேரி வைக்கும் பாடகர்களும் இந்தப் பண்டாரம் பாடும் இனிமைக்குச் சமதையாய்ப் பாடமாட்டார்கள். அடடா! என்ன சாரீரம்! என்ன அகாரம்! என்ன நயம்! என்ன சுகம்! ஆகா! இத்தகைய பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தால் மனத்திலுள்ள விசனமெல்லாம் மறைந்தோடி விடுமே! உம், சாண் வயிற்றிற்காகவல்லவா இவ்விதம் இரவும் பகலும் தொண்டைத் தண்ணீர் வற்றும்படியாகக் கத்தித்திரிவது! ஐயோ பாவம்! அவருக்கு எத்தகைய பசியோ! பசியின் கொடுமை இவ்விதம் அலையச் செய்கின்றது" என்று தனக்குள்தான் எண்ணியபடியே பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

பாடலைக் கேட்டுவிட்டு ஜனங்கள் சென்றுகொண்டே இருப்பதையும், பண்டாரம் மிகவும் வாடிய முகத்துடன் பசி தாங்கமாட்டாத வேதனையுடன் பாடியவாறு நிற்பதையும் கண்டாள். இரவு சந்திரிகை வெள்ளியை உருக்கி வார்த்ததுபோல எங்கும் துல்லியமாய்ப் பிரகாசிக்கின்றது. அந்த நிலவின் வெளிச்சத்தில் அப்பண்டாரம் நிற்கும் காட்சியானது சாக்ஷாத் சிவபிரான் ஆண்டிப் பண்டாரக் கோலத்துடன் நிற்பது போல விருந்தது. அந்தப் பண்டாரத்தின் அதி யத்புதமான வதனத்தையும், அவனுடைய ஆநந்தமான தோற்றத்தையும், எத்தகையோரையும் பரவசமுறச் செய்யும் இனிமையான கோகிலகானத்தை நிகர்த்த கானத்தையும் ஒருங்கே கண்டும் கேட்டும் பேராநந்த மடைந்த நமது வனஜவல்லியின் நிலைமை விவரித்தற்பாலதன்று. 'அந்தப் பண்டாரத்தின் பசியைத் தான் எவ்விதமேனும் ஆற்றவேண்டும். அவனுக்கு வந்தனம் செய்து அவனுடைய ஆசியைப் பெறவேண்டும். அவனுடைய கானத்தை இன்னும் அருகாமையி லழைத்துக் கேட்டு மகிழவேண்டும். நமது ஆசிரமத்தின் சகோதரிகளும் தலைவியும்

கேட்டு ஆநந்திக்கவேண்டும்' என்னும் எண்ணங்கள் அவள் மனத்தில் உதயமாய்விட்டன. பண்டாரத்துக்கு அன்னம் கிடைக்கவில்லை. அதனால் அவன் திரும்பிச் செல்ல யத்தனித்தான். இதையறிந்த வனஜவல்லி சட்டென அவ்விடம் விட்டகன்று தனது தோழிகளாகிய அம்புஜம், பங்கஜம், லக்ஷ்மி ஆகிய இவர்களையும், தலைவியையும் எழுப்பி அவர்களிடம் பண்டாரத்தின் பசியை எடுத்துரைத்து அவன் இருக்கும் இடத்தைக் காட்டினாள்; அவனுக்கு உணவு அளிக்கும்படி தலைவியை வேண்டிக்கொண்டாள்.

வனஜவல்லி அழைத்து வந்த நால்வரும் ஜன்னலருகில் சென்று கவனித்தார்கள். பண்டாரம் அப்போது "ஏழைமீதிரங்கிடும் ஏந்தல் ஒருவரும் இங்கில்லையோ ஜகதீசா!'' என்ற பாடலைப் பாடிக்கொண்டே போவதற்குத் தயாராகக் கிளம்பி 5-6 அடி செல்லலானான். இதைக் கண்ட தலைவி அவன்மீது இரக்கங்கொண்டு வீதிப் பக்கம் ஓடி உரத்த குரலால் "ஐயா! பண்டாரம்! பண்டாரம்!' என்று கூவி யழைத்தாள். இந்தக் குரலைக் கேட்ட பண்டாரம் மெல்ல திரும்பிப் பார்த்தான். இந்தம்மாள் தன்னை யழைப்பதையறிந்து வெகு மரியாதையாயும், பயபக்தியுடனும் வந்து "அம்மா!'' என்று அழைத்து அவளுக்கு வந்தனம் செய்தான்.

தலைவி:—தீர்காயுஷ்யமான்பவ! அப்பா பண்டாரம்! உன்னுடைய பாடல் வெகு இனிமையாக இருக்கின்றது. அதைக் கேட்க யாங்கள் நல்ல பூஜை செய்தோமென்றே கூறவேண்டும். ஐயோ பாவம்! பசியுடன் பாடுவது வெகு சிரம மல்லவா? இதோ நாங்கள் உணவு கொடுக்கிறோம்; அதைப் புசித்துவிட்டுச் சற்றுப் பாட முடியுமானல் பாட வேண்டுகிறேன். இதோ இவ்விடத்தில் வந்து உட்காரும்''—என்று வெகு அன்புடன் அழைத்து உட்காரச் செய்தாள். பண்டாரமும் "அம்மணி! இதோ வந்தேன்'' என்று வெகு பணிவுடன் தலைவி காட்டிய இடத்தில் வந்து தலைகுனிந்து உட்கார்ந்து விட்டான். உடனே உள்ளே சென்று இரவு மிகுந்த அன்னத்தை ஒரு இலையிலிட்டு அதற்கான பதார்த்தங்கள் ஊறுகாய் வகையுடன் கொணர்ந்து அதைப் பண்டாரத்தின் முன்னுல் வைத்து வெகு பட்சத்துடன் உபசரித்து "ஐயா பண்டாரம்!

வேண்டுவதைக் கேட்டுப் புசிக்க வேண்டுகிறேன்." என்றாள். பண்டாரத்திற்கு அடங்காத பசியானபடியால் இலையிலிட்ட அன்னத்தைப் பதார்த்தத்துடன் கலந்து ஆவலுடன் புசிக்கத்தொடங்கினான். அவன் புசிக்கும் மாதிரியிலிருந்தே அவனுக்கு உண்மையில் அதிகமான பசி என்பதை எல்லோரும் தெரிந்துகொண்டார்கள். தலைவியும் சற்றும் முகங்கோணாது இன்னும் அன்னம் பரிமாறிவிட்டு அருகிலேயே உட்கார்ந்து "ஐயா! சங்கோஜமின்றிப் புசியுங்கள். உங்களைப்போலொத்த சாதுக்களின் வயிறு குளிர்ந்தால் தான் எங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். இன்னும் என்ன வேண்டும்? குழம்பு வேண்டுமா?" என்றாள்.

இது கேட்ட பண்டாரம் மிகுந்த நன்றி விசுவாசத்தைக் காட்டும் முகக்குறியுடன் பேசத்தொடங்கி, "என் தாயே! இந்த இலைச் சோற்றைக்கண்டு யான் 5 தினங்களாய்விட்டன. 5 தினங்களாக என் சாண் வயிறு தவித்த தவிப்பைக் கருணாமூர்த்தியே யறிவான். உங்கள் தயவால் இன்று என் வயிறு குளிர்ந்தது. கடவுள் உங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பாராக" என்றான்.

தலைவி:—ஐயா பண்டாரம்! ஐயோ பாவம் தாங்கள் கூறுவதைக் கேட்க என் மனம் பரிதாபமடைகின்றது. ஒரு வயிறு உணவு அகப்படாது வருந்தும் இக்காலத்தில் ஏழைக் குடும்பங்களில் என்ன செய்வார்களோ! ஐயோ! தாங்கள் எந்த ஊரு? என்ன ஜாதி? தம்மைப் பார்த்தால் சிறு பிராயமாகக் காணப்படுகிறீர்! தமது கோலமும், வைராக்கியமும், ஞானமும் பெரிதாக விருக்கின்றனவே! அதற்குக் காரணம் ஏதேனும் உண்டோ?

பண்டாரம்:—(புசித்துவிட்டுக் கை சுத்தம் செய்துகொண்டு ஒரு புறமாக உட்கார்ந்து) அம்மா! திருப்தியாயிற்று. இனி இரண்டு தினங்களுக்கு விசனமில்லை. ஊரூராய்த் திரியும் எனக்கு நான் செல்லுமிடமெல்லாம் எனது சொந்த ஊர்தான். எனக்கு உணவிடும் புண்ணியாத்துமாக்களெல்லாம் என் தாய்தந்தையர்களும் உடன்பிறந்தவர்களுமாவர். எனது பிறவியை ஓர் பரதேசியாகவே

ஆண்டவன் நியமித்துவிட்டான் என்றே கூறலாம். மற்ற விஷயங்கள் இனிக் கூறவேண்டுமோ!

தலைவி—ஐயா! நான் கேட்பதை வித்தியாசமாக வைத்துக் கொள்ளவேண்டாம். தங்களுடைய முகத்தின் தேஜஸையும், வார்த்தையாடும் மாதிரியையும் நோக்கிடில் தாங்கள் நன்றாகக் கல்வியில் பயின்றவர் என்று தோன்றுகின்றது. உங்களுடைய வித்தியா மகிமையை தமது முகமே எமக்கு விளக்கிக் காட்டுகின்றபடியால் அதைக்கேட்டேன். மேலும் தங்களுடைய வயதும் மிகவும் இளம் பருவத்தையே கொண்டிருக்கின்றது. தமது இளமையும், கல்வியும் கூடியிருக்கும் இன்னாளில் இவ்விதம் பண்டாரக்கோலம் பூண்டு திண்டாடுவது தாம் வேண்டுமென்று ஏதோ காரணத்தை முன்னிட்டுத்தான் செய்கிறீர்கள் என்பதைத் தமது முகம் தெட்டென விளக்குகின்றது. புவியில் மானிடராய் எப்போது ஜனிக்கின்றோமோ அப்போதே ஜனிப்பித்த கர்த்தர்கள் இருந்தே தீரவேண்டும். ஜனன பூமியும் அவ்வாறே இருக்கவேண்டும். தமது பெற்றோர்கள் உலகத்திலுள்ள யாவருமாக விருப்பினும் உம்மை ஈன்றவர்கள் எவ்விதமாயினர்? இறந்துபட்டொழிந்தனரா! அன்றி அவர்களால் தமக்கு ஏதேனும் துன்பங்கள் சம்பவித்து அதன் நிமித்தம் அவர்களைவிட்டு வந்துவிட்டீரா! விஷயமின்னதென்று அறியவேண்டுமென ஆவலாயிருக்கின்றேன். அதைத் தயவு செய்து கூறவேண்டும்.

பண்டாரம்:—அம்மணீ! தாங்கள் கூறியதேபோல யான் கல்வியில் சிறிது பயின்றவனேயாவேன். பி. ஏ. பாஸ் செய்துவிட்டேன். எனது பெற்றோருக்கு யான் ஒரே மகன். என்னை வெகு செல்வமாக வளர்த்துவந்தார்கள். என் பெற்றோருக்கு ஆதி முதல் சத்ருக்கள் சிலரிருந்துவந்தார்கள். அவர்கள் சில காலம் கழிந்த பின்னர் பழய பகைகளைவிட்டு ராஜியாக வந்து சேர்ந்து சமாதானமாகிவிட்டார்கள். அவர்கள் சமாதானமாகியதை என் பிதா உண்மையாகவே சேர்ந்துவிட்டதாக எண்ணிவிட்டார். அவர்கள் வயிற்றிற்குள் பகையை மறைத்துக்கொண்டு ஏதோ காரணத்தை முன்னிட்டு எங்களை அவமானம் செய்விக்க எண்ணியே சிநேகம் செய்துக்

கொண்டார்கள் என்பதை நாங்கள் பின்னரே அறிந்துகொண்டோம். எனக்கு பி. ஏ. பாஸ் ஆனபிறகு விவாகம் செய்விக்க ஏற்பாடு செய்தார்கள். எங்களிடம் ராஜியாகிய சத்ருக்கள் என் விவாகத்தில் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு ஒரு அழகிய பெண்ணை விசாரித்து விவாகத்தை நடத்தத் தீர்மானித்துவிட்டார்கள். என் பிதாவுக்குக் கொஞ்சம் ரொக்கம் கையிலிருந்தது. எனக்குப் பார்த்திருக்கும் பெண்ணுக்கு நிரம்பவும் ஆஸ்தியிருக்கிறதென்றும், அந்த அந்த ஆஸ்தி பூராவும் எங்களுக்கே சேரப்போகிறதென்றும், பெண்ணின் அந்தஸ்திற்குத் தகுந்ததுபோல நகைகள் போடவேண்டும் என்றும், சேலைகள் வாங்கவேண்டும் என்றும் சொன்னார்கள். என் பிதா அதற்குச் சம்மதித்து வைர அட்டிகை செய்வதற்கு ஒப்புக்கொண்டு நாலாயிரம் ரூபாய் நகைக்காகவும், ஆயிரம் ரூபாய் சேலைகளுக்காகவும் கலியாணச் செலவுக்கு ஐயாயிரம் ரூபாயும் ஆகமொத்தம் பத்தாயிரம் ரூபாய் ரொக்கமாக மித்திரரான சத்ருக்களின் வசம் ஒப்புவித்தார். அவர்கள் பணத்தை வாங்கிப் பையில் வைத்துக்கொண்டு போலி வைரத்தினலான அட்டிகையொன்றைக் கொணர்ந்து காட்டி அதை வைரமென்று கூறி எங்களை மோசம் செய்து கலியாணப் பெண்ணுக்குக் கொடுத்துவிட்டார்கள். உயர்தரமான சேலைகளை வாடகைக்கு வாங்கிவந்து வைத்துவிட்டார்கள். என் பிதா வாங்கும் வழக்கமான கடையில் அவர் சொல்லியதுபோல பொய்க்கணக்கு எழுதிக் கடனுகச் சகலசாமான்களையும் வாங்கிக் கல்யாணத்தை நடத்திவிட்டார்கள். மேலே குறித்த மோசமெல்லாம் எங்களுக்கு முதலில் தெரியவராது. விவாகம் ஆயிற்று. மறுதினம் கங்கண விஸர்ஜனமும் ஆயிற்று. அன்று இரவே சோபனம் நடத்திவிட ஏற்பாடு செய்து எங்களைப் பள்ளியறையில் அனுப்பினர்கள். நான் உள்ளே சென்றதும் மஞ்சத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்தேன். அந்தப் பெண்ணுக்கு ஏதேதோ நகைகளால் தலைக்கு அலங்காரம் செய்திருந்ததை அந்தப் பெண் எல்லாவற்றையும் கழற்றிக்கொண்டிருந்தாள். அதுகண்ட நான் அந்தப் பெண்ணை நோக்கி "கண்மணி! உன்னை உனது அலங்காரத்துடன் யான் இன்னும் சிறிதுநேரம் பார்க்கலாகாதா! இதற்குள்ளாக ஏன் ஆபரணங்களைக் களைந்துவிடவேண்டும்? அவைகளைக் கழற்றுது இப்படி வா!" என்றேன்.

அதற்கு அந்தப் பெண் என்னைப் பார்த்து பெரு நகை செய்து "நாதா! என்னை இதுபரியந்தம் ஆபரண அலங்கிருதமாகக் கண்டுகளித்தது போதாதா!" என்று கூறிக்கொண்டே சகல ஆபரணங்களையும் கழற்றியதுடன், புதிதாகத் தரித்த மாங்கலிய சூஸ்திரத்தையும் கழற்றிவிட்டு, தலையிலிருந்த புஷ்பங்களுடன் அணிந்திருந்த டோபாவையும் கழற்றிவிட்டு, க்ஷவரம் செய்துக் கொண்ட குடுமியுடன் நின்று, சேலை முதலியவைகளையும் களைந்து விட்டு முழந்தாள் வரையில் கால் சட்டை அணிந்திருந்த கோலத் துடன் ஓர் ஆண்மகனுய் நின்ருன். அந்தோ! அந்த அதியாச்சரிய மானதும் அவமானமானதும் திடும்ப்ரவேசமானதுமான காட்சி யைக் கண்டதும் எனது உள்ளம் நடுக்கலுற்று, ப்ரமித்து, மூளை சுழன்று, இன்னதென்று கூற வியலாத விதமான நிலைமையை யான் அடைந்துவிட்டேன்.

என்னுடைய மாறுபட்ட நிலைமையைக் கண்ட அந்த மனிதன் மீண்டும் நகைத்துக்கொண்டே "என் காதலரே! ஏன் ஒருவாறுன குழப்பத்தை யடைந்திருக்கின்றீர்? என்னைக் கண்டு பயப்படுவ தேன்? யானும் உம்மைப்போல மனிதன்தானே; எனக்கிட்ட வேலை முடிந்துவிட்டது! யான் சென்றுவருகிறேன்." என்று கூறி விட்டு அந்த க்ஷணத்திலேயே அங்கு தான் வைத்த நகைகள், சேலைகள் முதலிய எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஓட்டம்பிடித் தான். அந்தோ! அவ்வமயம் யானிருந்த நிலைமையை விவரிக்க இன்னும் என்னுல் கூடவில்லை. எனது மூளையே கலங்கிவிட்டது போலாய்விட்டது. 'ஆகா! இவ்வித சம்பவங்களை நாம் கதைகளிலும் படித்ததில்லையே! இப்படியும் நேருமா! பணம் பாழாய்விட்டது ஒரு புறமிருக்க, அவமானமடைந்துவிட்டதை எவ்விதம் சகிப்பது' என்று நான் வருந்தியது கொஞ்சமன்று. என்னை யான் சமாளித்துக் கொண்டு அந்த மனிதன் சென்ற திக்கில் ஓடினேன். வீட்டை விட்டு அவன் எவ்விதம் சென்ருன் என்பது எனக்கு விளங்கவில்லை. கூச்சலிட்டுக் கத்தவோ அவமானம் பாதிக்கின்றது. வீடுமுற்றும் பார்த்ததில் என் தாய்தந்தையரைத் தவிர வேறு யாரையும் காணவில்லை. வந்த விருந்தினரெல்லாம் வீடு சென்றுவிட்டார்கள்,

எங்களுடைய சத்ருக்களும் மறைந்துவிட்டார்கள். நான் எனது பெற்றோரை நித்திரையினின்றும் எழுப்பி இந்த அனியாயமான சம்பவத்தைக் கூறினேன். இதைக் கேட்டதே என் தாயார் “ஆ! ஐயோ! வயிற்றெரிச்சலே!” என்ற வார்த்தைகளைக் கூறினாள். அப்போதே அவளுடைய மூளை சுழன்று கைகால்கள் விழுந்துபோய், வாயும் இழுத்துக்கொண்டன. உடனே அவள் சடாரென்று விழுந்துவிட்டாள். என் தந்தை ப்ரேமைகொண்டு நின்றுவிட்டார். “நிரம்ப சொத்துடன் பெண் வரப்போவதாக எண்ணிக்கையிலிருந்த பணத்தையும் செலவு செய்துவிட்டு, தீராத துயரத்தையும், மாறாத அவமானத்தையும் அடைந்துவிட்டோமே; ஐயோ! நமது சத்ருக்களே மித்ரர்போலவிருந்து இவ்விதம் நம்மைப் பாழாக்கியிருக்கிறார்கள். ஆ! ஆதிமுதல் நம்மை வேண்டுமென்றே வீணை விரோதத்தில் சிக்கவைத்து நம்மைப் பகைத்துப் பாழாக்கியதுமன்றி இப்போதும் இவ்விதம் செய்துவிட்டார்களே! ஐயோ! இந்த வெட்கக்கேட்டை யாரிடம் கூறிக்கொள்வது? ஒரு காலத்தில் பகைவராயிருந்து நம்மைச் சித்திரவதை செய்து உயிருக்கு ஆனி தேடிய பாபிகள் எல்லாவற்றையும் மறந்துவிட்ட மித்திரர்போல நடித்தாலும் தமது தீய குணத்தின் திமிர் மாறாது வயிற்றுக்குள்ளடக்கிக்கொண்டிருந்து இவ்விதம்தான் பகைமை காட்டுவார் என்பதை அனுபவபூர்வமாய்க் கண்டுவிட்டோமே; ஆகா! திருக்குறளிலுள்ள

> தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
> ரழுதகண் ணீரு மனைத்து

என்ற பாடல் நினைவிற்கு வருகின்றதே! என் செய்வேன்? நாளை உதயத்திற்குக் கல்யாணம் விசாரிக்க வரும் நேயர்களுக்கு நாம் என்ன பதிலளிப்பது? ஐயோ! காலக்கொடுமையே! பணத்தையுமிழந்து, மானத்தையும் துறந்து கஷ்டநஷ்டத்திற்கும் ஆளாகி இவ்விதம் வருத்தமுறவோ விதி மூண்டது? இன்னமும் அச்சத்ருக்களை நாம் தொடர்ந்து தேடுவதென்றால் நமக்கு மற்றுமோர் பெருத்த விபரீதமான ஆபத்துத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றது என்பதை நமது அனுபவமே கூறுகின்றதே! மேலும் நாம் பட்ட அவமானத்தைச் சகலரும் அறிந்து பரிகஸிக்க நேருமே!

என்ன செய்வேன்?" என்று கலங்கித் தவித்து அபாரமான சோகத்திலாழ்ந்துவிட்டார்.

இதையெல்லாம் கண்டும் கேட்டும் நிற்கும் என்னுள்ளத்தின் நிலைமையை என்னென்று கூறுவேன்? சிச்சீ! நம் பொருட்டாக வல்லவோ நமது பெற்றோருக்கு இத்தகைய அவமானமும், ஆபத்தும், கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டன! இந்த விசனத்தை நாம் எவ்விதம் மாற்றி அவர்களை களிப்பிக்கக் கூடும்? ஐயோ! உலகத்தில் பகை என்பது இவ்விதமும் தலை தூக்கி அலையுமா! ஒருவரை இம்சித்தோ, வதை செய்தோ, இளக்காரம் செய்தோ, அவமான முறச் செய்தோ, அலக்ஷ்யம் செய்தோ, ஆபத்தில் சிக்கச் செய்தோ, வேடிக்கை பார்க்கும் மனிதர்களுக்கு வரும் லாபமும், நன்மையும் தான் என்னே! ஐயோ! நமது தாயின் மனம் இச் சம்பவத்தின் அதிர்ச்சி தாங்காது சோகமுற்றதனால் அவர்கள் நிலைமை ஆபத்திற் கிடமாய்விட்டதே! இவ்வித சங்கடங்களெல்லாம் நமக்கு நேருமென்று சற்று முன்னாலும் தெரியவில்லையே! ஊழ்வினை என்பது இவ்விதம் தான் மறைந்து மறலிபோல் வேலை செய்துவிடுமோ! ஆகா! கருணை மூர்த்தியே! எங்களை இவ்விதம் பாழ்படுத்த உன் மனம் இசைந்ததா! எனது விவாகத்தின் மூலமாகவன்றோ இத்தகைய இடர்க்கடலில் மூழ்க நேரிட்டது. சிச்சீ! பாழும் விவாகம் எதற்காகச் செய்துகொள்ளவேண்டும்? என்றும் போலவிருந்தால் இத்தகைய ஆபத்திற்கு இலக்காகி வருந்தாதிருக்கலா மல்லவா! ஐயோ! என்ன செய்வது?" என்று எனது மனது தாமரை இலைத் தண்ணீராய்த் துடித்தது.

பிறகு என் தந்தை சற்று யோசனை செய்து ஓர் தீர்மானத்திற்கு வந்தார். அதாவது துஷ்டர்களின் சகவாஸம் கஷ்டம், நஷ்டம், பாபப்ரவேசம் என்பதை நாம் கண்கூடாகக் கண்டு விட்டோம். இனிமேல் நாம் ஐந்து நிமிடமும் இங்கு நிற்கலாகாது. அந்தச் சண்டாளர்களை நாம் கண்டுபிடிப்பதற்கு வழி எமனுலகில் சென்று கண்டுபிடித்தால் தான் ஏற்படும். மகா மோசக்காரப் பாவிகளாகிய அவர்களை நாம் இனியும் பிடிக்க எண்ணுவதானது நமது உயிரைப் பறிகொடுக்கத் தயாராக விருக்கவேண்டும்.

கண்ணியமாக வாழ்ந்த நாம் அவமான மடைந்துவிட்டதை யாவரு மறிந்து பரிகஸிக்க ஏதுவாய்விட்டது. ஆகையால் நமது பணமும் பகையும் ஒருங்கே தொலைந்து போகட்டும். நாம் உடனே இரவோடு இரவாய் அயலூருக்குச் சென்றுவிடுவோம். அவ்விதம் செய்தால் தான் இனித் தப்பலாம். நாம் அந்தப் பாதகர்களைப் பிடிப்பதென்றால் போலீஸ் உதவி யின்றிச் செய்வது சாத்திய மன்று. அவ்விதம் செய்ய முன் வரும் நமது உயிரை அவர்கள் எவ்விதத்திலேனும் வாங்கியே தீருவார்கள். ஆகையால் இனிமேலாவது துஷ்ட சகவாசம் செய்யாதிருக்கும்படி நமக்குக் கடவுள் மதி யளித்ததாக எண்ணிக்கொண்டு கிளம்புவோம்'' என்று தீர்மானித்து உடனே ஒரு வண்டி கொணர்ந்து என் தாயாரையும் சாமான்களையும் வண்டியில் போட்டுக்கொண்டு இரவோடு இரவாக வெளியூருக்குப் போய் விட்டோம். வெளியூருக்குச் சென்ற சில தினத்திற்குள் என் தாயார் இறந்துவிட்டாள். அந்த சண்டாளர்கள் கலியாணத்திற்காக சாமான்கள் கடனாக வாங்கிவிட்ட கடைக்காரன் என் தந்தையின் மீது வாரண்டு எடுத்துவிட்டான். அவ் விஷயம் ரகஸியமாக என் பிதாவுக்குத் தெரிந்தது. என் பிதா தனது கைப் பொருளையும் இழந்து, மெய் வருத்தமுற்று, மனைவியையும் இழந்து, பலவிதமான துன்பத்திலிருக்கும் நாளில் இந்த வாரண்டு விஷயத்தைக் கேட்டதும் தம்மை எவ்விதமும் வாரண்டில் போலீஸார் பிடித்துவிடுவாரென்றும் மோசக் கணக்கின்படி பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு சக்தி யில்லாமையால் தாம் வாரண்டில் பிடிபட்டுச் சிறைவாசம் செய்ய நேரிடுவது நிச்சயமென்றும் அவ்விதம் மான மிழந்து வாழ்வதைவிடப் பிராணனை விட்டு விடுவது மேலானது என்றும் கருதி அதனை ஓர் குறிப்பாக எழுதி எனது சட்டைப் பையில் வைத்துவிட்டுக் குளத்தில் விழுந்து உயிரை விட்டார். அவருடைய சவத்தைக் கண்ட பின்னர்—கடிதத்தைக் கண்ட பின்னரும்—என்னுயிர் தத்தளித்ததைக் கூறவேண்டுமோ! அடித்தேன்; தவித்தேன்; முட்டிக்கொண்டேன். மூளையே சிதறியது போலானேன். மூன்று தினம் குப்புறப் படுத்து அழுதவன் எழுந்திருக்கவில்லை. பின்னர் என் மனம் என்னை யறியாது மாறுதலை யடைந்து உலகத்தையே வெறுத்துவிட்டது. "சீ! இனி நாமும் உயிரை விட்டுவிட

வேண்டும். நம் பொருட்டாக நமது பெற்றோர் பலவித கஷ்டங்களை யும் அனுபவித்துக் கடைசியில் உயிரையும் துறந்துவிட்டபின்னர் நாம் எதற்காக மண்ணில் உயிர் வாழவேண்டும்?'' என்று உயிரை விடத் துணிந்துவிட்டேன். நஞ்சுண்டு உயிரைத் துறப்பது என்று தீர்மானித்து வீதி வழியோடு செல்கையில் ஓர் புராணீகர் தற் கொலை செய்துகொள்ளும் பாபத்தைப் பற்றி உபன்யாசம் செய்து கொண்டிருந்ததைச் செவியுற்றதும் என் மனம் பாபத்திற் கஞ்சிச் சற்றுப் பின்னடைந்தது. பிறகு அந்தத் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு ஓர் பண்டார ஸன்னிதியை அடைந்து எனக்குச் சிலபாடல் களை உபதேசிக்கும்படி வேண்டிக்கொண்டு அவரை ஆச்ரயித்து அவரிடம் சில பாடல்களைக் கற்றுக்கொண்டேன். ஊரூராய்த் திரிந்து பிச்சை எடுத்து அகப்பட்டால் உண்பது, இல்லையேல் பட்டினி கிடப்பது எனத் தீர்மானித்து காஷாயமும் தரித்துக் கொண்டு திரிந்து வருகிறேன். தாயே! எனது அக்ககரமான சரித்திரத்தைக் கேட்டுத் தாங்களெல்லோரும் வருந்தும் படிச் செய்த மாபாவி யானேன். உங்கள் சந்தோடத்தைக் குலைத்ததற்கு என்னை மன்னிக்கவும்.'' என்று கூறி முடித்தான்.

இச் சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டே யிருக்கையில் அங் குள்ள சகலருக்கும் வருத்தமும், பண்டாரத்தினிடத்தில் ப்ரியமும் தோன்றி அவர்கள் கண் கலங்கினர்கள். பிறகு தலைவி பண்டாரத்தை நோக்கி, "ஐயா! பண்டாரம்! உமது சரிதையைக் கேட்டு நாங்கள் வருத்த முறுவதற்குத் தாங்கள் வருந்துகின்றீர்! உமது மனோ நிலைமை அக்காலத்தில் எவ்விதம் தானிருக்கும் என் பதை எண்ணிச் சாத்தியப்படவில்லை. மகா உத்தமமான குணத்தை யுடைவர் தாங்கள் என்பதை தமது தரிசனம் காட்டு கின்றது. ஐயா! தாங்கள் உயர்தரமான பி. எ. பட்டத்தைப் பெற்றுவிட்டு வீணுக வெறுப்புற்று ஏன் இவ்விதம் பட்டினியாய்ப் பரிதபிக்கவேண்டும். இது பரியந்தம் அனுபவித்ததெல்லாம் போதும். இனியாவது உமது கல்வியை வீணுக்காது பயன் படுத்த லாகாதா! பூர்வ கர்மானுசாரம் இத்தகைய அனுபவங்கள் நேர்ந்தன. இனிமேல் அவற்றை மறந்து தாங்கள் ஓர் தொழிலில் அமர்வதற்கு

ஏதேனும் யோசனை யுண்டா! எங்களுடைய ஆசிரமத்தின் கிளை ஆசிரமம் ஒன்று அநாதைகளாயுள்ள ஆண் பிள்ளைகளை ஆதரிப்பதற்காக ஏற்பட்டுள்ளது, அந்த ஆசிரமத்தில் போதகராகத் தாங்கள் ஒப்புக்கொண்டால் அதற்கான ஏற்பாடுகளை யான் செய்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று மிகுந்த ப்ரீதியுடன் கேட்டாள்.

இது கேட்ட பண்டாரம் சற்று யோசித்துப் பின்னர், "தாயே! ஓர் தொழிலில் அமர்ந்தால் விலகி யிருக்கும் உலகப் பற்று பாசி போல வந்துப் படர்ந்து பாதிக்குமே! என் செய்வேன்? அதற்காகவே யான் வெறுத்துவிட்டேன்—என்றான்.

தலைவி:—ஐயா! உமது மன விரக்தியினால் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு அலைந்தது போதாதா! இனியேனும் உமது காலத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு ஏன் பின்னடைய வேண்டும்? உமக்கு விவாகம் செய்துகொள்ளப் பிரிய மிருப்பின் செய்துகொள்ளும். இல்லையேல் உமது கல்வியை வீணாக்காது பிறருக்கு உதவி புரிந்து சிறுவர்களை முன்னேற்ற மடையும்படிச் செய்தல் கூடாதா! நன்றாக யோசித்துக் கூறும்.

பண்டாரம்:—அம்மணி! ஏற்கெனவே யான் தெரிவித்த காரணத்தையே மீண்டும் கூறுகின்றேன். அதை யோசித்தால் என் மனம் உலகத்தையே வெறுக்கின்றது. இவ்விதம் ஏகாங்கியாய்த் திரிந்து என் காலத்தைக் கழிப்பது வெகு மேன்மையென்று தோன்றுகின்றது. பாழும் மன மிருக்கின்றதே அது மகா கொடியது. மனத்தை ஒரு நிலையில் நிறுத்துவதென்றால் அது சாத்தியமானதே யல்ல. எனது மனம் முற்றிலும் முறிந்து போய் உலகப் பற்றில் நாட்டமே யின்றி ஒருவிதமான நிதானத்தில் வந்துவிட்டது. இம் மனத்தை இம்மட்டுடன் இவ் வழியிலேயே செலுத்தவேண்டுமென்பதே எனது எண்ணம். ஓர் தொழிலில் அமர்ந்தால் உலக பந்தங்களில் மனம் செல்லத் துவக்கும். பிறகு சம்சார சாகரத்தில் யானும் நுழையவேண்டுவது தான் கதி. தங்களுடைய யோசனை என்னவோ மிகவும் உத்தமமானதாயினும் என் மனம் இலகுவில் சம்மதிக்கவில்லை. ஆகையால் யான் சற்று

நிதானித்து யோசனை செய்துப் பிறகு வந்து தெரிவிக்கின்றேன். என்னை மன்னிக்கவும். நான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்"— என்று கூறிக்கொண்டே எழுந்திருக்க முயன்றான்.

இதற்குள் அங்கு கூடியிருந்த சிறுமிகள் தலைவியை நோக்கி "அம்மா! பண்டாரமவர்களைச் சற்று பாடும்படிச்செய்து கேட்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள். தலைவி இதற்கு இசைந்து பண்டாரத்தைநோக்கி "ஐயா! உமது சங்கீதத்தைக் கேட்க இங்குள்ள ஏனையோரும் அவாக் கொண்டுளோம். தயவு செய்து சிறிது நேரம் பாடிவிட்டுச் செல்லவேண்டும்." என்றாள். பண்டாரம் அதற்குச் சம்மதித்துப் பாடத் தொடங்கினான்.

ப்யாகடா ராகம்

அகில வின்பமதிலோர் அணுவேனும் நினையாத
அகவுறுதி அளித்தருளுவாய்
அகமதில் அகங்கார மமகாரமெனும் கொடிய
அரக்கனை யழித்து நாயேன்
சகலமும் உன் சரணமெனவே நினைத்துனது
சத்ஸேவை செய்ய வருளாய்
இகபர மிரண்டிலும் ஏழை யெனைக் கைவிடா
திட்டமுடனே புரப்பாய்.

என்ற பாடலை வெகு இனிமையாகப் பாடி முடித்துப் பின் "அம்மணி! நெடுநேரமாய்விட்டது. என் பொருட்டாகத் தமக்குண்டான சிரமத்திற்கு மன்னிக்கவும். ஏழையின் குட்சி குளிர்ந்தது; இதை என்றும் மறவேன். தாயே! தமக்கெல்லோருக்கும் இப் பாவியால் நித்திரை பங்க மேற்படுகின்றது. யான் சென்று வருகின்றேன். உத்தர வளிக்கவேண்டும்" என்று கூறியவாறு எழுந்தான். தலைவி பண்டாரத்திற்கு உத்தரவளித்துப் பின் "ஐயா! உமது தீர்மானத்தை எப்போது தெரிவிக்கின்றீர்கள்?" என்றாள்.

இது கேட்ட பண்டாரம் நாளைய தினம் வருவதாகக் கூறிவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் பாடிக்கொண்டே போய்விட்டான். அதன் பின்னர் எல்லோரும் சென்று சயனித்துக்கொண்டார்கள். அம்புஜம், பங்கஜம், வனஜவல்லி, லக்ஷ்மி

ஆகிய நால்வரும் வெகு நேரம் வரையில் பண்டாரத்தின் சரித்திர விஷயத்தையும், அவனுடைய பாடலின் இனிமையையும், குணத்தின் விசேஷத்தையும், மன உறுதியின் மாண்பையும், விரக்தியின் விநோதத்தையும் இன்னும் மற்ற அம்சங்களையும் ஒருவருக்கொருவர் கூறி வியப்புற்று நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து பின்னர் துயிலில் ஆழ்ந்தார்கள்.

பொழுதும் புலர்ந்தது. எல்லோரும் எழுந்து தம் தம் அலுவல்களைக் கவனிக்கலானார்கள். அன்று மீண்டும் பண்டாரம் வந்தால் பாடல் கேட்கலாம் என்கிற பேரவாக் கொண்ட சிறுமிகளெல்லோரும் அன்று பண்டாரம் வரும் வேளையை எதிர் நோக்கிக் கொண்டே இருந்தார்கள். அன்று மாலை விளக்கு வைத்ததும் பண்டாரம் கீழ்வருமாறு பாடலைப் பாடிக்கொண்டே வந்தான்.

ராகம்: கானடா.

(1) இருளையகற்றும்—திருவிளக்கே!
இன்பமளிக்கும்—திருவிளக்கே!

(2) மங்களகாமாம்—திருவிளக்கே!
எங்கும் ஒளிரும்—திருவிளக்கே!

(3) திருமகள் உருவாம்—திருவிளக்கே!
பெருமை பயக்கும்—திருவிளக்கே!

(4) தெள்ளிய ஜோதித்—திருவிளக்கே!
கள்ளனுக்கெமனும்—திருவிளக்கே!

(5) மாலையிலுலவும்—திருவிளக்கே!
ஆலய பூஷணத்—திருவிளக்கே!

(6) சகலரும் போற்றும்—திருவிளக்கே!
சதஸலங்காரத்—திருவிளக்கே!

(7) பாலர்க்கினிக்கும்—திருவிளக்கே!
ஞாலமுவக்கும்—திருவிளக்கே!

(8) பூஜைபெற்றிலகும்—திருவிளக்கே!
ராஜரும்பணியும்—திருவிளக்கே!

(9) தேஜோமயமாம்—திருவிளக்கே!
திருவருள்பெற்றத்—திருவிளக்கே!

(10) இந்துவைப்போன்ற—திருவிளக்கே!
வந்தனம் செய்தேன்—திருவிளக்கே!

(11) அந்தமுற்றோங்கும்—திருவிளக்கே!
எந்தனுக்கருள்வாய்—திருவிளக்கே!

என்று கானடா ராகத்தை இசைத்து வெகு நேர்த்தியாய்ப் பாடிக்கொண்டே ஆசிரமத்தின் வாயிலில் வந்து நின்றான். பண்டாரத்தின் பாடலின் ஒலி கேட்டவுடனே தலைவியுட்பட எல்லோரும் நடைப்பக்கம் வந்து நின்றுகொண்டு பாடலை வெகு ஆநந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திருவிளக்கு ஏற்றும் நேரத்திற்குத் தகுந்தாற்போல திருவிளக்கின் மகிமையைப்பற்றி அழகாய்ப்பாடுவதைக்கேட்டு எல்லோருடைய மனமும் விகசிதமுற்றது. "ஆகா! என்ன பக்தி! என்ன வைராக்கியம்!" என்று அவர்கள் தமக்குள்ளாகவே கூறிக்கொள்கிறார்கள். பண்டாரம் திருவிளக்கு மகிமையைப்பாடி முடித்துவிட்டுக் கைகட்டியவண்ணம் "அம்மணி! பண்டாரம் வந்திருக்கின்றேன்; பரதேசி வந்திருக்கின்றேன். ஆசிரமத் தலைவியே! அன்னமளித்த தாயே!" என்று கூவி யழைத்தான்.

உடனே தலைவி நகைத்த முகத்துடன் வீதியில் வந்து "ஐயா! பண்டாரம்! இதோ வந்துவிட்டேன். உள்ளே வாருங்கள். உமது திருவிளக்கு மகிமை பாடலால் எமது இரு செவிகளுக்கும் விருந்து அளித்தீர்கள். ஆகா! உமது சாரீரத்தின் சுகத்தை மெச்சிக்கூறுவதா! அன்றிப் பாடும் திறமையைப் போற்றி யுரைப்பதா! நிற்க பாடலின் அருமையைப் பாராட்டிப் புகல்வதா! ஒன்றும் தெரியவில்லை. பஞ்சாமிர்தம்போன்ற உமது பாடல் கேட்கக் கேட்கத் தெவிட்டுவதாகக் காணவில்லை. நாங்கள் செய்த பூர்வ புண்ணியமே தாங்கள் எமது ஆசிரமத்திற்கு எழுந்தருளி பாடலால் எம்மை மகிழ்வித்துவருவதற்குக் காரணமென்று கருதுகிறோம். எங்களுடைய ஆசிரமத்தில் தாங்கள் தொழில்புரிந்து வந்தால் எங்களுடைய செவி செய்தபாக்கியத்தைச் செப்புதற்கரிதெனலாம். "கீதார்த்தமு சங்கீதாநந்தமு. நீ தாவுனஜூடரா ஓமனஸா!" என்று ஸ்ரீ சற்குரு த்யாகராஜர் அருளிச்செய்திருப்பதுபோல சங்கீதத்திலுள்ள ஆநந்தமும் மகிமையும் அளவிட்டுக்கூறப்போமோ! அதனுடைய மகிமை அதற்

கேதான் பொருந்தும். அதற்குவமை மற்றெதுவும் கூறற்பாலதாம், "ராகஸுதாரஸ பானமுஜேஸி ரஞ்ஜில்லவே மனஸா!" என்று ஐயரவாள் தெரிவித்திருப்பது பொய்க்குமா! சங்கீதத்தின் மகிமை ஒன்றிரண்டானல் கூறலாம். சங்கீதத்தைப் பாடும் எவர்க்கும் கடவுளின் அருள் பெருகுவது திண்ணம். சங்கீதம் என்பதானது பகவன்னுமத்தையும் பகவத் விஷயங்களையும் தன்னகத்தே பூரணமாய்க்கொண்டிருக்கும் ரஸம் நிறைந்த கனிபோன்றதல்லவா! தன்னுடைய நாமத்தை பஜிக்கும் எந்த பக்தனுக்கும் தான் முக்தியளிப்பதாக அந்த கீதாசாரியன் கூறவில்லையா! அவனுடைய நாமமே நிறைந்த பாடலைச் சதா பாடும் உமக்கு இனி மறு ஜன்மமும் கிடையாதென்றே நான் கூறுவேன். இத்தகைய உமது அருமையான பாடலைச் சதா கேட்கும்படியான புண்ணியமேனும் எமக்குக் கிடைக்குமாயின் நாங்கள் மெத்த க்ருதார்த்தமடைவோம். ஐயா பண்டாரம்! உம்முடைய தீர்மானம் காயா, பழமா! அதையறிய மிகவும் ஆவலாகவிருக்கின்றேன்; தயவு செய்து கூறும்." என்று மிகுந்த அன்புடன் கேட்டாள்.

இது கேட்ட பண்டாரம் நிரம்பவும் நாணமுற்று நகைத்துக் கொண்டே "அம்மா! கேவலம் அல்பனுயும், பாபியாயுமுள்ள அடியேனைப் புகழ்வதானது எனக்கு மிகவும் வெட்கமாகவிருக்கின்றது. பகவன்னுமத்தைச் சதா ஜெபித்துக்கொண்டு அவனடிக்குப் பாத்திரமாகிவிட்டால் போதும். அதைத்தான் யான் கோருவது. அதையே சதா பாடிவருகிறேன். அம்மணீ! நான் நேற்றிரவு முற்றும் யோசித்தும் என் மனத்திற்கு ஒன்றும் உறுதிகொள்ளவில்லை. குழப்பத்தையே அடைந்தேன். எனது நன்மைக்காகவோ, தீமைக்காகவோ! வருங்காலப்பயனை யாருமறிந்திலம். இன்று நான் கனவிலும் கருதாத விதமாக எனக்கு முதலில் பாடல்களைக் கற்றுக் கொடுத்த பண்டார ஸன்னிதிகளைக் கண்டு தரிசித்து எனது வர்த்தமானங்களையெல்லாம் கூறி, தாங்கள் தெரிவித்த விஷயத்தையும் கூறினேன். அந்த மகானுபாவன் அதைச் செவியுற்றுப் பின்னர் "அப்பா! உனது மனம் நீ அடைந்த அவமானத்திலுைம், கஷ்டங்களினுலும், விசனத்தினுலும் விரக்தியடைந்துவிட்டது. எனினும்

நீ பூர்ண விரக்தியடைந்து துறவியாவதற்குப் பக்குவம் இவ்விதமே கிடைத்துவிடாது. உலகானுபவங்களிலும் சிறிது பட்டுத்தேறிய பின்னரே முற்றுந் துறந்த துறவியாவதற்குப் பக்குவப்படுவாய்: ஆகையால் முதலில் நீ உனது கலையைப் பாழ்படுத்தாது அநாதைச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்துப் புண்ணியத்தைப் பெறு. மறுமுறை யான் உன்னைக்காணும்போது உபதேசிக்கின்றேன்.'' என்று கூறிச்சென்றார்.

எனது குருவுக்குச் சமதையான பண்டார ஸன்னிதிகள் கூறிய வாக்கை நான் தேவ வாக்காகக்கொண்டேன். பின்னர் என் மனத்தைத் திடமுறச்செய்துகொண்டு இவ்வண் போந்தேன். தாயே! தமது இஷ்டம்போல அத்தொழிலை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.'' என்றான். இந்த வாக்கியத்திற்கே எதிர் பார்த்துக்கொண்டிருந்த தலைவியம்மாள் அளவிலா ஆநந்தத்தையடைந்து பூரித்துப் பண்டாரத்தை நோக்கி "ஐயா! பண்டாரம்! மெத்த சந்தோஷமடைந்தேன். தங்களுடைய பாடலை அடிக்கடி கேட்கும் பேறுபெற்றேன். நாளைக்காலையில் தம்மை அவ்வாசிரமத்திற்கு அழைத்துச் செல்கிறேன். தாங்கள் இவ்விடத்திலேயே இன்றும் போஜனம் செய்யவேண்டும்'' என்று நிரம்பவும் விசுவாசத்துடன் சொன்னாள். பண்டாரம் அதற்கு இசைந்து தான் வீதியில் உட்கார்ந்திருப்பதாகத் தெரிவித்துவிட்டு வீதிக்குச்சென்று உட்கார்ந்து தன்போக்காகப் பாடிக்கொண்டிருந்தான். தலைவியும் மற்ற எல்லோரும் போஜனம் செய்த பின்னர் வீதியிலிருந்த பண்டாரத்தை அழைத்து அன்புடன் அன்னமிட்டு உபசரித்தாள். பண்டாரமும் போஜனஞ்செய்துவிட்டு நாளைக்காலையில் வருவதாகக் கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான்.

மறுதினம் காலையில் பண்டாரத்தின் வருகையைத் தலைவி வெகு கவனத்துடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். பண்டாரம் நீராடி, நீறணிந்து, சீரான காஷாயம் இடையில் தரித்துக்கொண்டு, ஈராறு கரமுடையவனின் நாமத்தையும், பேராயிரம் படைத்த பெருமானின் நாமத்தையும் ஓதியவாறு ஆசிரமத்தையடைந்தான். அவன் வருகையால் மகிழ்ச்சியடைந்த தலைவி அவனை யழைத்துக்கொண்டு

ஆண்பாலர்கள் படிக்கும் ஆசிரமத்திற்குச் சென்று அங்குள்ள தலைவரிடம் இவனுடைய குணாதிசயங்களை எடுத்துக்கூறி உபாத்தி மைத் தொழிலளிக்கும்படியாகச் சிபார்சு செய்து அவனை உபாத்தி யாயராய் நியமித்துவிட்டு, பண்டாரத்தை நோக்கி "ஐயா! உம் முடைய வாசஸ்தானம், போஜனம் முதலிய யாவற்றையும் இவ்வா சிரமத்திலேயே வைத்துக்கொள்ளலாம்; வித்தியாசமாக எண்ணாது உமது சொந்த வீடுபோலப் பாவித்து உமது சகல சௌகரியங்களை யும் இவ்விடத்திலேயே வைத்துக்கொள்ளும். தினமொருமுறை எனக்குச் சங்கீத விருந்தளித்தால் போதும். அதற்காகக் கேட்டுக் கொள்கிறேன்." என்று கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு தனது ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தாள்.

பண்டாரம் தான் ஓர் தொழிலில் அமர்ந்திருந்தபோதும் தனது பாடல்களைப் பாடுவதையும், ஜபதப அனுஷ்டானங்களையும் சிறி தும் மறக்காது செய்துகொண்டே வருகிறான். ஆசிரமத்திலுள்ள இன்னும் மற்ற உபாத்தியாயர்களிடம் நல்ல பெயரெடுத்துக் கொண்டு எல்லோருக்கும் வெகு ப்ரீதியுடன் விளங்கலானான். தினந் தோறும் மாலை நேரத்தில் தலைவியின் ஆசிரமத்திற்கு வந்து தனக் குத் தெரிந்த பாடல்களைப் பாடிவிட்டுச் சென்றுகொண்டிருந்தான். இவ்விதமே சில நாட்கள் சென்றன. வழக்கம்போல பண்டாரம் குளிப்பதற்காக ஆற்றிற்குச் சென்றான். சென்று வெகு வெகு நேரமாயும் பண்டாரத்தைத் திரும்பக்காணவில்லை. அங்குள்ள எல்லோருக்கும் கவலையதிகரித்தது. ஆற்றிற்குச் சென்றவன் திரும்பி வாராமையால் பல்வேறு யோசனைகளுண்டாகிக் குழம்பிய வாறு தலைவியிடம் வந்து செய்தியைக் கூறினார்கள். இதுகேட்ட தலைவி யுட்பட எல்லோரும் திடுக்கிட்டு "ஆ! ஆற்றிற்குச் சென்ற வரையா காணவில்லை! ஐயோ! நல்ல சத்பாத்திரமாயிற்றே! எல்லோரும் ஆற்றிற்குச் சென்று பாருங்கள்" என்று கூறினாள். உடனே ஆசிரமத்தின் மற்றைய உபாத்தியாயர்கள் ஆற்றங்கரை யைத் தேடியோடினார்கள். அவர்களுக்குக் கடவுள் கருணை புரிவாராக.

—

15—வது அதிகாரம்.

அன்பாரணங்கின் அற்புத குணங்கள்

துயரக்கடலில் மூழ்கித்தவிக்கும் நவநீதத்தின் நிலைமையைக் கூறவேண்டுமா! தன் கணவனைக் காணாது நெருப்பின்மீது புழு வெனத் துடிக்கின்றாள். "ஒருவிதமான தகவலும் இன்னும் தெரிய வில்லையே! என்ன செய்வேன்?" என்று தத்தளிக்கின்றாள். அன்னாகாரமின்றி மெலிந்து துரும்பிலும் துரும்பாக ஆய்விட்டாள். அவளுடைய மனத்துடிப்பில் இன்னதுதான் செய்வதென்பதை யறியாது விழிக்கின்றாள். தன் கணவன் சென்ற ஊரின் போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் கொடுக்கும்படி யோர் தந்தி யடித்தாள். பதில் கிடைக்கவில்லை. நாட்களோ சென்றுகொண்டே இருக்கின் றன. என்ன செய்வாள் பாவம்! சிதம்பரமும், தயாகந்தரும் தம்மா லானவரையில் அலைந்து விசாரித்தும் எல்லாவிஷயங்களும் வெகு மர்மமாகவே இருக்கின்றனவே யன்றி யொன்றும் விளங்கவில்லை. சிதம்பரம் தன்னால் கூடியமட்டில் நவநீதத்தைத் தேற்றியும் அவ ளுடைய மனம் நிம்மதியாகவில்லை. சிதம்பரம் தான் நேரில் சென்று அவ்வூரில் விசாரித்துக்கொண்டு வருவதாகக் கூறிப் பிர யாணமானன்.

தன் தந்தையை அனுப்பிய நவநீதத்திற்கு இன்னுமதிகமான கவலையுண்டாய்விட்டது. நல்ல செய்தியுடன் தன் தந்தை வந்து சேரவேண்டுமே! என்ன செய்தி செவிக்கு எட்டுமோ! ஒன்றும் தெரியவில்லையே! ஏ கருணா மூர்த்தியே! என்னால் கூடியமட்டில் யான் கவலையே கொள்ளக்கூடாதென்று எண்ணியும் பாழும் மனம் பரிதபிக்கின்றதே! உனது பாதமே கதி என்று சகல சுக துக்கங்களையும் உனது திருவடிக்கே அர்ப்பணம் செய்துவிட்டு நான் நிம்மதியாயிருக்க முயற்சித்திருந்தும்—பாசிபோலக் கவலை வந்து சூழ்ந்துகொண்டு என்னை வருத்துகின்றதே! என்ன செய்வேன்? என் கவலையைப்போக்கி எனது கணவரிடம் என்னைச் சேர்ப்பிக்க

மாட்டாயா? அன்னவரே எனது உயிர் நிலையாயிற்றே! அத்தகைய உயிரைப் பிரித்துவிட்டால் உடல் எவ்விதம் மண்மீதிருத்தல் கூடும்? என்னப்பனே! சர்வேசா!'' என்று துதித்து வேண்டிக்கொண்டு தன் தந்தை திரும்பிவரும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தாள். அன்று செல்ல மறுதினமும் சென்று மூன்றுவது தினம் ஓர் கடிதம் வந்தது. தனது தந்தை திரும்பிவராது கடிதம் மட்டும் வந்திருப்பதைக் கண்டு நடுக்கமுற்ற நவநீதம் வெகு ஆவலுடன் அக்கடிதத்தை உடைத்துத் தன் தாய் கேட்கும்படியாக உரக்கப் படிக்கலானுள். அது பின்வருமாறு:—

சௌபாக்யவதி நவநீதம்மாளுக்கு ஸர்வாபீஷ்டமுண்டாவதாக—

என் செல்வி! நான் நேற்றுக்காலையில் போலீஸ் ஸ்டேஷனையடைந்து மாப்பிள்ளையின் தகவலை விசாரித்தேன். அவர் இவ்விடம் ஓர் முக்கியமான கொலைக்கேஸ் விஷயமாக அழைக்கப்பட்டதாகவும், அவர் வந்ததும் அதுவிஷயமான தகவல்களைக் கண்டுபிடித்ததாயும், கொலைபாதகனைப் பிடிக்கவேண்டி குதிரையின்பேரில் சென்றதாயும், பிறகு திரும்பி வாராமையால் போலீஸ் வீரர்கள் சென்று தேடியதில் ஊருக்கு வெளியிலுள்ள காட்டில் ஓர் மரத்தடியில் குதிரைமட்டும் கட்டப்பட்டிருந்ததாயும், மாப்பிள்ளையைக் காணவில்லை என்றும், சென்றவிடமும் தெரியவில்லை என்றும், அவர்கள் இச்செய்தியை ஏதோ காரணத்தினுல் வெளியிடவில்லை என்றும், உனக்குமட்டும் இன்று தெரிவிப்பதாக எண்ணி இருந்ததாயும், மாப்பிள்ளையைக் கண்டுபிடிப்பதற்காக எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாயும் தாங்கள் எவ்விதத்திலேனும் கண்டுபிடித்துவிடுவதாயும் தெரிவித்தார்கள். இச்செய்தியைக் கேட்டதும் என்னுயிரே என்னைவிட்டு நீங்கியதுபோலாயிற்று. மேலும் ஏதேனும் விசாரிப்போமென்றுல் அவர்கள் சரியானபடி பதில் பேசாது சீறி விழுகின்றுர்கள். எனக்கு என்ன

செய்வதென்று தோன்றாது தவித்தேன். அங்கு போலீஸ் ஸ்டேஷனில் தோட்டவேலை செய்யும் கிழவன் என்னுடைய விசனத்தைக்கண்டு பரிதாபமடைந்து "ஐயா! எஜமானுக்கு ஒருவிதமான குறைவும் நேர்ந்திருக்காது. அவர் ஏதோ காரணார்த்தமாய் மறைந்திருக்கின்றார் என்று எனக்குத் தோன்றுகின்றது. இருப்பினும் நீங்கள் ஒன்று செய்யலாம். அதாவது திருக்கழுக்குன்றத்தின் மலையடிவாரத்தில் ஓர் மகானுபாவன்—முற்றும் துறந்த முனிவன்—பரதேசி சன்னியாசி—ஒருவர் இப்போது புதிதாய் ஒருமாத காலமாய் வந்திருக்கிறார். அவர் ஜோஸியத்தில் மகா நிபுணர். அவரிடம் லக்ஷக் கணக்கில் ஜனங்கள் சென்று ஜோஸியம் கேட்கிறார்கள். தாங்களும் அங்கு சென்று விசாரித்துக்கொண்டு வாருங்கள்," என்று கூறினான். நான் இன்றே திருக்கழுக்குன்றத்திற்குச் செல்கிறேன். நீயும், உன் தாயாரும், உன் பாட்டனாரின் உதவியைக்கொண்டு திருக்கழுக்குன்றத்திற்கு உடனே புறப்பட்டுவந்து சேரவும். ஜோஸியமும் கேட்டுக்கொண்டு சுவாமி தரிசனமும் செய்துவிட்டுப் போகலாம். உடனே வரவும்.

இப்படிக்கு உனது தந்தை

சிதம்பரம்.

அதைப் படித்த நவநீதம் மூர்ச்சித்தாள். பின்னர் அவளது தாய் அவளைத் தெளியவைத்தாள். "ஆ! கருணையங்கடவுளே! இவ்விதம் சோதிக்கவேண்டுமோ! குதிரையோடு சென்ற என் ப்ராணநாதர் எவ்விதம் திடீரென்று மறைந்திருக்கக்கூடும்? ஒரு சமயம் முன்னர் பிடிபட்ட கள்ளர்கள் யாரேனும் தப்பித்துக்கொண்டு சென்று என் கணவருக்கு ஏதேனும் தீங்கிழைத்திருப்பார்களோ! ஐயோ! என்ன செய்வேன்? எனது மனம் தவிக்கின்றதே!" என்று வருத்தமுற்றவாறு தன் பாட்டனாரை நோக்கி "தாதா! இப்பொழுதே கிளம்புவோம். புறப்படுங்கள்" என்றாள். உடனே

தயாநந்தர் ப்ரயாணமானார். ஏமாவதி, நவநீதம், தயாநந்தர் ஆகிய மூவரும் புறப்பட்டுத் திருக்கழிக்குன்றம் வந்து சேர்ந்தார்கள்.

சிதம்பரம் ரயிலடியில் வந்து காத்திருந்து இவர்களை அழைத்துச்சென்றான். அப்போது காலம் அஸ்தமனமாகும் சமயமாய் விட்டதால் மலையடிவாரத்திலுள்ள சாமியாரைப் பார்ப்பதற்கு உடனே சென்றார்கள். அங்கு நிறைந்துகிடந்த கும்பலைக் கணக்கிட்டுக்கூறச் சாத்தியமன்று. சாமியாரின் தரிசனம் கிடைப்பது வெகு துர்லபமாய்விட்டது. இரவு 8 மணி வரையில் காத்துக் கொண்டிருந்தும் கும்பல் கலைகின்ற வழியில்லாமையால் இவர்கள் விடியுமுன்னர் வந்து காணலாம் என்று தீர்மானித்துக்கொண்டு நேரே கோயிலை யடைந்தார்கள். ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு வேண்டிக்கொண்டார்கள். பிறகு கோயிலின் பக்கத்திலுள்ள ஓர் சத்திரத்தில் அன்றிரவு தங்கி நித்திரை கொள்ளாது தவித்துப் பின்னர், விடியுமுன்னர் எழுந்து மலையடிவாரத்திற்கு வந்து விசாரிக்கையில் சாமியாரை யாரோ ஓர் ஜெமீந்தார் இரவு 10 மணிவரையில் காத்திருந்து வண்டியில் ஏற்றித் தமது சொந்த அலுவலின் நிமித்தம் அழைத்துச்சென்றிருக்கிறார். எப்போது வருவாரோ தெரியாது —என்று தெரியவந்தது. இவ்வார்த்தையைக் கேட்டதே நவநீதத்திற்கு மனந்திடுக்கிட்டது. "ஐயோ! இதுவும் எனது அதிர்ஷ்டமா! நேற்றிரவே நாம் இவ்விடத்திலேயே தங்கியிருந்து சாமியாரைப் பார்த்துக் கேட்காது போய்விட்டோமே! அவர் இனி எப் போது வருவார் என்று எண்ணுவது? ஆகா! வேதகிரீசா! நீ இவ்விதம் பரீக்ஷிக்கவோ உன்னுடைய சன்னிதானத்திற்கு அழைத்துக்கொண்டாய். என்னப்பனே! எது எவ்வித மிருப்பினும் என் ப்ராணகாந்தருக்கு ஒருவிதமான ஆபத்தும் நேரா வண்ணம் ஆதரிப்பது உன் பாரம். அது ஒன்றுதான் யான் கேட்பது." என்று வருந்தித் துதித்துக்கொண்டே தன் தாயுடன் குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டுக் கோயிலுக்குச் சென்றாள். நவநீதமும் ஹேமாவதியும் கோயிலை முற்றும் சுற்றிப் பார்த்துக் கொண்டே வருகையில் கல்யாணி சடையும் காஷாயமும் தரித்துக் கொண்டு வெகு பக்தியுடன் கோயில் முற்றிலும் வெகு அழகான

கோலங்கள் போட்டுக்கொண்டே இருந்தாள். இந்த எழிலை இவ்விருவரும் வெகு வியப்புடன் பார்த்துக்கொண்டே சென்றார்கள். "ஆகா! எந்த புண்ணியவதியோ இந்தம்மாள்! பக்திமேலீட்டால் இவ்வித கைங்கரியம் செய்கிறாள். இவளைப் பார்த்தால் சுமங்கலிபோலத்தான் தோன்றுகின்றது. நெற்றியில் திருநீறும் குங்குமமும் அணிந்திருக்கிறாள். தலையில் சடையும் இடையில் காஷாயமும் தரித்துத் துறவியாய்விட்டாள் போலிருக்கிறது!" என்று ஏமாவதியும் நவநீதமும் ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டே செல்கிறார்கள்.

நமது கல்யாணியோ எதையும் கண் நிமிர்ந்து பாராமலும் கவனியாமலும் தலைகுனிந்து கண்களில் நீர் சொரிந்து வண்ணம்.—

வேதகிரீ சாவுன் பாதமே கதி என்று வேண்டி நின்றேன் ஐயா
எழுந்திராய்
ஆதவரவற்ற அநாதையைக் காத்திட அர அரசம் போ எழுந்திராய்
பாபி எந்தன் மீது கோபியாமல் உந்தன் பாதம் தந்திட நீ எழுந்திராய்
ஆபத்தில் காத்திட ஆதி மூர்த்தியே புன்னன்பை யளித்திட நீ
எழுந்திராய்.

என்ற உதயராகத்தைப் பாடிக்கொண்டே கோயில் முற்றும் வித விதமாயும், எழில் நிறைந்ததுமான கோலங்களைப் போட்டுவிட்டுத் தன்னுடைய குடிசைக்குள் நுழைந்து ஓர் குடலையை எடுத்துக் கொண்டு தான் வைத்துப் பயிராக்கி யிருக்கும் நந்தவனத்துள் சென்று பாடிக்கொண்டே புஷ்பங்களைப் பறிக்கலானாள்.

இதைக் கண்ட நவநீதம் "ஆகா! இந்தப் புஷ்பவனமும் இந்தம்மாளுடையதே போல விருக்கின்றது. எத்தனை அழகிய புஷ்ப தினுசுகள் புஷ்பித்திருக்கின்றன. உம்; இதுவும் பாக்கியம் செய்துள்ளவர்களுக்குத் தான் கிடைக்கும். அம்மா! நாமும் சென்று பறித்துவிட்டு வரலாம் வா!" என்று தன் தாயுடன் கூறிவிட்டு நந்தவனத்தின் வெளியிலேயே நின்றுகொண்டு கல்யாணியை நோக்கி, "அம்மணீ! தெய்வத்தொண்டு செய்யும் புண்ணியவதியே! இம் மலர்களை மகா பாபிகளாகிய நாங்களும் தொட்டுக் கொய்ய

லாகுமா? அது ஈச்வரனுக்கு உகப்பாக விருக்குமா? அன்றி வெறுப்பாகுமா!" என்று வெகு மரியாதையாயும், பக்திப் பெருக் குடனும் கேட்டாள்.

தன்னை மறந்து மலர் கொய்துகொண்டிருக்கும் கல்யாணி இக் குரலைக்கேட்டுத் திரும்பிப்பார்த்து விசனித்த பார்வையுடன் பேசத் தொடங்கி "ஆகா! இவ் வகிலத்தில் இவ் வடியாளைப் போன்ற பாபி களிலும் கொடும் பாபி எங்கேனும் தேடி எடுத்தாலும் அகப்படுவது அரிதாயிற்றே! அங்ஙனமான இப் பாவியின் கரத்தால் கொய்த மலரை அந்த வேதகிரீசன் சமர்ப்பித்துக் கொள்கையில் மகா உத்தமிகளான நீங்கள் ஏன் பாவிகளாவீர்கள்? உங்கள் கரங்களி னால் பறித்தால் மலர் மணத்துடன் இன்னு மதிகமான மணம் வீசு மன்றோ! அம்மா! தாராளமாய்ப் பறிக்கலாம்" என்றாள். கல்யாணி யின் கண்களில் மழை பொழிந்ததைக் கண்ட நவநீதம் "ஐயோ! இந்தம்மாள் தனது வாழ்நாளில் ஏதோ அபாரமான விசனத்தை யனுபவித்துவிட்டதாகத் தெரிகின்றது. அதனாலே தான் தன்னை நொந்துகொள்வதுடன் கண்ணீர் கானாறாய் ஓடுகின்றது. ஐயோ பாவம்! குடும்பத்தில் என்ன இம்சையோ, யாது ஆபத்தோ! உம். நாம் எதைக் கண்டோம்?" என்று எண்ணியவாறு புஷ்பங்களை யெல்லாம் இருவரும் பறிக்கலானார்கள்.

நவநீதம்:—அம்மணீ! தமது வாஸஸ்தானம் இவ்வூர் தானே?

கல்யாணி:—வேதகிரீசன் பாதமே எனது வாசஸ்தானம்.

நவநீதம்:—தமக்கு மக்கள் மனிதர் யாரு மில்லையா! அன்றி வெளியூர்களில் இருக்கின்றார்களா?

கல்யாணி:—வேதகிரீசனின் பாதமே வாஸஸ்தானமாகிய பின் னர் அவரைச் சேர்ந்த மனிதரெல்லாரும் எனக்கும் மக்கள் மனிதர் தான். அம்மா! சந்தோஷகரமான தங்களுடைய வாக்கினால் இச் சண்டாளியை விசாரிக்க வேண்டாம். நான் முன்னரே தெரிவித் தது போல நான் மகா கொடும்பாவி. என்னைக் கண்டாலும் அளவிலாத பாபம் காண்போருக்குச் சம்பவிக்கும்.

நவநீதம்:—ஐயோ! தங்கள் வதனமோ மிகவும் எழில் நிறைந்து இளமையானதாகக் காணப்படுகின்றது. அவ்வதனத்திலோ அபாரமான சோகம் குடிகொண்டிருக்கின்றது. தாங்கள் கூறுவதைக் கேட்டால் மனம் தத்தளிக்கின்றது. இத்தகைய தங்களுக்கு விபரீதமான விசனம் வந்து மூண்டுவிட்ட காரணம் யாதோ! அதைக் கேட்கவும் வாய் கூசுகின்றது; கேளாதிருக்கவும் மனம் தவிக்கின்றது. அம்மணீ! என்மீது கோபிக்காதீர்கள். தாங்கள் இத்தகைய தொண்டு செய்துகொண்டு தேகத்தை தியாகம்செய்வதற்குமுதிர்ந்த பக்தியே காரணமோ, அன்றி ஸம்சாரத்தில் உண்டான விரக்தியே காரணமோ! அதைமட்டும் தெரிவிக்கும்படி மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கல்யாணி:—ஐயோ! அம்மணீ! எனது பாழான பிறவியில் பக்தியும் உண்டா! அத்தகையபேரும் கிடைக்குமா! ஏதோ பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மத்தை முற்றும் அனுபவித்தேன்; அனுபவிக்கின்றேன்; அனுபவிக்கவும் போகின்றேன். பொழுது போக்கும் வேலையே யன்றி உண்மையான புஷ்பத் தொண்டா யானியற்றுகின்றேன்? உம். பாவி ஜன்மமெடுத்து ஆவி நீங்காது தபிக்கின்றேன். ஐயோ! ஹா! என்னப்பனே! என் கண்ணே! புஷ்பா! சண்டாளி என் மனத்தை விட்டுச் சற்றேனும் நீ அகலாது புகுந்துகொண்டு வருத்துகின்றாயே!—என்று தன்னை யறியாது கூறிவிட்டுத் தேம்பித் தேம்பிப் புலம்பிவிட்டாள்.

இந்த மகா கோரமான சம்பவத்தைக் கண்டு மனந் தாளாத இருவரும் கண்ணீர் உதிர்த்தார்கள். கல்யாணியின் வரலாற்றை எவ்விதமேனும் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு நவநீதத்தின் மனம் ஆவல் கொண்டு துடிக்கின்றது. அவள் புலம்பும் தருணத்தில் கேட்பது சரியல்லவென்று அதற்குமேல் எதுவும் பேசாது புஷ்பங்களைப் பறித்துக்கொண்டே யிருந்தாள்.

ஏமாவதி.—ஏனம்மா! 'என் கண்ணே! புஷ்பா!';என்றீர்களே அப் பெயர் கொண்ட யாரேனும் உங்களுக்கு வேண்டியவர்களுண்டா! அவர்களுக்கென்ன உற்றது? ஐயோ! பாவம்! தங்கள் வருத்தம் கண்டு சகிக்கக் கூடவில்லையே!

கல்யாணி:—அம்மா! உலகத்தில் பிறந்த அப்போதே சுக துக்கம் இரண்டிற்கும் ஓர் பங்குதாரர் ஏற்பட்டுவிட்டது போலாக வில்லையா! அதே போல யான் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதற்கே பிறந்தேன். என்னால் தாங்கமாட்டாத சுமையாக அவற்றை வாரிக்கொண்டு வந்துவிட்டேன். அதை அனுபவித்துத் தானே தீரவேண்டும்? அதற்குப் பின்னடைந்தால் விட்டுவிடுமா! புஷ்பா என்ற பெயருடைய பெண்ணைக் கடவுள் எனது கர்ப்பத்தினின்றும் உத்பவிக்கச் செய்து நான்கு வருஷம் என்னுடன் கூட வசிக்க வைத்துப் பிறகு பிரித்துவிட்டார். என்ன செய்யலாம்? உயிருடன் பறிகொடுத்துவிட்டேன்.—என்று கூறுவதைக் கேட்ட இருவரும் கண்ணீர் உதிர்த்துவிட்டார்கள்.

அவ்வமயம் அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த சில சோதாக் களில் ஒருவன் கல்யாணியை உற்றுநோக்கியவாறு உரத்த குரலால் பேசத் தொடங்கி, "அடே! இந்தப் பண்டாரச்சி வெகு ஷோக் காக இருக்கிறாளடா! இந்தப் புஷ்பங்களை உண்மையாகக் கடவுளுக் குத் தான் சாத்துகின்றாளோ! அவர் பெயர் சொல்லி மாலை கட்டி விற்றுப் பணமாக்குகின்றாளோ! கோயிலில் கோலமிட வேண்டு மென்று பொய்க் கதை கூறி அக்ரகாரத்தில் தினந்தோறும் அரிசிப் பிச்சை எடுக்கிறாள். பிழைக்கும் வழியை வெகு சுலபமாகக் கண்டு பிடித்திருக்கின்றாளடா! ஏய்! பண்டாரம்! எனக்குக் கொஞ்சம் புஷ்பம் தருகிறாயா!" என்று குறும்பாக நகைத்துக்கொண்டே கேட்டான்.

நாராசம் காய்ச்சி வார்த்தது போலான இவ் வார்த்தைகளைக் கேட்ட நமது மின்னிடை மாதரசியாகிய கல்யாணியின் மனம் தவித்ததைக் கூறவேண்டுமா! மனத்தில் சொல்லவறியாத ஆத்திரம் மூண்டது. அந்தச் சோதாக்களை வாயில் வந்தவாறு திட்டிவிடலாமா என்று எண்ணுகிறாள். சோதாக்களிடம் வாய்கொடுத்தால் ஆபத்து நேருமேயன்றி அனுகூலம் கிடைக்காது என்ற எண்ணம் உடனே உதித்தது. ஐயோ! தனக்கு ஒரு நாதனின்றி ஒண்டியாய், அதி லும் ஆண்டியாய்விட்ட தனாலன்றோ இத்தகைய இழிவானசொல் கேட்க நேர்ந்தது! ஐயோ! விதியே! ஏ மனமே! உனக்கு எத்தனை சமாதானங்களை ஊட்டியும் ஆத்திரத்தை விடாது வைத்துக்கொண்

182858

டிருக்கின்றாயே! வேண்டாம் ஆத்திரங்கொண்டு அழிந்துபோக வேண்டாம்.

ஆநந்தக் களிப்பு

1. ஆத்திரங் கொள்ளாதே நெஞ்சே—பிறர்
சூத்திரத்தால் உன்னை சாற்றலுக் கஞ்சேல்.
2. எத்தநிது வெனத் தேறு—உன்னைக்
காத்திடும் கடவுளின் கருணையைக் கோரு.
3. ஒருவரையும் பகைக்காதே—உந்தன்
அறிவை இழந்து பரிதபிக்காதே.
4. தர்ம சிந்தனையே கொள்ளு—தீய
கர்மசிந்தனையைக் கடிந்து நீ தள்ளு.
5. துர்க்குணரைக் கண்டு பேசேல்—உந்தன்
நற்பொழுதை நாசம் செய்து நீ ஏசேல்.
6. பாவம் உண்டென்பதை எண்ணு—கொடும்
பாவத்தை நீக்கிப் புண்ணியத்தைப் பண்ணு.
7. தீயோரையும் இகழாதே—மற்ற
ஈயாரையும் ஏசி நரகில் விழாதே.
8. தேகமே சதமென்றெண்ணாதே—மற்ற
போகமும் புவியின்பம் முற்று மண்ணாடே.
9. கருணைக் கடவுளின் பாதம்—நாளும்
காணப் பணிவதே சான்ற ப்ரசாதம்.
10. மோட்ச மளித்திடும் மூர்த்தி—அவன்
காட்சிக்கு மீறிடில் தங்கும் அபகீர்த்தி.
11. எத்தொழில் இயற்றியக் காலும்—அந்த
உத்தமனை வேண்டு உவந்து முக்காலும்.
12. பத்தியே பெரிதென நம்பு—உந்தன்
சித்தத்தில் ஆநந்த ஊறி—நிரம்பும்
13. மாதவனடி மறவாதே—அவன்
ஆதரவன்றி அணுவசையாதே.
14. அகங்கார அரக்கனையோட்டு—மற்றும்
பகை என்னும் பைசாசந்தன்னை விரட்டு
15. சித்த சுத்தியை நீ நாடு—நல்ல
உத்தம நேசத்தை உவந்து நீ தேடு.
16. உண்ணும் பொரு ளொளிக்காதே! உந்தன்
எண்ணத்தை இயல்பின்றிச் சிதறடிக்காதே!

17. தீமை செய்ய நினைக்காதே—உயர்
ப்ரேமையற்றால் பரமனருள் நிலைக்காதே!
18. வம்புக்குச் சண்டை செய்யாதே—பிறர்
வெம்பிடக் கண்டு வீணுக வையாதே!
19. காணுப்பழி சுமத்தாதே!—உந்தன்
வாணுள் முற்றும் பழி நீங்க வற்றாதே!
20. பேராசைகொண்டு பறக்காதே—அந்த
ஆராவமுதனின் அடிமறக்காதே.
21. எவ்வுயிரிடத்தும் இரங்கு—மற்றும்
ஒவ்வொருவருக்கும் உதவிட நெருங்கு!
22. ஆபத்தில் கையை விடாதே—மகா
பாபி என்று பேசும் பட்டம் தேடாதே!
23. கோபமே உந்தனைக் கொல்லும்—பெரும்
பாபம் பறந்திடச் சாந்தமே வெல்லும்!
24. நீதி வழுவிப் பேசாதே—மற்ற
நீதியற்றவரை நகைத்து எசாதே!
25. அக்ரமமே யுந்தன் சத்ரு—அதை
நிக்ரகம் செய்திடில் நினைத்தவர் மித்ரர்!
26. பெரியோரை இகழ்ந்திடல் பாபம்—அதை
அறியாது செய்தாலும் அணுகிடும் சாபம்!
27. நாரணன் பாதமே தஞ்சம்—பரி
பூர்ணமாய்ப் போற்றிடில் வினையஞ்சும்!
28. நித்தமும் தவறாமல் துதி—செய்யும்
உத்தமரைக் காக்கும் ஒப்பிலா நிதி.

என்ற பாடலைப் பாடியவாறு கண்ணீர் பெருக மனந்தாங்கமாட்டாத சோகத்தில் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.

அந்த சோதாவின் அநியாயமான வார்த்தையையும் அதைக் கேட்டுக் கல்யாணி தன்னையே தாழ்மைப் படுத்திப் பாடிய பாடலை யுங் கேட்டு நவநீதத்திற்கும் ஏமாவதிக்கும் சொல்லொணுத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டுவிட்டது. அந்த வழிப்போக்கர்களான சோதாக்களை திட்டியனுப்பிவிட்டு மூர்ச்சித்துக்கிடக்கும் கல்யாணியின் மூர்ச்சை தெளியவைத்து அவளை ஏமாவதி தனது மடியில் சாற்றிக்கொண்டு "அம்மா! கண்திறந்து பார்," என்று பக்ஷ

முடன் கூறினாள். சிறிது நேரத்தில் கல்யாணி கண் திறந்து பார்த் தாள். தன்னை அந்தம்மாள் மடிமீது சாற்றிக்கொண்டிருப்பதை நோக்கி விசனித்தவாறு எழுந்தாள். விலகி நின்று ஏமாவதியை வணங்கிப் பின்னர் "அம்மா! பாவி என்பொருட்டாகத் தமக்கு ஏற் பட்ட சிரமத்திற்கு மன்னிக்கவும். என் விதி எத்தனையோ வழியில் ஆட்டியது. அதுபோல இது ஒன்று. இப்பாவியின் தேகத்தில் பாயாத அம்பு கிடையாது. எனது எண் ஜாண் உடம்பில் புண்ணு காத இடம் கிடைக்காது. இவ்விதமும் ஒரு சண்டாளி உலகத்தி லிருக்கிறாள் என்பதைக் கண்டுகொள்ளுங்கள்". என்று கூறிக் கொண்டே புஷ்பங்களைப் பறித்து எடுத்துக்கொண்டு தனது குடிசை யில் நுழைந்தாள். நவநீதம், ஏமாவதி இருவரும் அவளுடன் கூடவே சென்றார்கள். கல்யாணி புஷ்பங்களைக் கட்டுவதற்கு உட் கார்ந்தாள். நவநீதமும் ஏமாவதியும் கூட உட்கார்ந்தார்கள். பின் னர் ஏமாவதி கல்யாணியை நோக்கி (அங்கொருபுறமாக படுத்துக் கொண்டிருந்த கிழவியைக் காட்டி) அம்மா! அந்தப் பாட்டியம்மாள் யார். உங்கள் தாயாரோ!" என்று கேட்டாள்.

அப்போது இவர்களுடைய குரலைக்கேட்டு எழுந்து உட்கார்ந்த கிழவி நவநீதத்தையும் ஏமாவதியையும் விரைக்கப் பார்த்து கல் யாணியை நோக்கி "அம்மா! இவர்கள் யார்? உனது சொந்த மனி தர்களா?" என்று கேட்டாள்.

கல்யாணி:—எல்லோரும் எனது சொந்த மனிதர்கள்தான்.

கிழவி:—அம்மா! நீ இவர்களுடன் பேசிக்கொண்டே இரு. நான் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வருகிறேன்."—என்று கூறிக்கொண்டே எழுந்துவந்து நவநீதத்தை உற்றுப்பார்த்தாள். "எனது சிறியபிள்ளையின் முகம்போலவே இருக்கின்றது. உம். இனி அந்த முகத்தையும் காண்பேனா!" என்று கூறிக்கொண்டே கோயிலுக்குச் சென்றாள்.

நவநீதம்:—அம்மா! இந்தப் பாட்டியம்மாள் எங்களை விளித்து உங்கள் சொந்த மனிதர்களா என்று கேட்டமையால் அவர்கள் உங்க ளுக்குச் சொந்தமானவர்களல்லவென்று தெரிகின்றது. ஆகையால்

இவர்கள் உங்களுக்குத் துணைக்காக இருக்கின்றவர்களா! ஏனம்மா! உங்களுக்குப் புக்ககத்தில், பிறந்தகத்தில் இரண்டிடங்களிலும் மனிதர்கள் யாருமில்லையா? தங்கள் பர்த்தா எங்கிருக்கிறார்? தங்களுடைய மனத்திற்குப் பிடித்தமில்லாத விஷயத்தைக் கேட்கிறேன் என்று கோபித்து ஆயாசப்படவேண்டாம். உங்களுடைய அபாரமான விசனத்தைப் பார்த்தால் தங்களுக்கு இத்தகைய விரக்தியை உண்டாக்கக்கூடிய விஷயங்களோ, சம்பவங்களோ யாதாயிருக்குமென்று அறியவே கேட்கிறேன்.

கல்யாணி—அம்மா! இவ்வுலகத்தில் இதுவரையில் ஜெனித்த மானிடரில் ஆணிலோ, பெண்ணிலோ என்போலத் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தவர் இருக்கவேமாட்டார்கள். இனிப் பிறக்கப் போகும் வகுப்பினரும் அனுபவிக்கப்போவதில்லை. அத்தகைய கொடிய பாபி யான். எனது சரிதையைக் கேட்கவேண்டுமென்பதே உங்களுடைய அவாவென்பதைத் தமது முகம் காட்டுகின்றது. கேட்டபின் கலங்குவதைத் தவிரத் தங்களுக்கு சந்தோஷமுண்டாகுமா? அஃதில்லை. எனது விதியினால் நான் வருத்தமுற்றது போதாமல் அந்த விஷயத்தைக் கேட்டுத் தாங்களும் வருந்தவேண்டுமா! என்று யோசித்தேன். சுவருடனேனும் சொல்லி ஆறு என்றபழமொழிக்கிணங்க என் விசனத்தைச் சொல்லுகின்றேன்.—என் பிதா ஓர் சாதாரண அந்தஸ்துடைய மனிதர். என் தாயாரும் அவ்விதமே யாவள். அவர்களுக்கு நானும் எனக்கு மூத்த அண்ணன் ஆக இருவருமே ஜனித்தோம். என் அண்ணனுக்கு விவாகமான பின்னர் என்னையும் மணம் செய்வித்தார்கள். அந்தோ! என் பிராணநாதருடைய அழகை வர்ணிக்கக்கூடுமா! அத்தகைய சுந்தரரூபரையே மணந்தேன். எனக்கு ருதுசாந்தியாய்ப் புக்ககம் சென்ற பின்னர் யான் என்னுடைய மாமியினாலும், நாத்தியினாலும் பட்ட துன்பங்களை வாயினால் கூறவும் வாய் கூசுகின்றது. எனது துரதிர்ஷ்டவசமே எனது பர்த்தா என்னைச் சிறுமைபடுத்தியே முதலில் நடத்திவந்தார். என்னைக்கவனிப்பதுமில்லை; என்னுடன் அன்பாய்ப் பேசுவதுமில்லை. தன் தாய், தமக்கை இருவரின் கட்டளைப்படியே அவர் நடந்துவந்தார். அக்காலத்தில் யாருடைய தீவினையினாலோ

எனது நாத்தியின் புருஷர் இறந்துவிட்டார். பின்னால் உடனே வீட்டில் சொத்துக்கள் களவுபோய்விட்டன. இவ்விரண்டு சம்பவங்களுக்கும் என்னுடைய கால்வைத்த நேரமே காரணமெனக்கூறி அதன் நிமித்தம் என்னை இம்சித்ததைக் கூறவேண்டுமா!" என்று கல்யாணி கூறினாள். இதைக் கேட்ட நவநீதத்தின் வயிற்றிலும் மார்பிலும் திக்கென்று உரைத்தது; துக்கம் கரைகடந்து பெருகியது. தனது கணவன் முன்னொரு நாள் தனது மூத்த மனைவியின் விஷயமாகக் கூறிய செய்திகள் தெட்டென அவளுடைய நினைவிற்கு வந்தன. தன் கணவன்கூறிய விஷயங்களே இவளும் கூறுவதால் இவளே தனது மூத்தாள் என்பது அவள் மனத்தில் சுறுக்கெனப்பட்டது. அவ்வளவுதான் அவளுடைய நிலைமை முற்றிலும் மாறிப்போய்விட்டது. 'ஐயோ! என் அக்கா!' என்று கூறிப் புலம்பி அவளுக்குத் தான் இன்னார் என்று எடுத்துக் கூறிவிடலாகுமா என்று எண்ணுகிறாள். மனமும் மார்பும் துடிக்கின்றன. உடனே தன்னைத்தான் சற்று சமாளித்துக்கொண்டு "ஆகா! நாம் ஆத்திரப்பட்டுக் கூறிவிடலாகாது. இந்தம்மாளின் வரலாற்றை முற்றிலுமறிந்துகொண்டு, குழந்தை பிறந்த தகவலையும் தெரிந்துகொண்டு நமது கணவர் கூறிய விஷயங்கள் உண்மையானதா என்பதையும், நம்மைப்பற்றி இவள் என்ன சொல்கிறாள் என்பதையும் அறிந்து பின்னர் தெரிவிக்கலாம் என்று எண்ணி தனக்குள் எழுந்த உணர்ச்சிகளை உள்ளடக்கிக்கொண்டு மேலும் கேட்கலானாள். பின்னர் கல்யாணி தெரிவித்ததாவது:—"ஐயோ! அக்காலத்தில் யானடைந்த துன்பங்களுக்கு நல்ல உயிராயின் அன்றே நீங்கி இருக்கும். பின்னர் இவ்வித அனுபவங்களை எல்லாம் அனுபவித்து அலைந்துருகும்படியான வினையுடனிருக்கையில் பாவி என்னுயிர் நீங்குமா! அவ்வித இம்சைக்கெல்லாம் தப்பினேன். என் பர்த்தாவிடம் தெரிவித்தால் அதையவர் கவனித்தவரேயன்று. ஆனால், "பேசாது பொறுமையாக விரு" என்று கூறுவார். பதியின் வாக்கை நிதியாக எண்ணிப் பொறுமையுடனிருந்துவந்தேன். ஐயோ! என் வினை அம்மட்டுடன் விட்டதா! என்னை இம்சித்ததெல்லாம் போதாவென்று என்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி யான் கற்பழிந்தவள் என்றும் என் பர்த்தாவுடன் கூறத் துவக்கி

ணர்கள். அதைக்கேட்டு என் பர்த்தா என்னை என்ன செய்வாரோ என்று நடுங்கினேன். அவர் ஒருவருக்கும் ஒன்றும் கூறாது வாளா விருந்துவிட்டார், பிறகு அந்த தந்திரமும் பலிக்கவில்லை என்று வேறு சூழ்ச்சி செய்ய எண்ணி எனக்கு யாரோ கள்ளக் காதலன் எழுதியதுபோலக் கடிதங்கள் பலவற்றைத் தயார் செய்து என் ப்ராணபதிக்குக் காட்டி அவர் மனத்தை முற்றிலும் மாற்றிவிட்டார்கள். என் பர்த்தா பி. எ. பரிக்ஷைக்குப் படிக்கும் மும்முரத்தில் இந்த செய்தியைக்கேட்டு வெகு ஆத்திரங்கொண்டு என்னை வாய்க்குவந்தவாறு திட்டி அடித்தார். யான் "எனக்கு ஒரு செய்தியும் தெரியவராதே. இவை எல்லாம் வீணான கட்டுக்கதை; இதை நம்பாதீர்கள். கடவுள்மீது ஆணையாக எனக்கு ஒருபாபமும் தெரியாது. நாதா! பேதை என்மேல் கோபிக்கவேண்டாம்" என்று கூறி முறையிட்டேன். என் முறையீடு முற்றும் செவிடன் காதில் ஊதிய சங்கநாதம்போலாய்விட்டது. அவர் ஆத்திரத்துடன் கலாசாலைக்குப் போய்விட்டார். எனக்கு அப்போது தலை முழுகி 40 நாளாகி இருந்தது. இச்செய்தி எனது நாத்தி, மாமி இருவருக்கும் தெரிந்த விஷயம். படிக்கும் புருஷரான என் பர்த்தாவுக்குத்தெரியுமோ, தெரியாதோ! அதைப் பாவி யான் இன்னமும் அறியமாட்டேன். அன்று என் பர்த்தா காலேஜுக்குச் சென்ற பின்னர் என் நாத்தி என்னை அடித்த அடி கணக்கிலிட முடியாது. அவ்வாறு அடித்து "அடி கல்யாணி! நீ இக்ஷணமே வீட்டைவிட்டு உன் தாய் வீடு சென்றுவிட்டால்தான் உன் புருஷன் வீட்டிற்குத் திரும்பி வருவானும். இல்லையேல் அவன் உன்னாலடைந்த அவமானத்தினால் ப்ராணனை விட்டுவிடுவானும். படுபாவி—விபசாரி—சண்டாளி—உன்னால் எங்கள் அருமைக் குழந்தையை இழக்கமாட்டோம். நீ இப்போதே தொலைந்துபோ; இல்லாவிட்டால் நீ படும் பாட்டைக் கடவுளுமறியார். உன்னுடைய துர்க்ருத்யங்களினால் அவன் உன்மேல் கொண்டுள்ள ஆத்திரத்திற்கோர் அளவே இல்லை. அவனுடைய உயிருக்கு நீதான் எமன் என்பதற்கையமே இல்லை. நீ இந்த நிமிஷமே வீட்டைவிட்டு ஓடிப்போ! சனியன்பிடித்த மூதேவியே!" என்று வாயில் வந்தவாறெல்லாம் வைதார்கள்.

அப்போது எனது நிலைமை எவ்விதமிருந்திருக்குமென்பதைக் கூறவேண்டுமோ! அவர்கள் காலில் விழுந்து கெஞ்சினேன்; வேண்டிக்கொண்டேன். ஐயோ! ஒரு பாபமுமறியாத என்னை வீணுக வதை செய்வது தகுமா! யான் உங்களடிமையல்லவா! என்னை எங்கு செல்லவிட்டு வருத்தமுறச்செய்கிறீர்கள்? அக்கா! வேண்டாம், என்மீது பகைமை கொள்ளவேண்டாம். அடியேனைத் தமது மகள் போல எண்ணலாகாதா! எனக்கு இவ்விடம் விட்டுச் செல்வதற்கு வேறு இடமும் உண்டோ? என் பர்த்தாவின் காலில் விழுந்து யான் மன்ருடி என் நிரபராதித் தன்மையைக் கூறிக்கொள்கிறேன்'' என்று யான் கதறினேன்.

அப்போது என் மாமியார் மிகுந்த நியாயவாதிபோலப் பேச வந்து ''அடி கல்யாணி! நான் சொல்வதைக்கேள். உன்மீது உன் கணவன் இப்போது கொண்டுள்ள ஆத்திரத்தை அளவிடவியலாது. அவ்வித நிலைமையில் அவன் உன் முகத்தைக் கண்டால் என்ன செய்வானே அறியக்கூடாது. ஆகையால் நீ இச்சமயம் உன் பிறந்த வீடு சென்றுவிடு; நான் அவனுக்கு உனது நிரபராதித் தன்மையை எடுத்துக்கூறி அவனுடைய கோபத்தைத் தணித்துப் பின்னர் உன்னை அழைத்துக்கொள்ளச் செய்கிறேன். ஆகையால் நான் சொல்லும் புத்திமதியைக்கேட்டு நட'' என்று வெகு உருக்கமாய்க் கூறினள். அதற்கு நான் ''மாமி! தாங்கள் இப்போதே—யான் இங்கிருக்கையிலேயே—உங்கள் மகனுக்கு எடுத்துரைக்கலாகாதா! நான் வீணுக ஏன் செல்லவேண்டும்?'' என்று கதறினேன். அதற்கவள் ''அடி பயித்தியக்காரி! அவனுடைய சுபாவத்தை நீ அறியமாட்டாய். அவனுடைய ஆத்திரத்திற்குக் கர்த்தாவாகிய உன்னை எதிரிலேயே வைத்துக்கொண்டு நான் சாந்தம் செய்யச் சென்ருல் அதனுல் உனக்கு அநுகூலமே ஏற்படாது; பிரதிகூலமே ஏற்பட்டுத் தானே உன்னைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவான். மேலும் நீ தலை முழுகாமலுமிருக்கிருய். எதற்கும் தாய்வீடு சென்று இரண்டு மாதம் தங்கிவிட்டுத்தான் வாயேன். உன்னை வைதுவிட்டதனுல் தள்ளிவிடுவானு என்ன? நான் அவனுக்கு நன்மதிகூறி அழைத்துக்கொண்டுவரச் செய்கிறேன்.'' என்று வெகு தந்திர

மாய்க் கூறினள். ஐயோ! நஞ்சான மொழியை நான் நீதிமொழி என்றே நம்பிவிட்டேன். 'உண்மையில் கணவன் என்மீது ஆத்திரங்கொண்டு இவ்விதம் அனுப்பச்சொன்னரோ, என்னவோ! நாம் போகாவிட்டால் என்ன நடக்குமோ!' என்று பயந்து மோசம் போய்விட்டேன். மாமியின் பேச்சை மதி எனக்கொண்டேன். ஹா! என் கன்மம் அவ்விதம் செய்கின்றதேயன்றி பிறர்மீது குற்றமேது? அந்த வார்த்தையைக் கேட்டதும் "மாமி! உங்கள் வார்த்தைப் படியே நடக்கின்றேன். என்னை சீக்கிரமே அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள். இவ்விடம் விட்டு அதிக நாள் என்னுலிருக்கமுடியாது." என்று புலம்பினேன். அப்படியே ஆகட்டுமென்று என்னை வீட்டு வேலைக்காரியுடன் வண்டியிலேற்றி அன்றே அனுப்பிவிட்டார்கள். வேலைக்காரி அவர்களுக்கு உடந்தையானவள். என்னை என் தாய் வீட்டிற்கு திடீரென்று அனுப்பியதால் அவர்களுக்கு உள் செய்தியை மறைத்து 'எனக்கு உடம்பு சரியில்லை' ஆகையால் வந்தேன்; என்று சாக்குச்சொல்லிவிட்டேன்.

நான் தாய்வீடு சென்ற பின்னர் என் புக்ககத்தின் தகவலே ஒன்றும் தெரியவில்லை. அதனல் என் கவலை அதிகரித்தது. 10—15 தினங்களாகியதும் நான் துராக்ருதமாக ஓடிவந்துவிட்டதாக ஓர் வதந்தி ஊர் முற்றும் அறியும்படியாக என் மாமியும் நாத்தியும் கிளப்பிவிட்டதுடன் அவ்வூரையும் விட்டு வேறு ஊருக்குப் போய்விட்டார்களாம். ஐயோ! என்னை நயவஞ்சகமாக அனுப்பிவிட்ட மோசத்தை அப்போதே உணர்ந்தேன். என்னுயிர் துடித்தது. எனக்குப் பிதா கிடையாது. இருந்த ஓர் அண்ணனும் அனுகூலமில்லாதவனகிவிட்டான். என் தாய் என்ன செய்வாள் பாவம்! என் பர்த்தா இருக்குமிடத்தை விசாரித்துக் கடிதமெழுதினேன். பதிலில்லை. நேரில் சென்று முறையிட்டேன். நான் கற்பழிந்தவளென்றும் இனி உன் முகத்திலும் விழிப்பதில்லை என்றும், என்னை ஜாதிப்ரஷ்டம் போட்டுவிட்டதாயும் என் பர்த்தாவே கூறி என்னை அடித்து விரட்டிவிட்டார். அந்தோ! சிறகு ஒடிந்த பக்ஷிபோலானேன்; தவித்தேன்; முட்டிக்கொண்டேன். மாமியிடம் சென்று அவள் முன்சொல்லிய வஞ்சக மொழிகளைக் கூறிக் கதறினேன்.

அதற்கந்த மோசக்காரி தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், தான் ஒன்றுமே சொல்லவில்லை என்றும், வீணான கட்டுக்கதை யான் கூறுவதாயும் ஒரேயடியடித்து வெளியே போய்விட்டாள். பிறகு என் விதியை எண்ணி யான் என் தாய் பின்னோடு வந்துவிட்டேன்.

அம்மா! எனது பூர்வ ஜன்மவினை ஒன்ரு, இரண்டா! பட்ட சிறுமை எல்லாம் போதாதென்று எனது கருவிலிருந்த சிசுவும் என்னை வருத்திவிட்டது. ஈரைந்து மாதங்கள் சென்று சீராகப் பிறக்கவேண்டிய சிசுவானது 10 மாதமாகியதும் வயிறு குறைய வாரம்பித்துவிட்டது. இதுவும் ஒரு சோதனையல்லவா! எந்த லேடி டாக்டரிடம் காட்டியும் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லத் தெரிய வில்லை. குழந்தை வயிற்றிலிருக்கின்றது; சீக்கிரம் பிறந்துவிடு மென்று கூறினார்கள். அந்தோ! பட்ட பரிபவங்கள் போதாமல் இவ் விதமும் வேண்டுமா! ஐயோ! ஏற்கெனவே குற்றம் சுமத்தும் மனிதர் கண்முன் என்னை இவ்விதம் ஈசன் பங்கம் செய்யவேண்டுமா! உயிரை விட்டுவிடலாமே! என்று என்னுள்ளம் துடிதுடித்தது. இரவோடிர வாய்க் குளத்தில் விழுந்தேன். என் போதாத காலத்தின் கொடுமை யால் யாரோ கண்டு எடுத்துப் போட்டுவிட்டார்கள். அதிலும் பாவி யான் சாகாது பிழைத்துக்கொண்டேன். பிறகு யான் கர்ப்பவதி யாயிருக்கும் செய்தி ஊர் முற்றும் பரவிவிட்டது. துராக்ருதம் செய்து கர்ப்பவதியாகிவிட்டதாக வதந்தி கிளம்பிவிட்டது. ஐயோ! என் உண்மையை அக்கடவுளும், எனது பேசும் தெய்வமாகிய பர்த்தாவுமின்றி வேறு யார் அறிவார்கள்? என்னுயிர் நீங்குவதற் குப் பலவிதத்திலும் முயற்சித்தேன். என் பாழும் உயிர் நீங்க வில்லை. எனது கர்ப்பம் தரித்த 18-வது மாதக் கடைசியில் ஓர் பெண் குழந்தை பிறந்தது. எனக்குப் பதினெட்டு மாதம் கழித்து பிறந்த செய்தி இப்போதும் அந்த ஊர் ஆஸ்பத்ரியின் துரைசானிக் குத் தெரியும். அவள் என் செய்தியைக் கேட்டு மிகவும் விசனித் தாள். பெண் குழந்தையின் எழிலைக் கண்டோர் தான் கூறவேண்டும். ப்ரசவித்த கண்டத்திற்கும் தப்பித்துவிட்டேன். என் புருஷனின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்வதற்கே பாழும் பெண் பதினெட்டு மாதம் சென்று பிறந்தது. அந்த குழந்தைக்கு புஷ்பாவதி என்று

ஆஸ்பத்திரி துரைசானியே பெயரிட்டாள். எனது உடம்பில் அணிந்திருந்த நகைகளேயே எனக்கு ஜீவனும்சம் என்று என் பர்த்தா கூறி விட்டனராம். பாவி யான் குழந்தையுடன் என் தாய் வீட்டில் அண்ணியிடத்திலும், அண்ணனிடத்திலும் பட்ட சிறுமையும், இம்சையும் நினைக்கவும் வேண்டுமா! (நவநீதத்தின் விழியில் ரத்த மழை பொழிகின்றது) அவர்கள் எனது நகைகளை எல்லாம் கள்ளன் கொண்டுபோய் விட்டதாகக் கூறி அமுக்கிவிட்டார்கள். என்மீது படா பழிகளைச் சுமத்திப் பழித்து வீட்டிலிருக்க யோக்யதை இல்லை என்று திட்டினார்கள். என் குழந்தைக்கு 2 வயது சென்ற பின்னரே என் பர்த்தா வேறொரு புண்ணியவதியை மணந்து கொண்டதாகக் கேள்விப் பட்டேன். அந்த உத்தமி யிடத்தில் எனது குறையை முறையிட்டு எனது நிரபராதித் தன்மையை விளக்கிக் கூறி கணவன் வீட்டுப் பணியாளாகவாகிலு மிருக்க அருள் புரியும்படி வேண்டிக்கொள்ளலாமா என்று எண்ணினேன். ஆனால் என் பர்த்தா இருக்கும் இடமே எனக்குத் தெரியாது போய் விட்டது. சகாயத்திற்கும் எனக்கு மனிதர்களில்லை. எனக்கு நேர்ந்த கதியைப் போல அந்தப் பெண்மணிக்கு நேராது காக்க வேண்டி கடவுளை சதா துதித்துக்கொண்டே இருக்கிறேன். அந்த பெண்கள் நாயகம் மகா உத்தமியாம். சற்குண சம்பன்னையாம். தெய்வ பக்தியிலும், பதி பக்தியிலும் சிறந்தவளாம். எல்லாம் இப் பாழுங் காதில் பட்டது. என் பர்த்தா அவளை மாமி, நாத்தி யிட மிருந்து பிரித்துத் தனியாக அழைத்துச் சென்று விட்டாரென்றும் கேள்விப்பட்டேன். உம்; மகா பாபி யான் எவ்விதமிருப்பினும் என் பர்த்தாவை மகிழச் செய்யும் மங்கையும் அன்னவரும் சுகமாக வாழ்ந்தால் அதுவே எனது மகிழ்ச்சி. பிறகு என் தாயார் கடுமையான நோய் வாய்ப்பட்டுவிட்டாள். என் குழந்தைக்கு வயது நாலாயிற்று. என் அண்ணியினுடைய அம்பு போன்ற மொழிகளைக் கேட்டுச் சகிக்கமாட்டாது என் தாயாரையும் அழைத்துக் கொண்டு ஒரு புண்ணியவானின் துணையைக் கொண்டு இவ்வூர் சத்திரத்தை யடைந்தேன். கோயிலில் சென்று சுவாமி தரிசனம் செய்து திரும்புவதற்குள் பலவித ஆபத்தில் சிக்கி வீடு வந்து சேர்ந்தேன். ஐயோ! அனியாயக் கொள்ளையே! எனது நான்கு

வயது குழந்தையைக் காணுது, பறிகொடுத்தது போல எங்கேயோ அது வழிதப்பிப் போய்விட்டது. கேட்டு முட்டிக்கொண்டேன். அப்போதே என் தாயாரும் இறந்துவிட்டார்கள். எல்லாக்காரியமும் தீர்ந்துவிட்டது. பரம சண்டாளியாகிய யான் தனித்து நின்றேன். இந்தப் பெரியம்மாளின் உதவியினுல் வேதகிரீசனின் சன்னதியே கதி என்று இத் தொழில் செய்து இக் கோலம் பூண்டு என் வாழ் நாளைக் கடத்துகின்றேன். என் புஷ்பவல்லியின் பெயரை எண்ணி புஷ்பவனம் வைத்தேன். அம்மா! இப் பாவியின் சரிதையைப் போல எங்கேனும் கதையிலாவது படித்ததுண்டா! அந்தோ! என் பர்த்தாவுக்கு உயர்தரமான போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோக மும் ஆயிருக்கின்றதாம். உம், என்னை என்வினை யடித்தால் அதற்கு வருந்தினுல் என்ன பயன்? 10 வருடமாயிற்று; என் குழந்தை யின் செய்தியும் ஒன்றும் தெரியவில்லை. என் பதியைக் காணவும் பாக்கியம் பெறவில்லை. என் விதியை இவ்விதமே தொலைத்து வரு கிறேன். முந்தின தினம் நான் குளத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருக்கையில் அங்கு கூட ஸ்நானம் செய்த சிலர் தமக்குள் சம்பாஷித்துக்கொண்டதாவது:—யாரோ போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துக்ருஷ்ணனும் (ஏமாவதி திடுக்கிட்டு ஏதோ சொல்ல வாய் எடுப்பதை நவநீதம் அறிந்து அவளை அடக்கும்படி சமிக்ஞை செய் கிருள்; ஏமாவதியும் வாளாவிருந்து கேட்கிருள்) அவர் ஓர் கொலை பாதகனைப் பிடிக்கச் சென்று பெருத்த ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டு 10 தினமாகக் காணுது போய் விட்டாராம். யாரோ ஓர் பரதேசி கண்டுபிடித்துக் காப்பாற்றினுைம். அவருக்கு ஏதோ பலமான காயம் பட்டு சீக்கில் கிடக்கின்ருராம். அவரை இவ்வூர் ஆஸ்பத்ரியில் கொண்டு போட்டிருக்கின்றதாம். பிழைப்பாரோ மாட்டாரோ சந்தேகமாம், மகா வீரராம்; கெட்டிக்காரராம்" என்று பேசிக்கொண்டதைக் கேட்டதும் என்னுயிர் பதைத்தது. ஐயோ! கணவனைப் பிரிந்திருந்தாலும் மங்கலியத்துடனிருக்கின் ருேமே! அதற்குப் பங்கம் வாராது காப்பாற்றவேணும் அப்பனே!" என்று வேண்டிக்கொண்டு வீடு வந்தேன். அவரைப் பார்க்கவேண்டு மென்று எனக்கு ஆவல் மிகுந்து துடித்தது. உடனே நான் என்னைத் தேற்றிக்கொண்டு ஆஸ்பத்ரிக்குச் சென்று அவர் படுத்

திருக்கு மிடத்தை விசாரித்துக்கொண்டு போய் தூர நின்று கண்டேன்; கண்ணீர் உதிர்த்தேன், கவலை மிருந்தேன். கட்டு மீறித் துயரமடைந்தேன். நாதா! என்று கூறி கூவிப் புலம்ப எண்ணினேன்- எனது நிலைமையையும் இடத்தின் பேதத்தையும் எண்ணிப் பேசாது என் ஆவல் தீரப் பார்த்துவிட்டேன். அவர் அவ்வமயம் ப்ரக்ஞை யற்றிருப்பது போலத் தெரிந்தது. மருத்துவர்களும் தாதிகளும் சிகிச்சை செய்துகொண்டிருந்தார்கள். அவருக்கு சீக்கிரம் குணமாக வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொண்டு கல்லாக நின்றுவிட்டேன். அதற்குமேல் அங்கு நிற்கலாகாதென்று எல்லோரையும் சொல்லிவிட்டார்கள். உடனே யானும் வெளியில் வந்துவிட்டேன். நேற்றும் சென்று பார்த்தேன். எனது மலையத்தனை பாபக்குவியலில் இந்த அணுவளவு புண்ணியம் செய்ததால் என் கணவரைக் கண்ணாரக் கண்டேன். அவருடைய இளைய மனைவியையும் பார்க்கவேண்டுமென்று அவா மிருந்தது. அங்கிருப்பாள்; கண்டு களிக்கலா மென எண்ணினேன். எனது துரதிருஷ்டவசத்தினால் அங்கு தாதிகளைத் தவிர வேறு யாரும் காணப்படவில்லை'' என்று கல்யாணி கூறி முடிப்பதற்குள் நவநீதம் தான் கட்டும் மாலையைக் கீழே வைத்துவிட்டு ஆவேசங் கொண்டவள் போல எழுந்து, "ஆ! அக்கா! என்னருமை அக்கா! உமது கணவருடைய இளைய மனைவியாகிய பாவி யானேயாவேன். உமது இன்பங்களை எல்லாம் கொள்ளை யிட்டுக்கொண்ட கொடும் பாவி யானேயாவேன். ஐயோ! என் அக்கா! உனக்காகவே உலகத்தில் மழை பொழிகின்றது. உன் பொருட்டே உலகத்தில் உயிர்கள் தரித்திருக்கின்றன. ஐயோ! அக்கா! நமது கணவரைக் காணாது பாவி யான் பரிதவித்து அவர் விஷயமாக ஜோஸியம் கேட்கவே யாங்கள் இவ்விடம் வந்தோம். எங்களுக்கு ஜோஸியம் சொல்வதற்கு இவ் வேதகிரீசன் உன்னையே நியமித்தார்போல விருக்கின்றது. அக்கா! நமது ப்ராணநாதரின் உயிர் இருக்கின்றதா! இந்த சந்தோடச் செய்தியை உரைத்த உனக்கு யான் என்னவிதமாக நன்றி செலுத்துவேன்? ஐயோ! எனக்கு என்ன பேசுவது, என்ன பேசுகின்றோம் என்பது ஒன்றுமே தெரியவில்லையே? எனது மனம் நிலை புரண்டு தத்தளிக்கின்றதே! ஐயோ! சகலவித

மான சந்தோடங்களை யனுபவிக்கு நாளில் நீ சன்னியாசினி கோலம் பூண்டு இவ்விதம் பரிதபித்துச் சங்கடப் படும்படியான விதியேனோ! என்னுள்ளம் பதறுகின்றதே! உனது சரித்திரத்தைக் கேட்டு உனது கோலத்தைக் கண்டதும் என்னுவி என்னுள்ளடங்காது துடிக்கின்றதே! ஐயோ! அக்கா! இத்தனை பரிபவங்களும் நீ யனுபவிப்பதற்கு பாழாய்ப்போன மாமியும், நாத்தியும், மதியில்லாத கணவனுமல்லவா கர்த்தாக்களாக இருந்தார்கள். அக்கா! இதுபரியந்தம் உன்னுடைய தகவல் ஒன்றும் அறியக்கூடாது யான் தபித்ததை கடவுளே யறிவார். உன் விஷயமாக யான் பெரும் பாதகியாகிவிட்டேன். நீ உயிருடனிருக்கையில் மூத்த மனைவி இறந்துவிட்டதாயும் இளையாளாக என்னைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு என்னை மணந்துகொண்டார்கள். வெகு நாளான பிறகு தான் நீ உயிருடனிருக்கும் செய்தி தெரிந்தது. அதை நான் அறிந்த நாள் முதல் என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? உன்னை மீண்டும் அழைத்துக் கொள்ள யான் செய்துவந்த சூழ்ச்சியும், விசாரித்ததும் கணக்கிடவியலுமா! உன்னிருப்பிடத்தை யறியாது மோசம் போய் வருந்திக்கொண்டே இருந்தேன். நமது கணவர் சுயபுத்தியை இழந்து கலகக்காரப் பாவிகளின் வார்த்தையைக் கேட்டு உன்னைச் செய்துள்ள வஞ்சகம் கொஞ்சமன்றே! ஐயோ! நினைத்தாலும் நடுங்குகின்றதே! அக்கா! நீ இதுகாறும் அனுபவித்த சகலமான துன்பங்களும் போதும். இனியும் இவ்வித மிருத்தலைக் கண்டு யான் சகிக்கமாட்டேன். இச் சன்யாசினி உடையை அகற்றிச் சங்கட மனத்தைத் தேற்று. அக்கா! இனி யானிருக்கும் வரையில் உனக்குக் குறைவில்லை. இன்றே யான் போலீஸ் அதிகாரிகளுடன் சொல்லி நமது குழந்தையைத் தேடும்படிச் செய்கிறேன். நீ உடனே என்னை அவ் வாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று நமது நாதர் படுத்திருக்கு மிடத்தைக் காட்டு. எழுந்திரு" என்று வெகு அன்பாயும் அதிகாரமான தோரணையிலும் கண்ணீர் வடித்தவாறு கூறி கல்யாணியின் காலை விடாது பிடித்துக்கொண்டு புலம்பினாள்.

இந்த அதியாச்சரியமானதும் கனவிலும் கருதாததுமான சம்பவத்தைக் கண்ட கல்யாணியின் நிலைமை புரண்டுவிட்டது.

அவளுக்கு ஆகாயமா, பூமியா! என்பதே தெரியாமல் விழிக்கின்றாள். பேசவும் தெரியவில்லை. விழிகளிரண்டும் மடை திறந்துவிட்டன போல விருக்கின்றன. ஆச்சரிய மடைந்து அப்படியே அபாரமான ப்ரமிப்புடன் உட்கார்ந்துவிட்டாள். அவள் கையிலிருந்த மாலை தானே நழுவி பூமியில் விழுந்துவிட்டது. நவநீதம் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் கல்யாணியின் மனத்தில் பதிந்துவிட்டது. அவளே தனது பர்த்தாவின் இளைய மனைவி என்பதை யறிந்ததும் அவளுக்கு அளவிலடங்காத ஆச்சரியம் உண்டாகிவிட்டது. அவளுடைய உத்தமமான குணத்தினழகும் பெருந்தன்மையான போக்கின் எழிலும் காணக் காணக் கல்யாணியின் மனம் பாகாயுருகியோடத் தலைப்பட்டது. அவள் சற்றுநேரம் உன்மத்தங் கொண்டவள் போல விருந்தாள். பிறகு தனது சுய உணர்வைப் பெற்று தன் காலைப் பிடித்திருக்கும் நவநீதத்தை வெகு ஆவலுடன் வாரி எடுத்துத் தூக்கி நிறுத்தி அவளை மார்புறத் தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டு பேசுவதற்கு மாட்டாமல் கோவெனக் கதறிப் புலம்புகின்றாள். இந்த அற்புதமான காட்சியைக் கண்ட ஏமாவதி ப்ரமித்துத் தம்பம் போல நின்றுவிட்டாள்.

அதே தருணத்தில் கோயிலுக்குச் சென்றிருந்த கிழவியும் சிதம்பரம், தயாநந்தர் ஆகிய மூவரும் அந்த ஆசிரமத்திற்குள் நுழைந்தார்கள். கிழவி ஆவேசம் வந்தவள் போல கூச்சலிட்டு ஆநந்த மயமாக நகைத்துக்கொண்டே "அடி! கல்யாணி! நான் என்ன சொல்வேன்? என்னப்பன் வேதகிரீசன் எனது வேதனையை இன்றே தீர்த்தது போல இத்தனை வருஷங்களாகக் காணாது பறிகொடுத்திருந்த எனது செல்வ மகன் சிதம்பரத்தை இன்று எனக்கு மீண்டு மளித்தார். என் கலியைத் தீர்த்தார். இவர்களை உனது சொந்த மனிதர்களா என்று கேட்டேனே! எனக்குச்சொந்த மனிதர்களாகவே ஆய்விட்டார்கள். இவள் என் நாட்டுப் பெண்ணும், இவள் எனது பேத்தியாம். ஆகா! கடவுளின் அருளை என்னென்று கூறுவேன்?" என்றாள். கல்யாணியும் நவநீதமும் கட்டிக்கொண்டு நிற்பதைக்கண்டு வியப்புற்ற சிதம்பரம் அதே சமயத்தில் "அம்மா! நவநீதம், இதோ எனது தாயாரை 10 வயதிற்கு முன்னர் நான் பிரிந்

தேன். இன்று மீண்டும் அடைந்தேன். இவளை நமஸ்காரம் செய்யுங்கள். நவநீதம்! இந்தம்மாளும் நீயும் ஆலிங்கனம் செய்துகொள்வதைப் பார்த்தால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! இவர்கள் யார் பரம சாதுவாகக் காணப்படுகிறார்கள்?'' என்றான்.

இதுகேட்ட நவநீதமும் ஏமாவதியும் கிழவிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, கல்யாணி இன்னாரென்று அவள் வரலாற்றை எடுத்துத் தனது தந்தைக்கும் பாட்டனாருக்கும் கூறினாள். இதைக் கேட்ட சிதம்பரமும் தயாநந்தரும் கிழவியும் கட்டு மீறிய ஆச்சரியத்தை யடைந்து "ஆ! உனது புருஷனின் மூத்த மனைவி உயிருடனிருக்கின்றளா! ஐயோ! இதென்ன கோலம்! இதென்ன அநியாயம்!'' என்று சிதம்பரமும் தயாநந்தரும் வியப்புற்றுக் கூறினார்கள்.

கிழவி:—அடீ கல்யாணீ! நீ உனது கணவனின் தரிசனம் கிடைக்கப்பெற்றபோதே உனது வினை துலைந்ததென்று யான் எண்ணினேன். என்னுடைய பேத்தியே உனது இளையாளாய்—இளைய சோதரியாய்—வந்து சேர்ந்தாள். ஆகா! என்ன ஆச்சரியமடீ! சேர்ந்தால் எல்லாம் இவ்விதமாகவா சேரும்? நான் சுவாமி தரிசனம் செய்வதற்குச் சென்றேனல்லவா! அங்கு ச்வாமி தரிசனம் செய்துவிட்டு ப்ராகாரப்ரதக்ஷணம் செய்கையில் ஒருபுறமாக என் மகன் உட்கார்ந்திருக்கக் கண்டேன். சாயல் எனது சிதம்பரத்தைப் போலவே இருந்ததால் நான் அவனை எண்ணிப் புலம்பினேன். அப்போது என்னைக் கண்டு எனது சம்மந்தி 'ஏன் புலம்புகின்றாய்?' என்று விசாரித்தார். யான் எனது பூர்வீக விஷயங்களை எல்லாம் உன்னிடத்தில் சொல்லியது போல தெரிவித்துக் கண் கலங்கினேன். இந்த வார்த்தையைக் கேட்டதே இந்த என் மகன் "ஆகா, அம்மா!'' என்று கூவிக்கொண்டே என் காலில் விழுந்து பணிந்து எழுந்து "நான் தான் உனது மகன் சிதம்பர மென்பவன்; என் அண்ணன் கோவிந்தன் சவுக்கியமா! அப்பாவின் கதி என்னவாயிற்று? என்னுடன் விளையாடிய பிள்ளைகளெல்லாம் சுகமாயிருக்கிறார்களா?'' என்று அடுக் கடுக்காய் விசாரித்துப் பின் தான் வீட்டிலிருந்து சென்றது முதல் இன்று என்னைக் கண்டது வரையிலான சகல

செய்திகளையும் கூறினன். அப்போது இறந்துவிட்ட இவனுடைய தந்தையின் செய்தி யுரைத்தேன்; உடனே சென்று ஸ்நானம் செய்து விட்டு வந்தான். என் கலி தீர்ந்தது; என் கண்மணி குழந்தாய்! நவநீதம்!" என்று கூறி அவளைக் கட்டி யணைத்துக்கொண்டாள்.

ஒன்றன் பின் ஒன்றாக நடந்த இவ் வரிய காட்சியினால் எல்லோரும் பேரானந்த மடைந்தார்கள். நமது நவநீதம் தனது கணவனின் இருப்பிடம் தெரிந்துவிட்டதற்கு மிகுந்த மகிழ்ச்சி யடைந்தாள். ஏமாவதியும் நவநீதமும் அங்கு குளத்தில் மீண்டும் ஸ்நானம் செய்துவிட்டு கல்யாணியின் குடிசைக்கு வந்து" அக்கா! இதோ என் புடவையைக் கட்டிக்கொள். அந்தகாஷாயத்தை விலக்கிவிடு" என்று பலவந்தம் செய்தாள்.

கல்யாணி:—அம்மா! தங்காய்! என்னுடைய பாபத்தை யனுபவித்துப் பாதி ஆயுளையும் போக்கிவிட்டேன். இனிமேல் என் ஜன்மத்திற்கு பட்டாடை எதற்கு? சிங்கார மெதற்கு? என் பெயரைக் கேட்கும்போதே என் பர்த்தா என்மீதுள்ள ஆத்திரத்தினால் உன்னையும் கடிந்துகொண்டு கோபிப்பார். அங்ஙன மிருக்க உனக்கு என்மீதுள்ள அன்புடன் நில்லாது அதிகமான விஷயத்தில் நீ ஏன் தலையிட்டு என்மூலம் சங்கடப்படவேண்டும்? என் காலவிதிப்படியே கழியட்டும். உனக்குள்ள உத்தம குணத்தினால் என் மேலுண்டாகி யிருக்கும் அன்பைப் பயன் படுத்தவேண்டுமானால் காணாது போன குழந்தையைத் தேட முயற்சித்து அதை உன் குழந்தையைப் போலப் பார்த்துக்கொள். அவ்வளவுதான் யான் வேண்டுவது. என்னை இனி வேண்டாதே.

நவநீதம்:—அக்கா! என்ன சொன்னாய்! கலகக்காரச் சண்டாளர்களின் வார்த்தையைக் கேட்டு தன் சுய மதியை இழந்து அறியாமையால் செய்துவிட்ட துன்பத்தை எண்ணி நமது நாதர் வருந்தாமலில்லை. அந்த ரகஸியத்தை யானறிவேன். உனது குழந்தை 18 மாதம் கழித்துப் பிறந்ததென்ற செய்தியையும் உனக்கு வீட்டிலிருந்து செல்லும்போதே கர்ப்ப மென்றும் அவர் இப்போது மறியமாட்டார். யானே இப்போதுதான் உன் வாயினால் கேள்வி

யுற்றேன். மற்ற விஷயங்கள் முற்றும் நான் நமது காதலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆகையால் நீ இனிமேல் தடை சொல்லாது இவ் வாடையை அணிந்துகொள் இனியும் நம் நாதர் உன்னைப் புறக் கணிக்க எண்ணினால் அடுத்த நிமிடம் என்னையும் உனக்குத் துணை யாக இக் கோலத்தில் காணலாம். இது உண்மை. அக்கா! உம். என் சொல்லைக் கேளு. மாமியார் உனக்குச் சொல்லிய வார்த்தை யைப் போல எண்ணாதே! இனி யான் உன்னைவிட்டு 5 நிமிஷமும் இருக்கமாட்டேன். நீ உண்டால் தான் நான் உண்பேன். இல்லை யேல் பட்டினியே கிடப்பேன்.

கல்யாணி:—அம்மா! நவநீதம்! உன்னுடைய மேன்மையான அன்பு பொருந்திய வார்த்தையை யான் கேட்பதா! என் வினையை எண்ணி வாளாவிருப்பதா! எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லையே! நவ நீதம்! நான் சொல்வதைக்கேள். உன்னுடைய வார்த்தையைத் தட்டுவதாக எண்ணாதே. என் மனமென்னவோ எல்லாவற்றையும் வெறுத்துவிட்டது. என் ப்ராண நாதர் முகத்தில் விழிக்கவும் வெட்கமாயிருக்கின்றது. என்னுவல் தீருவதற்குப் பார்த்தாகிவிட் டது; ஆகையால் என்னை விட்டுவிடு. இளமைப்பருவம் நிறைந் திருந்து இன்பமனுபவிக்கும் காலத்திலேயே என்மீது ப்ரேமை யில்லாதிருந்த அவருக்கு இத்தகைய சீரழிந்து சிரித்துவிட்ட என் மீது இனிமேல் எங்கேனும் அன்பு உதிக்குமா! ஒருபோது மில்லை. என் விதி இவ்வளவுதான். ஒரு குற்றமும் செய்தறியாத பாவி என்மீது குற்றமில்லை என்பதைக் கூறமாட்டாது வாளாவிருந்த அவர் என்னை கண்ணெடுத்தும் பார்ப்பாரா! எனது முடிவு இவ்வளவு தான் என்று தீர்மானித்தாகிவிட்டது. பாவி என்னால் நீ பாழா காதே! எவ்விதமேனும் அவர் நன்றாகவிருந்தால் அதுவே நமக்கு முக்கியமானது. என்னைத் தொந்தரவு செய்யாது விட்டுவிடு.

நவநீதம்:—அக்கா! நீயோ நன்றாய்த்தெரிந்தவள். நீ அனுப வித்த துன்பத்தின் முதிர்ச்சியால் அவ்விதம் தோன்றுவதும் கூறு வதும் சகஜம். நமது நாதர் செய்தது முற்றும் மிகவும் மடைமை யான காரியம்தான். அதற்கு யார் ஒப்புவார்கள்? அவர் தானாக வேண்டுமென்று செய்தவையல்ல. அவற்றை நீயே யறிவாய்.

அக்கா! கொண்ட கணவன் கொடியவனுகியபோதும் பெண்டான வள் அவன் கொடிய செய்கையைப் பொறுப்பதுதான் கடமை. அதை நான் கூறவேண்டுமா! உனக்கே தெரியும். ஆகையால் நீ பழைய விஷயங்களை எல்லாம் மறந்துவிட்டு புனர்ஜன்மமெடுத்துப் புனர்விவாகம் செய்துகொண்டதுபோலவும் இருக்கவேண்டும். இதோ இந்தா!" என்று கூறிக்கொண்டே தன் கையிலிருந்த வளையல்களில் இரண்டைக் கழட்டிக் கல்யாணியின் கையிலளித்துத் தன் கழுத்திலிருந்த சங்கிலிகளில் இரண்டு வடத்தைக் கழட்டி அதையுமளித்து, தன் வைரக்கம்மலையும் ஒரு மூக்குத் திருகாணியையும் கழட்டிக்கொடுத்து இவைகளை நீ முதலில் அணிந்துகொள். நாளையே ஊருக்குச்சென்றதும்புதிதாய் நான் வாங்கிக்கொள்கிறேன். அக்கா! என்ன பேசாதிருக்கிறுய்! உம். அணிந்துகொள்; நேரமாகிறது, ஆஸ்பத்ரிக்குச் செல்லவேண்டும்—என்றுள்.

கல்யாணி:—அம்மா! உனது குணத்தை நான் என்னவென்று கூறுவேன்? என்னுல் இன்னதென்று பேசவும் தெரியவில்லையே! நவநீதம்! என்மீது உனக்கு உண்மையான அன்பிருக்கும் பக்ஷத்தில் என்னை மன்னித்து நான் சொல்வதைக் கேட்டுப் பின்னர் சொல்லு. என் வயிற்றிற்பிறந்த சிசுவை இழந்து என் மனம் எரியும்போது எனது கட்டைக்குப் பூஷணமும் வேண்டுமா! என் குழந்தையின் தகவல் தெரிந்த பின்னர் வேண்டுமானுல் உன்னிஷ்டப்படி செய்கிறேன். அம்மா! இனி என்னைத் தொந்தரவு செய்யாதே! நான் சொல்வதற்காகக் கோபித்துக்கொள்ளாதே! என் குழந்தையை இழந்த துக்கம் எனது மற்ற எல்லா துக்கத்தையும் விட அதிகமாகப் பாதிக்கின்றது. ஏனெனில் அது தத்ருபம் அதன் பிதாவின் சாயலையே உரித்துக்கொண்டிருக்கும். அதை நேரில் நீங்கள் காண்பதற்கில்லாது போயிற்றே என்று மிகவும் வருத்தமாகவிருக்கின்றது. அக்குழந்தை துன்மார்க்கச் செய்கையால் பிறந்ததாயின் நமது நாதரின் உருவத்தை உரித்துக்கொண்டு வருமா! அதை எல்லோரும் பார்த்துத் திருப்தியடைவதற்கில்லாது போய்விட்டதே என்று என்னுள்ளம் துடிக்கின்றது. அந்த குழந்தையின் வலது கண்ணில் வெள்ளை முழியில் அழகிய மச்சமும் அதன் பிதாவைப்போலவே

அதற்கும் உண்டு. உம். எல்லாம் என் வினைதான். அக்குழந்தை ஒருக்கால் எங்காவது தப்பிப் பிழைத்து வளர்ந்து வருமாயின் யான் உனது வேண்டுகோளின்படிச் செய்கிறேன். இப்போது என் மனம் இடங்கொடுக்கவில்லை.'' என்றாள்.

அவள் மனம் நொந்து கூறும் வார்த்தைக்கு மறுப்பு கூறமாட்டாத நவநீதம் அந்த நகைகளைத் தானே எடுத்து அணிந்துகொண்டு "சரி! இனிமேல் ஆஸ்பத்ரிக்கு வா!'' என்றாள்.

கல்யாணி:—அம்மா! நான் ஆஸ்பத்ரி யிருக்குமிடத்தைக் காட்டிவிட்டு வந்துவிடுகிறேன். என் மீது கோபித்துக்கொள்ளாதே! எனக்கு வெட்கமாயிருக்கின்றது. அவர் இன்று ப்ரக்ஞையுடனிருப்பார்; ஆகையால் நான் அவர் எதிரில் வரமாட்டேன்.

நவநீதம்:—அவரே உனக்கு இத்தகைய வேஷம் போட்டு வைத்திருக்கையில் அவரெதிரில் வருவதற்கு வெட்கமென்ன? அக்கா! அவ்விதம் கூறாதே! உன்னையவர் இக்கோலத்துடன் கண்டு வயிறெரியட்டும். சொல்வார் பேச்சைக் கேட்டு மோசம்போனோமே என்று வருத்தமுட்டும். என் மனந்தாங்காது துடிக்கின்றது.

கல்யாணி:—ஐயோ! அவரை ஏன் கூறுகின்றாயம்மா! நான் செய்த பாவத்திற்கு யார்தான் என்ன செய்வார்கள்? அவருடைய மதியை என் கர்மாவே மறைத்தது. உம். நடந்த செய்தியை ஏன் குறிக்க வேண்டும்? நீங்கள் சென்றுவாருங்கள். நான் வரவில்லை. அவர் நன்றாய்க் குணமாகி வந்தபிறகு வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம். நீ கோபித்துக்கொள்ளாதே. எனது மனம் படும் பாட்டையும் என்னிலைமையையும் எனக்கே விவரித்துச்சொல்லச் சாத்யமன்று'' என்று கூறிப்புலம்பினாள்.

அவளுடைய பரிதாபத்தைக் கண்டு சகியாத நவநீதம் அதற்கு மேல் தான் சற்று யோசித்தாள்; தனக்குள் ஓர்விதமான தீர்மானத்தை முடிவு செய்துகொண்டாள். பிறகு கல்யாணியின் இஷ்டப்படியே ஆஸ்பத்ரியைக் காட்டும்படி அவளைக் கேட்டுக்கொண்டாள். உடனே கல்யாணி புறப்பட்டாள். பிறகு எல்லோரும் அவளுடன்

ஆஸ்பத்திரிக்குச் சென்றதும், இதுதான் என்று காட்டிவிட்டு அவ்விடத்தைவிட்டுக் கல்யாணி போய்விட்டாள். நவநீதம் எல்லோருடனும் ஆஸ்பத்திரி அதிகாரியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உள்ளே போய் தனது நாயகன் படுத்திருந்த விடத்திற்குச் சென்றாள். அவன் அப்போது நினைவுடன் படுத்திருந்தமையால் அவன் நவநீதத்தைக் கண்டதும் "ஆகா! இதற்குள் உனக்குத் தந்தி சென்று வந்துவிட்டாயா!" என்றான்.

நவநீதம், கல்யாணியை தன் கணவன் செய்துவிட்ட சீர்மாரால் அவன்மீது சற்று கோபங்கொண்டாளெனினும் அவளுடைய அன்பு பூராவும் தன் கணவனின்மீது லயித்துவிட்டதாலும், அவனைக் கண்டதும் துக்கம் தொண்டையை யடைத்துக்கொண்டதாலும் அவள் புலம்பிக்கொண்டே "ஆ! ப்ராணநாதா! இதென்ன கோரமான படுக்கை! 8 நாளில் வருவதாகச் சொல்லிச்சென்று என்னை வருத்தி விட்டீர்களே! எனக்குத் தாங்கள் தந்தி எப்போது அடித்தீர்கள்? நான் நேற்றுமுதலே இவ்வூருக்கு வந்துவிட்டேனே. (வந்த வரலாற்றைக்கூறி) அந்த சாமியார் அகப்படவில்லை. பிறகு கோயிலின் ஓர் பாகத்தில் எனது குலதெய்வம் இருக்கின்றது. அந்த தேவதையே தங்களுடைய இருப்பிடத்தைத் தெரிவித்தது. என்ன செய்தி? தாங்கள் எங்கு சென்றீர்கள்? என்ன ஆபத்து உற்றது? விவரங்களைக் கூறுங்கள்". என்று வேண்டிக்கொண்டாள்.

இது கேட்ட முத்துக்ருஷ்ணன் "என் கண்ணே! உன்னுடைய மங்கலிய பலமே இந்த கண்டத்தில் யான் தப்பினேன். எனக்கு சற்றும் எதிர் பாராவிதமாக விபத்து நேர்ந்துவிட்டது. என்னவோ அதை என் கேட்கிறாய்! தற்போது அவ்வாபத்தினின்றும் ஓர் பண்டாரச்வாமிகள் என்னைக்காப்பாற்றினர். நவநீதம்! உனது குலதெய்வமென்றாயே! அது எது?" என்றான்.

நவநீதம்:—நாதா! என்ன ஆபத்துத்தான் நேர்ந்தது அதைக் கூறுங்கள். அதை எனது மனமும் அறியவேண்டாமா! தங்களுக்கு நேற்று முந்தின நாள் ப்ரக்ஞையே இல்லாமலிருந்ததாக எனது குலதெய்வம் கூறிற்று. அந்த தெய்வத்தைச் சொன்னால் போதாது,

தங்களையங்கு அழைத்துக்கொண்டுசென்று காட்டினுல்தான் விளங்கும். ஆகையால் பிறகு அழைத்துச் செல்கிறேன். நடந்த விஷயத்தைக் கூறுங்கள்.

முத்து—ஐயோ! நடந்த விஷயமாவது மிகவும் பயங்கரமானது. நான் ஊரிலிருந்து வந்து கொலைக்கேஸ் விஷயமாய் சில துப்புகளைக் கண்டுபிடித்தேன். அதற்குமேல் அந்த கொலைசெய்த மனிதனைப் பிடிக்கவேண்டிய ஏற்பாட்டுடன் குதிரையின்மீது செல்கையில் நான் செல்வதற்கு கொஞ்ச தூரத்தில் ஓர் மோட்டார்கார் என்னைத் தொடர்ந்து வந்தது. அதைக்கண்ட நான் குதிரையைத் திருப்பிப் பின் புறமாகச் செல்வதுபோல சிறிதுதூரம் சென்று பின்னர் ஓர் மரத்தடியில் குதிரையைக் கட்டிவிட்டு யான் மரத் தழைகளால் என் தேக முற்றும் கட்டி மறைத்துக்கொண்டேன். அப்போது இருள் சூழ்ந்துவிட்டதால் நான் பதுங்கிப் பதுங்கிச் சென்றேன். அதற்குள் மோட்டார்கார் ஓர் அடர்ந்த புதரின் மத்தியில் நிறுத்தப் பட்டது. உடனே அந்த காரை எவ்விதம் மறைத்தனர்களோ அது மறைந்துவிட்டது. அந்த இடத்தை யான் குறிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் சென்ற சிறிது நேரங் கழித்து அவ்விடத்திற்குச் சென்றேன். அங்கு ஓர் பெருத்த இரும்புப் பலகையால் மூடப்பட்டிருந்தது கண்டேன். நான் உடனே அதன் மீது காலை வைத்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். என் தேகம் முற்றும் முள் தைப்பது போல விருந்தது. வீரென்று வீரிட்டுவிட்டேன். அடுத்த நிமிஷம் யான் இருந்த விடம் திறக்கப் பட்டதும் அங்கு சுமார் நால்வர் வந்து என்னை நன்ருக அடித்து "அடேய் பயலே! போலீஸ் பயலே! உன் பெண்ஜாதியின் சாமர்த்தியத்தினுல் எங்கள் கூட்டத்தை முற்றும் வேருடன் அறுத்து விட்டதாகக் கர்வம் பிடித்துத் திரிந்தாயே! பயலே! உன்னைக் கொல்ல ஓர் காலன் உலகத்தில் இருக்கிறேன் பார்" என்று சுளீர், சுளீர் என்று ஒருவன் அறை விட்டான். அந்த உதையைத் தாங்கமாட்டாது மூர்ச்சித்துவிட்டேன். பின்னர் யான் கண் திறந்து பார்க்கையில் எத்தனை நாளாயிற்று என்றும் எனக்குத் தெரியாது. என்னை உயிர் போக்காத குற்றமாக இம்சை செய்தார்கள். என் கை கால்

களைக் கட்டி என்னைச் சிறையிலிட்டார்கள். அந்த கிராதகர்களின் கையில் யான் பாம்பின் வாயின் தேரை போலானேன். என்னுயிரே துடித்தது. தப்பித்துக்கொள்ளும் வழியே காணவில்லை. இவ்விதமே சில தினங்கள் சென்றன. எனக்கோர் யோசனை தோன்றியது. என் கால் கைகளைக் கட்டி யிருந்த சங்கிலி சற்று மெல்லியதாக விருந்தமையால் அதைக் கீழே தேய்த்துத் தேய்த்து வாய் வளையம் விட்டுவிடும்படியாகச் செய்துப் பல்லால் கடித்து ஒரு வளையத்தை நீக்கி மெல்ல கஷ்டப்பட்டு இழுத்து கை விலங்கைக் கழட்டி கால் விலங்கையும் எடுத்துவிட்டேன். நடு நிசி சமயமாய் விட்டது அப்போது. மெல்ல சந்தடி செய்யாமலெழுந்து அந்த சண்டாளர்கள் படுத்திருந்த அறைகளின் கதவுகளை வெளிப்புறத்தில் தாளிட்டுவிட்டு அங்கிருந்து தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடிக்கொண்டு வந்தேன். எனக்கு வழியும் தெரியவில்லை. மெல்ல தடவிக்கொண்டே வெளியிலிருக்கும் இரும்பு பலகையண்டையில் வந்தேன். அந்த இரும்பு பலகையைத் திறக்கத் தெரியாது வெகு நேரம் முயற்சி செய்தேன். உதயமோ ஆகிவிட்டது. அந்த பாவிகளோ எழுந்து கதவை இடிக்க வாரம்பித்துவிட்டார்கள். யான் அப் பலகையின் அடி பாகங்கள் முற்றும் தடவிக்கொண்டு கையில் தட்டுப்படும் வஸ்துக்களை ஆட்டியும் அமுக்கியும் இழுத்தும் பலவிதமாகச் செய்து பார்த்துக்கொண்டே வருகையில் சடக்கென்று கதவு மேலுக்குத் தூக்கப்பட்டது. உடனே யான் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவ்வழியாக வெளியில் வந்து கதவைத் தள்ளிவிட்டு ஓட்டமாக நடக்க வாரம்பித்தேன். அப்போது நன்றாக சூரியோதயமாகிவிட்டது. நான் சிறிது தூரம் நடந்து வருகையில் என் பின்னால் யாரோ வந்து என் மண்டையில் தடியால் ஓங்கி ஒரு அறை கொடுத்தது போலவிருந்தது. அவ்வளவுதான் நான் உயிரற்ற சவம் போல விழுந்துவிட்டேன். என்னுடைய மூளையே குழம்பிவிட்டது போலாகிவிட்டது. பிறகு யான் கண் விழித்துப் பார்க்கையில் இந்த ஆஸ்பத்ரியில் இருக்கக் கண்டேன். இன்றே எனது உணர்வைப் பெற்றேன். என்னை இங்கு கொணர்ந்துவிட்ட விவரத்தையு மறிந்தேன். ஆகா! அதோ வரும் பண்டாரமே என்னைக் காப்பாற்றியது" என்று கூறி "வாருங்கள். பண்டாரச்வாமிகளே!

வாருங்கள். தாங்கள் காலையில் கூறியபடி எனக்கு இப்பொழுது முற்றிலும் குணமாகிவிட்டது. தாங்கள் என்னைக் காப்பாற்றிய விஷயங்களைக் கூறலாமல்லவா!'' என்று கேட்டான்.

இதைக்கேட்ட பண்டாரம் நகைத்தவாறு பேசத்தொடங்கி "ஐயா! யான் ஓர் அநாதை. அனாதையாகிய நான் அநாதைப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலையில் உபாத்தியாயராக விருக்கிறேன். நான் வழக்கம்போல ஆற்றங்கரைக்கு ஸ்நானம் செய்யச் சென்றேன். அப்போது ஆற்றங்கரையோரமாய் சிறிது தூரம் உலாவிக் கொண்டே வனத்தின் இயற்கையழகைக் கண்டு களித்துக் கொண்டே சென்றேன். காலை நேரம் சிலுசிலுப்பான தென்றல் காற்று வீசியதால் யான் சிரமமின்றி சிறிது தூரம் காட்டிற்குள் புகுந்து நடந்து சென்றுவிட்டேன். நான் எவ்வளவு தூரம் சென்றேனென்று எனக்கே தெரியவில்லை, அப்படிச் சென்று கொண்டிருக்கையில் வெகு தூரத்தில் தங்களை அந்தப் பயல் அடித்ததையும் தாங்கள் வீறிட்டுக் கத்தியதையும் கண்டு அவ்விடத்தை நோக்கி ஓட்டமாயோடினேன். ஓர் பெருத்த கல்லைத் தூக்கி அந்த மனிதனின் தலைமீது போட்டு அவனை இழுத்து எனது மேலங்க வஸ்திரத்தினால் இறுகக்கட்டி, அப்படியே ஓர் மரத்துடன் பிணைத்துக் கட்டிவிட்டு உங்களைத் தூக்கித் தோள்மீது சாற்றிக்கொண்டு மெல்ல நடக்கமாட்டாது நடந்து சென்றேன். வழி தெரியவில்லை. இன்னும் பின்னால் யாரேனும் கண்டு துரத்தப்போகின்றாரே என்ற பயத்தால் கால்சென்ற வழி எல்லாம் நடந்து சென்றேன். சரியான வழி தப்பிவிட்டபடியாலும் தங்களைத் தூக்கிக்கொண்டு நடப்பதற்குச் சிரமமாயிருந்தபடியாலும் என்னால் நடக்கச் சக்தியற்று ஓர் மரத்தடியில் உட்கார்ந்துவிட்டேன். தெய்வகதியாய் சிறிது தூரத்திற்கு அப்பால் ஓர் கட்டைவண்டி செல்வதைக் கண்டேன். தங்களை மரத்தடியிலேயே விட்டுவிட்டு யான் ஓட்டமாக ஓடி அவ்வண்டிக்காரனிடம் நடந்த செய்திகளைக் கூறி உதவி செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டேன், அவன் அதற்கு இசைந்து என்னோடுகூட வந்தான். அவனும் நானும் தங்களைத் தூக்கிக்கொண்டு போய் வண்டியில் கிடத்தினோம். "இங்கு சற்று அருகாமையில்

திருக்கழுக்குன்றம் என்ற திவ்ய ஸ்தலமிருக்கின்றது. அங்கு ஆஸ்பத்திரியிருக்கின்றது. அந்த ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோய் விட்டுச் சிகிச்சை செய்யலாம்.'' என்று வண்டிக்காரன் கூறினன். உடனே நான் அதற்குச் சம்மதித்தேன். வண்டியை வேகமாய்விட்டு ஆஸ்பத்திரியை அடைந்து அங்கு தங்களை வைத்தியர் வசம் ஒப்பித்துவிட்டு யான் நேரே போலீஸ்டேஷனுக்குச் சென்று தாங்கள் இன்னாரென்று எனக்குத் தெரியாதாகையால் யாரோ ஒருவரை ஓர் துஷ்டன் அடித்துவிட்டான் என்று நடந்த தகவலைக் கூறினேன்.

அதைக்கேட்ட போலீஸ் அதிகாரியும், இன்னும் சிலரும் இந்த ஆஸ்பத்ரிக்கு ஓடிவந்து பார்த்து "ஆ! இன்ஸ்பெக்டர் முத்துக்கிருஷ்ணன் அகப்பட்டுவிட்டார்.''என்று சந்தோஷித்து ஆரவாரித்து என்னைப் புகழ்ந்துபேசி என்னையுமழைத்துக்கொண்டு அந்த கானகத்திற்குச் சென்றார்கள். நான் கட்டிவிட்டுவந்த கள்ளனைப் பிடித்துக்கொடுத்தேன். அவனை நன்ருக அடித்து இம்சித்து அவன் வாயைக்கொண்டே அங்கு காட்டில் பாதாள சுரங்கம் ஒன்றிருப்பதையும் அறிந்து அதில் அடைபட்டிருந்தவர்களையும் பிடித்து சிறையிலிட்டுவிட்டோம். அன்று முதல் நான் பாடசாலைக்குப் போகவே இல்லை. இன்றே தாங்கள் தெளிவடைந்துவிட்டதால் இனிமேல் நான் சென்றுவருகிறேன். என்னைக்காணது அவர்கள் தேடுவார்கள். உத்தரவுதானு?'' என்று வெகு வணக்கத்துடன் கேட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள். முத்துக்கிருஷ்ணன் பண்டாரத்திற்கு நன்றி யறிதலைத் தெரிவித்துப் பின் அவனிருக்கும் ஆசிரமத்தின் அடையாளங்களைக் குறித்துக்கொண்டு உத்தரவிட்டு அனுப்பினுன். பண்டாரமும் போய் விட்டான். பிறகு முத்துக்ருஷ்ணன் இன்னும் ஆஸ்பத்ரியிலேயே இருக்க நேர்ந்துவிட்டது. அந்த இரண்டு தினங்களும் நவநீதம் முதலிய எல்லோரும் கோயிலில் கிடைத்ததைப் புசிப்பதும் கல்யாணியுடன் இருந்து பொழுதைப் போக்குவதுமாக விருந்தார்கள். இரண்டு தினங்களும் சென்றன. மூன்ருவது தினம் வந்தது. அன்று உதயத்திற்கு முத்துக்ருஷ்ணனை அழைத்துக்

கொண்டுவந்துவிட்டார்கள். அன்று கோயிலில் ச்வாமி தரிசனம் செய்துவிட்டு ஊருக்குச் செல்வதென்று தீர்மானித்து எல்லோரும் கோயிலுக்குச் சென்றார்கள். நவநீதம் தன் தாய் தந்தை முதலியோரிடம் நடந்த விஷயங்களை தன்னுயகனிடம் தெரிவிக்க வேண்டாமென்று முன்னதாகவே சொல்லிவிட்டாள். ஆகையால் அவள் வெகு சாமர்த்தியமாய் தன் நாயகனை முதலில் செல்லவிட்டு மற்றவர்களெல்லோருடனும் பின்னால் செல்லலானாள். அங்கு ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு ப்ராகார ப்ரதக்ஷணமாய் வருகையில் கல்யாணி வழக்கம்போல புஷ்பங்களை கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் தலை நிமிர்ந்து பார்க்கவே இல்லை. அவ்வாறு குனிந்த தலை நிமிராமலும்,ஜடையும் காவி வஸ்திரமுமாயும் உட்கார்ந்திருக்கும் கல்யாணியை அகஸ்மாத்தாய் முத்துக்ருஷ்ணன் கவனித்தான். அவ்வாறு கவனித்ததும் திடுக்கிட்டு தடைகட்டிய நாகம்போல சற்று நின்று அவளையுற்றுக் கவனித்தான். அதற்குள் இவன் பின்னால்வரும் எல்லோரும் வந்துவிட்டார்கள். நவநீதம் ஒன்றையுமறியாதவள்போல அபிநயித்து "என்ன நாதா! ஏன் நிற்கின்றீர்கள் ? செல்லலாமே!" என்றாள்.

முத்து:—இதோ செல்கிறேன்.................நவநீதம்! இங்குவா. அதோ புஷ்பங்கட்டும் பெண்ணைப் பார்த்தாயா! சடையும் காஷாயமும் பக்தி வைராக்யமும் ஒன்று கூடியிருக்கின்றன. இவள் யார் உனக்குத் தெரியுமா ?

நவநீதம்;—(வியப்புடன்) இதென்ன ப்ராணநாதா! கோயிலில் போவோர் வருவோர் எல்லோரையும் நான் எப்படி அறிவேன் ? அவள் யாரோ எந்த பண்டாரச்சியோ! நமக்கேன் அந்த விவரமறியவேண்டும்? உம். செல்லுங்கள். அவளை என்ன பார்வை?

முத்து:—இல்லை கண்மணி! நீ முன்னொருநாள் என் மூத்த மனைவியைப் பற்றி என் ப்ராணனை எடுத்தாயே! அந்த விஷயம் எனக்கு இப்போது நினைவிற்கு வருகின்றது. அந்தப் பெண்ணின் சாயல் இவளுக்கு அப்படியே இருக்கின்றது போலத் தோன்றுகின்றது. அவளுக்கு இவள் ஏதேனும் நெருங்கிய பந்துவாக

விருக்குமோ அன்றி அவளாகத் தானிருக்குமோ! அவளாக விருந்தால் இவ்விதம் ஆண்டிச்சி கோலம் ஏன் கொள்ளவேண்டும்? இவளுக்கு ஒரு பெண் பிறந்ததாமே! அது எங்கிருக்கும்?

நவநீதம்:—என்ன! என்ன! தங்கள் மூத்த மனைவி போலிருக்கிறுளா? பேஷ் வெகு அழகு. இவள் யாராக விருந்தால் உங்களுக்கென்ன நடவுங்கள்.

முத்து:—இரு நவநீதம்! ஆத்திரப்படாதே. இவளைப் பார்த்தால் கல்யாணியைப் போலத் தானிருக்கிறது; எனக்குச் சந்தேகமாகின்றது.

நவநீதம்:—சரிதான். அப்பனுகி, குப்பனுகி, அழகிய மணவாள தாசனுகிவிட்டீர்களோ! இவள் தங்களுடைய மூத்த மனைவியாயிருந்தாலென்ன, வேறு யாராக விருந்தாலென்ன? நீங்கள் இங்கு நிற்கவேண்டாம்; செல்லுங்கள். உங்களிடம் எனக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது.

முத்து:—கண்ணு! சந்தேக மென்ன வந்துவிட்டது? இவள் கல்யாணிதான். நீ அன்று செய்த பிடிவாதத்தைக் கண்டு நான் பயந்துவிட்டேனே! அவளை இதோ உனக்குக் காட்டுகிறேன் பார்.

நவநீதம்:—ஐயோ! அனியாயமே! அவளை நான் பார்க்கவும் வேண்டாம்; நீங்களும் அவளைப் பார்க்கவேண்டாம். நீங்கள் முதலில் நடவுங்கள். நீங்கள் அவளுடன் பேசுவதற்கு முயற்சிக்கின்றீர் போல விருக்கின்றது. ஐயோ! நான் கண்டு சகிக்க மாட்டேன்; செல்லுங்கள்.

முத்து:—இதென்ன வேடிக்கை நவநீதம்! நீயுமா இவ்விதம் பேசுவது? நான் அவளுடன் பேசினுல் உனக்கென்ன வருத்தமா! நான் சொல்வதைக் கேள். கண்மணி! அவளைப் பார்த்தால் எனக்குக் கல்யாணி என்றே தோன்றுகின்றது. அவளுடைய பெயர் ஆதியில் கெட்டிருந்த தென்ன! இப்போது இக் கோலம் பூண்டிருப்பதென்ன! இது தான் எனக்குத் தெரியவில்லை. ஏன் அவளை யாதரிக்க எவருமில்லையா? ஐயோ பாவம்! அவளைப் பார்க்க

எனக்குப் பரிதாபமாக விருக்கிறது. வயிற்றில் ஏதோ செய்கிறது. நீ சற்று இரு; நான் இன்னுன் என்பதைக் காட்டிக்கொள்ளாமல் அவளுடைய நிலைமையை விசாரித்துக்கொண்டு வருகிறேன். வித்யாசமாக எண்ண வேண்டாம். அவளுடைய விசனகரமான முகத்தைக் காண என் மனம் என்னை யறியாது வருந்துகின்றது.

நவநீதம்:—(தனக்குள் மகிழ்ந்தவாறு) ஏதேது விவகாரம் விஞ்சி விட்டதே! சரிதான். இத்தனை நேரம் அவள் யாரோ என்று சந்தேகித்தாயிற்று. இப்போது அவள் மனைவி என்று தீர் மானித்தாகிவிட்டது. இனிமேல் குலாவ வேண்டியது தான் பாக்கி. இதுகாறும் அவளைப் பிடித்த சனியன் என்னைப் பிடிக்கப் போகின் றதா என்ன! இத்தனை நாள்வரையில் அவளை நீங்கள் வைத்திருந்த வரிசைக்கு இப்போது விசாரணை இல்லாமல் தான் அழுகிருளோ! கலகக்காரப் பாவிகள் வார்த்தையைக் கேட்டு அவளை ஆண்டிச்சி யாக்கி சந்தியில் சங்கடப்பட விட்டாயிற்று. இனிமேல் நீங்கள் விசாரிப்பதற்கு வெட்கமாயில்லை! போதும்! போதும்! நான் இன்னுள் என்பதை யறிந்தால் என்மேலும் உங்கள்மீதும் ஆத்திரங் கொண்டு திட்டுவாள். இனிமேல் நீங்கள் அவளுடன் பேச யான் சகியேன். உம். வருகிறீர்களா, இல்லையா! அவளைத் தாங்கள் பார்த்ததே அனர்த்தமாகிவிட்டது. கிளம்புங்கள். சிவனே என்று கைங்கரியம் செய்பவளை ஏன் நீங்கள் பார்க்கவேண்டும்? அவள் உண்மையில் உங்கள் மனைவியோ, எவளோ?

முத்து:—நவநீதம்! இன்று நீ பேசுவதே வேறு தினுசாக விருக்கின்றதே! அவ்வள் கல்யாணி என்பதற்கு ஐயமே இல்லை. நீ அன்று பேசியதற்கு முற்றும் மாறுபட்டு இன்று பேசுகின்றுயே! அவளுடன் பேசியதனுலேயே என்ன ஆய்விட்டதென்று எண்ணி ளுய்? அவள் ஆண்டிச்சிபோல அலைவதற்குக் காரணம் யாது என்பதை நான் ஒரு நிமிடத்தில் தெரிந்துகொண்டு வருகிறேன். இல்லாவிட்டால் நீயும் கூடவா. நாம் யாரோ வழிப் போக்கர் போல விசாரித்துவிட்டுப் போய்விடலாம்.

நவநீதம்:—வெகு அழகுதான். நீங்கள் அவளுடன் பேசக்

கூடாதென்றால் என்னையும் அழைக்கின்றீர்களா! அன்று உங்கள் மனத்தைச் சோதிக்கவும் அவளுடைய வரலாற்றை யறியவும் நான் வேஷம் போட்டேனே யன்றி உண்மையாகச் சொல்லவில்லை. நான் செல்கிறேன். நீங்கள் அங்கு சென்றால் பிறகு என்னைக் காணமாட்டீர்கள்.—என்று வெகு முடுக்காகக் கூறிக்கொண்டே விசையாய் நடந்துவிட்டாள். இதைக் கேட்ட முத்துக்ருஷ்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நவநீதத்தின் பின்னால் செல்வதா, அன்றி அவள் சென்றால் செல்லட்டுமென்று எண்ணிக் கல்யாணியை விசாரிப்பதா! என்ற இரு கேள்விகளையும் தன் மனத்தைக் கேட்டுக்கொண்டு ஒன்றையுந் துணிந்து செய்யமாட்டாது இருதலைக்கொள்ளிபோல அவன் நின்றுவிட்டான்.

16--வது அதிகாரம்.

எண்ணரிய இன்பம் கண்ணனின் செயலே!

பண்டாரத்தைக் காணவில்லை என்று தேடி யலைந்தோடிய யாவரும் ஆற்றை யடைந்து பார்க்க, அவனைக் காணாது எல்லோரும் திடுக்கிட்டார்கள். "ஐயோ! பண்டாரம் குளிக்கையில் விழுந்திருப்பானோ! என்ன செய்வது?" என்று எண்ணி நீந்தத்தெரிந்தவர்கள் ஆற்றிலிறங்கி தேடினார்கள். அங்கு ஒன்றும் அகப்படவில்லை. எல்லோருடைய திகிலும் அதிகரித்துவிட்டது. அவன் எவ்விதம் காணாது போயிருப்பான் என்ற செய்தியை ஒருவராலும் அறிந்துகொள்ளக் கூடவில்லை. பள்ளமான சொருகு இடங்களில் எங்கேனும் இழுத்துக்கொண்டுபோய்விட்டதோ என்று எண்ணி வலைஞர்களை விட்டுத் தேடச் செய்தார்கள். அதற்கும் அகப்படாமையால் அங்குள்ள நாற்புறமும் சுற்றிப் பார்த்தார்கள். எங்கு பார்த்தாலும் ஒரே கானகமாயிருக்கின்றபடியால் அதில் ஒன்றும் தகவல் தெரியவில்லை. பிறகு எல்லோரும் தீராத கவலையுடன் ஆசிரமத்திற்கே வந்து இச் செய்தியைத் தலைவியிடம் தெரிவித்தார்கள்.

இது கேட்ட தலைவி தனக்கு மிகவும் வேண்டிய மனிதர்களே போய்விட்டது போலான விசனத்தை யடைந்து "ஐயோ! இனி நாம் எவ்விதம் அவரிருக்கு மிடத்தைக் காண்பது? அவர் எவ்விதம் தான் மறைந்து போயிருப்பரோ? ஒருவேளை இங்கிருக்கப் பிடிக்காது சொல்லாது போய்விட்டனரோ! அவ்விதம் செல்வதாயினும் நமக்கும் தெரிவிக்காது போகமாட்டாரே! இது என்ன க்ரகசாரம்! ஆகா! அவருடைய அருமையான கானத்தை இனிமேல் எப்படிக் கேட்டு

ஆநந்திப்பேன்? என்ன கானம்! என்ன கானம்!" என்று பலவித மாகக் கூறிப் பிரலாபிக்கின்றாள். பண்டாரத்தைக் காணவில்லை என்று கேட்ட பெண்களெல்லோரும் வருத்தமுற்றார்கள்.

நமது வனஜவல்லி தன்னை யறியாது கண் கலங்குகின்றாள். "ஆ! பண்டாரம் பாடுவதுபோலக் குரல்கேட்கின்றதே!" என்று தனக்குள் அலற்றுகின்றாள். ப்ரமை கொண்டவள் போல "வழியோடு செல்வோர் எல்லோரும் பண்டாரமாக விருக்கலாகாதோ! ஆகா! அவர் யாரோ மகா ஞானி. நாம் யாரோ அனுதைப் பரதேசி. அந்த பண்டாரத்தினிடம் ஏன் இத்தகைய பற்று உண்டாகவேண்டும்? அவருடைய இனிமையான கானத்தை மீண்டும் என்று கேட்போம்? அவருடைய அருமையான பாடல்களின் அருமையை என்று கேட்போம்? பண்டாரத்தின் உருவத்தை என்று காண்போம்?" என்று தனக்குள்ளாகவே எண்ணி விசனிக்கின்றாள். அன்றும் மறுநாளும் சென்றுவிட்டன. பண்டாரத்தின் செய்தி யொன்றும் தெரியவில்லை யாதலால் அவன் இவ்விட மிருக்கப் பிரியப்படாது போய் விட்டான் என்று எல்லோரும் எண்ணிவிட்டார்கள்.

மூன்றுவது நாள் இரவு எல்லோரும் படித்துக்கொண்டே இருந்தார்கள். நமது வனஜவல்லி தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து வெளியில் வந்தாள். அப்போது வீதியில் யாரோ நிற்பதைக் கண்டாள். உடனே கவனித்துப் பார்க்கையில் பண்டாரம் நிற்பதைக் கண்டு வெகு சந்தோடங்கொண்டு தடதடவென்று வீதிக்குச்சென்று கதவைத் திறந்துவிட்டுப் பண்டாரம் உள்ளே வந்ததும் அவனை நமஸ்காரம் செய்து எழுந்து தங்கப்பதுமைபோல அவனெதிரில் நின்று "ஆகா! இதென்ன ஆச்சரியம்! இரண்டு நாட்களாக எங்கு சென்றிருந்தீர்கள்? எங்கள் தலைவி உங்களைக்காணுது வருந்தியது கொஞ்சமல்லவே! எப்போதும் பாடிக்கொண்டே வரும் தாங்கள் இன்று மவுனியாய் வந்த காரணமென்ன? இதோ என் தலைவியை அழைத்துவருகிறேன்". என்று கூறிவிட்டுக் கிள்ளைபோல உள்ளே மறைந்தாள். பண்டாரம் ஆசிரமத்திற்கு வந்தநாள் முதலாக ஒரு பெண்ணையும் கண்ணெடுத்துப் பார்த்தவனல்லன். தலைகுனிந்த வண்ணம் வருவதும் செல்வதுமாக விருந்தானேயன்றி மற்றபடி தலைவியுடனும் முகம் நிமிர்ந்து பேசியறியாதவன். அன்றே நமது வனஜவல்லியைப் பண்டாரம் அகஸ்மாத்தாகக் கவனிக்கநேரிட்டது. அவ்வாறு நேரிட்ட சமயம் அவளையவன் பார்த்ததுதான் உடனே தலைகுனிந்துகொண்டான். அவனுடைய தோற்றமும் எண்ணமும் இருதயமும் ஒன்றுகூடி எல்லாம் மாறுதலைபடைந்துவிட்டன. அவனுடைய ஹ்ருதயமாகிய பெட்டியில் இம்மின்னிடையாளின் உருவம் உத்தர க்ஷணத்தில் அடக்கமாகிவிட்டது. அவளுடைய வசனத்தைக்

கேட்டதும் விளக்குத்திரியைத் தூண்டிவிடுவதுபோலவாயிற்று. அன்னிலேமையில் அவன் மற்றுமொருதரம் தலே நிமிர்ந்து பார்த்தான். அத்தருணமே அப்புள்ளிமான் துள்ளி மறைந்ததைக் கண்டான். ஒன்றும் தோன்ருத சித்தத்தினனுய் நின்ருன். அடுத்த நிமிஷம் தலேவியும் அம்மாதரசியும் வெகு மகிழ்ச்சியோடு அவ்விடத்திற்கு வந்தார்கள். அவ்வாறு வந்தவர்கள் பண்டாரத்தைக்கண்டு "ஆ! பண்டாரம்! இதென்னவிது! இரண்டு நாட்களாக எங்கு சென்றுவிட்டீர்கள்? உம்மைக்காணுது நாங்கள் தவித்தது கொஞ்சமன்று; தேடாத விடம் பாக்கி இல்லே. என்னவோ பலவிதமான எண்ணங்கள் என் மனத்தில் உதித்து வருத்திவிட்டன. எங்கு சென்றுவிட்டீர்? என்று வெகு வாஞ்சையுடன் கேட்டாள்.

இதைக்கேட்ட பண்டாரம் "அம்மணீ! யான் வழக்கம்போல ஸ்நானம் செய்வதற்குச் சென்றேன்! (நடந்த வரலாற்றை ஆதியோடந்தமாய்க்கூறி) எதிர் பாராது இவ்விதம் நேர்ந்ததால் இரண்டு நாள் தாமதிக்க நேர்ந்துவிட்டது. ஏதோ ஓர் உயிர்போகவிருந்ததைக் கடவுள் காப்பாற்றினர். எல்லோரும் நித்திரை செய்யும் சமயமோ, என்னவோ என்று நான் பாடாது மவுனமாய் நின்றேன்." என்று வார்த்தைகளாடுகின்ருனேயன்றி அவன் மனம் சுத்தமாகக் காணப்படவில்லே. வனஜவல்லியை அவன் தன்னேயறியாமலேயே பார்க்கிருன். உடனே தலேகுனிகின்ருன். அவனுடையகட்டுக்கு அடங்காமல் விழிகள் சுழலுகின்றன. தன்னே அடிக்கடி பண்டாரம் பார்க்கிருன் என்பதை வனஜவல்லியும் தெட்டெனத் தெரிந்துகொண்டாள். மகாமதியூகியாகிய வனஜா அவ்வமயம் தான் அங்கிருக்கலாகாதென்று எண்ணி சடக்கென்று உள்ளே போய்விட்டாள். அபாரமான சாமர்த்தியத்துடன் வனஜவல்லி உள்ளே சென்றுவிட்டதையறிந்த பண்டாரமும் தனக்குள் வியந்தான். அதன்மேலவன் உத்தரவு பெற்றுகொண்டு போய்விட்டான். அன்று இரவு முற்றும் பண்டாரத்திற்குச் சரியானபடி நித்திரை கொள்ளவில்லே. அவனுடைய மனவிரக்தியும், துல்லியமான பக்தியும் நிறைந்த மனத்தில் அன்று ஏதோ ஒருவிதமான களங்கமும் கண்டறியமாட்டாத நூதன வேதனேயும் கப்பிக்கொண்டு பண்டாரத்தை இம்சையிலாழ்த்திவிட்டன. ஏதேதோ மனோராஜ்யத்தை யமைத்து மானஸீகக்கோட்டை கட்டிக்கொண்டு இரவை யோட்டினுன். வனஜவல்லியின் நிலேமையும் அவ்வாறே இருந்ததென்று கூறுவதுமிகையாகும்.

* * * * *

இது இங்ஙனமிருக்க முத்துக்ருஷ்ணன் ப்ரமைகொண்டு நின்றுவிட்டதைக்கண்ட நவநீதம் தனக்குள் பரம சந்தோடத்தையடைந்து, "ஆகா! சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது. என்று

எண்ணிக்கொண்டு அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் முகத்தைச்சுளித்தவாறு பேசத்தொடங்கி "அட க்ரகசாரமே! இதென்ன கர்மகாண்டம்? அவளை நீங்கள் விடப்போவதில்லைபோலவிருக்கின்றதே! பேஷ் வெகு ஒழுங்காகவிருக்கின்றது! ஆதிகாலத்தில் கற்பழிந்த காரிகையாகவிருந்த அம்மங்கையே இப்போது பரம உத்தமியாகிவிட்டாளோ?" என்று கூறியவாறு அப்புறம் திரும்பிக் கொண்டு இரண்டடி நகர்ந்தாள்.

இதற்குள் முத்துக்ருஷ்ணன் "என் கண்மணி! நவநீதம்! இவ் விஷயத்தில் நீ இவ்வித பிடிவாதம் செய்யாதே! அந்தப்பெண்மணியின் நிலைமை இவ்விதமானதற்குக் காரணம் யாதென்றுமட்டும் கேட்டுத்தெரிந்துகொண்டால் போதுமானது. அவளுக்குப் பிறந்த சிசு என்னவாயது என்று கேட்டுத் தெரிந்துகொண்டால் போதும். ஏனெனில்..........................சரி. பிறகு காரணங்கூறுகின்றேன். நீ என் கண்ணல்ல!

ஏமாவதி:—(நவநீதத்தினிடம் சென்று அவளது செவியுடன்) அடி! நவநீதம்! இதென்ன சோதனை! அவருடைய மனத்தை இவ் விதமலையவிடுகின்றாயே! போதுமடி! அடுத்த நிமிடம் ஒருக்கால் அவரது மனம் மாறிவிட்டால் அப்போது என்ன செய்வாய்?

நவநீதம்:—(இரண்டு கஜ தூரத்தில் தன் தாயை அழைத்துச் சென்று பேசத்தொடங்கி) அம்மா! தருணத்தையான் அறியமாட்டேனே! அவருடைய மனத்தின் தற்போதியநிலைமை நன்கு உணரும் பொருட்டல்லவா யானிவ்விதம் செய்கிறேன். அவருடைய இச்சைப்படிக்கு திடீரென்று முதலிலேயே விட்டுவிடக்கூடாது. அவ்விதம் செய்வதால் அதில் சுவாரஸ்யமில்லை. அவர் மனம் உடனே மாறுபடாதிருப்பதற்கு இது ஓர் தந்திர வழியாகும். அம்மா! எந்த காரியத்திற்கும், எந்த பொருளுக்கும், எந்த பேச்சிற்கும், எந்த விஷயத்திற்கும் ஓர் கௌரவமும், பிகுவும், மூடுமந்திரமும் இருந்தால்தான் அதற்கு ஓர் தனித்த மதிப்பும் அவைகளிடத்தில் ப்ரத்யேகமான பற்றும் உண்டாகும். திறந்த பெட்டிக்கு மதிப்பு உண்டா! பூட்டியபெட்டியில் பொருளில்லாவிடினும் அதற்கல்லவோ மதிப்பு! அதையல்லவோ கள்ளர் கண்கள் மெள்ளத்தாவும். அதையன்றோ வஞ்சகமுடைய நெஞ்சர் மறைத்திட எண்ணுவர். திறந்து கிடக்கும் பெட்டியில் மர்மமான அறையமைத்து அதில் ஆயிரம் பவுன் வைத்தாலும் அதற்கு அபாயமுமில்லை; மதிப்புமில்லை. அதே போல எந்த விஷயத்திற்கோ, காரியத்திற்கோ, பிகுவும் முறைப்பும் இருந்தால்தான் அந்த விஷயங்களை அவசியம் கண்டறியவேண்டுமென்று ஓர் ஊர்ஜிதமான எண்ணமும், தீவிரமான பிடிவாதமும்

தானாக உத்பவித்து லக்ஷத்தையளிக்கும். ஆதலால் இவருடைய கருத்தை இவ்விதம் திருப்பும்பொருட்டே யான் இந்த பக்கமாக அழைத்துவந்தேன். என்னிஷ்டப்படி அவளைக் காணவைத்தேன், அவர் மனத்தை மாற்றியும்விட்டேன். இனிமேல் அவர் இஷ்டம் போல விடுவதற்கு இது சமயமல்ல. அதற்கின்னும் சில வேலைக ளிருக்கின்றன. அவர் செய்த காரியத்தை அவரே எண்ணி உரு கும்படியான நிலைமையில் அவரைக் கொணர்ந்த பின்னரே மற்ற வற்றைக் கவனிப்பேன். இப்போதே அவர் மனம் பதறுகின்றது. அவருடைய இருதயம் துடிக்கின்றது. அந்த குறிப்பு முகத்தில் எவ்வாறு விளங்குகின்றது பார். நன்றாகப் பசித்தவனுக்கே தின் பண்டத்தின் அருமை தெரியும். அதுபோல தான் செய்துவிட்ட மதியீனமான காரியத்தை எண்ணி சிந்தித்த பின்னரே அவரது பூர்வ பகைகள் விலகி புனர் அன்பு பிறக்கும். நீ இந்த வேடிக்கை களை எல்லாம் பார்த்துக்கொண்டு பேசாதிரு.

முத்து:—ஆகா! இதுவென்ன புதிது புதிதான தோற்றங்கள் மனத்தின்கண் எழுந்து உலவுகின்றனவே! நவநீதம் நமது வாக்கி யத்திற்கு மறுத்து ஒருபோதும் சொல்லியறியாள். அத்தகைய உத்தமி இன்று மட்டும் ஏன் எனக்கு எதிர் முகமாகவே பேசுகின்ற னள்! ஒருக்கால் அந்த கல்யாணியை இன்னாரென்று தெரிந்து கொண்டு தான் நம்மைப் பரீக்ஷிக்கின்றாளோ! அன்றி உண்மையி லேயே அவளிடம் பேசுவதற்குச் சம்மதியாது இவ்விதம் சொல் கின்றாளோ! ஒன்றும் தெரியவில்லையே! இதன் உண்மையை எவ் விதமறிவது? ஆ! அதோ அவளும் அவளுடைய தாயாரும் தனித் துச் சென்று ஏதோ பேசுகின்றார்களே! அது என்ன விஷயமாக விருக்கும்? ஒருக்கால் என்னைப் பற்றி ஏதேனும் தப்பிதமான அபிப்பி ராயப்பட்டுப் பேசிக்கொள்கிறார்களா! இதென்ன பெரிய தரும சங்கடமாகிவிட்டதே! நாமும் இதுபரியந்தம் இவ்விடத்திலேயே நிற்கின்றோம்; அந்த மாது தலை நிமிர்ந்தும் பார்க்கவே இல்லை. இவ ளுடைய முகத்தை நிமிர்ந்தாலும் இவள் தான் கல்யாணியா அல்லவா என்பதை உறுதி செய்துகொள்ளலாம். அம்மாது இம் மண் மீதிலிருப்பது போலவே எண்ணாது சமாதியாக விருக்கின் றாளே! அந்தோ! எத்தகைய பெருத்த மழை யடித்தால் கூடல் வாய்த் தண்ணீர் ஆனையின் துதிக்கையைப் போலக் கொட்டும்! அதே போல இவளுடைய மனத்தில் எத்தகைய அபாரமான சோகம் நிரம்பி இருப்பின் இரு விழிகளிலும் சுனையோடுவது போல நீர் ஓடி வழிந்து புஷ்ப மாலைகளை உலரவிடாது நனைக்கும்? ஆகா! இதுவும் ஓர் விநோதகரமான காட்சியாகவே இருக்கின்றது. சீச்சீ! என்ன கோரமான சம்பவம்! கண்ணீர் மாலைமாலையாக ஓடுகின்றது என்று கூறக் கேட்டதுண்டு. பரிமளம் மிகுந்த இப் புஷ்பமாலையுடன்

பரிதாபம் மிகுந்த கண்ணீர் மாலையும் கலந்து இரு மாலையும் நறு மணங் கமழ்ந்த ஒரு. மாலையாகிப் பெருமானின் திரு மார்பில் திருவுரு அலங்காரமாகப் போகின்றது போலும். அடாடா! பரிதாபம்! பரிதாபம்! இவள் உண்மையில் கல்யாணியாகவே இருப்பின் இவளுடைய உண்மையான வரலாற்றை அறிந்தே தீரவேண்டும். ஆகையால் இப்போது நாம் நவநீதத்தை விரோதித்துக் கொள்ளாது அவள் பின்னுடன் சென்று விடுவோம். இன்று இரவு நாம் மட்டும் தனியாக வெளியில் எங்கேயோ செல்வதாகக் கூறிவிட்டு இவ்விடம் வந்து தகவல் தெரிந்துகொள்வோம். இதுதான் சரியான யோசனை என்று தீர்மானித்த வண்ணம் அவ்விடம் விட்டு நவநீத மிருக்கு மிடத்திற்குச் சென்றான்.

இவனைக் கண்ட நவநீதம் ஒருவாறு முகத் தோற்றத்துடன் நகைத்த வண்னம் "அடாடா! அந்த விடத்தை விட்டு வருவதற்கு மனம் வந்ததா! அன்றி மீண்டும் ஏதேனும் பேசிவிட்டுப் போக வந்தீர்களா!" என்று கூறிக்கொண்டே நடந்தாள். இதுகேட்ட முத்துக்ருஷ்ணன் "கண்மணீ! உன்னுடைய அழகு பொலிந்த வாயினின்றும் வரும் முத்தான சொற்கள் முற்றும் இன்று வேறு புதிய விதமாயும் நான் என்றும் கண்டுங் கேட்டு மிராத வண்ணமாயு மிருக்கின்றன. இங்கு நடந்த சகல சம்பவங்களும் உன்னுலேயே நடந்தனவென்பதற்குச் சிறிதும் ஐயமே இல்லை. ஏனெனில் எனது மூத்த மனைவியை யான் மணந்ததும் அவள் விஷயமாகப் பின்பு நடந்த விஷயங்கள் யாவும் எனது நினைவை விட்டொழிந்து கனவாகி வருஷங்கள் பலவாகிவிட்டன. மறைந்து பட்டொழிந்த விஷயங்களை நீயே கிளப்பிவிட்டாய். ஆதியில் நடந்து மறந்த செய்தி முற்றும் கவனத்தில் எழும்படிக்குச் செய்ததுடன் என் வாயினல் கூறும்படியாகவும் செய்து விட்டாய். அவ்விதம் கேட்ட உன் மொழியைத் தள்ளமாட்டாது நான் கூறியதன் பின்னர் நீ உரைத்த சில வார்த்தைகள் என் மனத்தில் ஆணி அறைந்தது போல அன்று பதிந்தன. அன்று முதல் என் மனத்தில் அந்தப் பெண்ணைப் பற்றி ஓர் விதமான உணர்ச்சியும் தோற்றமும் எழுந்து ஏதோ வேலை செய்துகொண்டிருக்கின்றது. மேலும் காரியம் மிகவும் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதுடன் என்னைப் பிரிந்த ஒன்றரை வருடங் கழித்து பிரஸவித்த கோர சம்பவத்தால் யாவும் கெட்டுவிட்டன. அதை எண்ணத்தில் நினைக்கும்போது எனது மன உணர்ச்சி உடனே மாறுபட்டு விடுகின்றது. இவைகளையெல்லாம் நான் உன்னிடமும் சொல்லியவனன்று. இன்று அகஸ்மாத்தாகக் கண்ணில் தென்பட்ட படியினல் அவளைக் காண நேர்ந்தது. அவளுடைய தற்போதிய கோலமும் பரிதாப நிலைமையும் உண்மையில் என் மனத்தை உருக்குகின்றன. அவள் தான்

கல்யாணி என்பதற்குச் சந்தேக மில்லை என்று தோற்றுகின்றபடி யால் தான் அங்கு நின்று கவனிக்கவும் உன்னைக் கேட்கவும் நேரிட் டது. சரி உனக்கு இஷ்டமில்லாத காரியத்தை யான் ஏன் செய்வேன்? இதோ வந்துவிட்டேன். போகலாம். வா! அவள் கதி எப்படி யாயினும் இனி அவளைப் பற்றி நமக்கென்ன?" என்று கூறிக் கொண்டே நடந்து எல்லோரும் தாங்கள் இறங்கி யிருந்த சத்திரத் திற்கு வந்து சேர்ந்தார்கள். கோயிலிலிருந்து கிடைத்த உணவை எல்லோரும் உட்கொண்டார்கள். பின்னர் நவநீதம் அன்றிரவே "நமது ஊருக்குப் போய்விட வேண்டும்; புறப்படுங்கள்" என்று முத்துக்ருஷ்ணனிடம் கூறினாள்.

முத்து:—(சற்று திடுக்கிட்டவாறு) இதென்ன! இப்போதே கிளம்பிவிட்டாய். இன்று நான் முக்கியமாக ஒருவரைப் பார்க்க வேண்டிருக்கின்றது. அதற்காக இன்று நாம் இங்கிருந்தே தீர வேண்டும். கண்மணி நவநீதம்! இன்றே ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்று ஏன் கட்டாயமாய்ச் சொல்கிறாய்? என்ன காரணம்.?

நவநீதம்:—காரணம் ஒன்றுமில்லை நாதா! நாம் இங்கு வந்த வேலைகளெல்லாம் சீராய் முடிந்துவிட்டன. இனிமேல் ஊருக்குப் போகவேண்டியதுதானே! தாங்கள் யாரையோ பார்க்கவேண்டு மென்றீர்களே! அவர்கள் இங்கு வீட்டிற்கே வருவார்களோ?

முத்து:—இல்லை, இல்லை. அவர் கோயிலில் சந்திக்கலா மென்றும் கோயிலுக்கு என்னை வரும்படிக்கும் தெரிவித்திருக்கிறார். ஆகை யால் அந்த வேலையை முடித்துக்கொண்டு போகலாம்—என்றான். இதைக் கேட்ட நவநீதத்திற்குச் சற்று யோசனை பிறந்துவிட்டது. சரி என்று தலையசைத்துவிட்டு உள்ளே போய்விட்டாள். அவள் மனத்தில் யோசனையே பலமாகக் குடியேறிவிட்டது. தன் தாயாரிடம் சென்று "அம்மா! நான் இன்றே ஊருக்குப் போகலாமென்று என் ப்ராணநாதரிடம் தெரிவித்தேன்; அதற்கவர் இன்று யாரையோ கோயிலில் சந்திக்கவேண்டுமென்றும், இப்போது போக முடியா தென்றும் தெரிவித்தார். அதைக் கேட்க எனக்குச் சந்தேகமா யிருக்கின்றது. ஏனெனில் இன்று காலையில் நடந்த சம்பவங்களை யும் அவர் திடீரென்று வந்துவிட்டதையும் இப்போது யாரையோ கோயிலில் சந்திக்கவேண்டுமென்று சொல்வதையும் ஒத்திட்டுப் பார்த்தால் இப்போது அவர் நேரில் சென்று அக்காவைக் கண்டு விசாரிக்கப் போவதாக என் மனத்தில் படுகின்றது. ஆகையால் அதற்கு யான் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். அவ்விதம் செய்துதான் இருவரையும் சேர்த்து வைக்கவேண்டும். நாம் இப்

போதே சற்று வெளியில் சென்று வரவேண்டும். வா!'' என்று வெகு பரபரப்புடன் தன் தாயை அழைத்தாள்.

இதுகேட்ட ஏமாவதி அப்படியே யாகட்டுமென்று கூறி அவளுடன் கிளம்பினள். இருவரும் எங்கேயோ கடைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு நேரே கோயிலை அடைந்து அங்கு கல்யாணியிடமும் தன் பாட்டியிடமும் ஏதோ முக்கியமான சங்கதிகளைக் கூறிவிட்டு உடனே வீடு திரும்பினர்கள். இரவு வந்தது; எல்லோரும் போஜனம் செய்த பின்னர் முத்துக்ருஷ்ணன் நவநீதத்தினிடத்தில் சொல்லிக்கொண்டு வெளியில் போய்விட்டான். நவநீதம் உடனே தன் பாட்டனரை யழைத்து "தாதா! நீர் வீதியில் சென்று என் ப்ராண நாதரைச் சந்தித்து வழிமடக்கி 10 நிமிடம் ஏதாவது பேசி தாமதப்படச் செய்துவிட்டுப் பின்னர் அவரை யனுப்பும். அவர் வெளியே சென்றதும் அவரறியாத வண்ணம் அவர் பின் தொடர்ந்து சென்று அவர் எங்கு செல்கிருர் என்று பாரும். கோயிலில் காலையில் சென்ற விடத்திற்குச் சென்ருல் நீர் அங்கு கூடச் செல்லாது வெளியிலேயே நின்றுவிடும். பிறகு அங்கு நீர் வரும்படியான சந்தர்ப்பம் நேரும்போது வந்து சேரலாம்; சீக்கிரம் செல்லும்'' என்று துரிதம் செய்து அனுப்பிவிட்டுத் தானும், தன் தாயும், தந்தையும் மூவரும் சத்திரத்தின் மற்ருெரு வழியாகச் சென்று கோயிலையடைந்து கல்யாணியின் குடிசைக்குள் புகுந்தார்கள்.

நவநீதத்தின் வார்த்தையின்படி தயாநந்தர் முத்துக்ருஷ்ணனின் எதிர் சென்று அவனுடன் தாங்கள் ஊருக்குப் போகும் விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே 10 நிமிடத்தையும் கடத்திவிட்டு அவனையனுப்பிவிட்டு அவனைப்பின் தொடர்ந்து சென்ருர். முத்துக்ருஷ்ணன் நேரே கோயிலையடைந்து சுவாமி தரிசனத்தைச் செய்துகொண்டு கல்யாணியின் குடிசையின் எதிரில்சென்று யோசித்தவாறு நின்ருன். முத்துக்ருஷ்ணனைப் பின்தொடர்ந்துவரும் தயாநந்தர் "நவநீதம் சொல்லியபடியே இவ்விடம் வந்திருக்கின்ருரே! இதென்ன மர்மமோ தெரியவில்லை! ஒருக்கால் இதெல்லாம் நவநீதத்தின் செய்கையாகத்தானிருக்குமோ?'' என்று தனக்குள் ப்ரமித்தவாறு அங்கு அருகிலேயே மறைவாக உட்கார்ந்துவிட்டார்.

முத்துக்ருஷ்ணன் ஆசிரமத்தின் வெளியில் நின்றபடியே சற்று யோசிக்கலானுன். "நாம் இங்கு துணிந்து வந்துவிட்டோமே! ஒருக்கால் இங்கிருப்பவள் கல்யாணியாகவிராமல் வேறுயாராயினுமிருந்தால் என்ன செய்வது? மேலும் கல்யாணியாகவே இருந்தாலும் அவள் நம்மைக்கண்டதும் நம்மை இன்னுனென்று தெரிந்துகொண்டால் என்ன சொல்வாளோ! அவளை நாம் செய்துவிட்ட இம்சையை

எல்லாம் எடுத்துக்கூறி முட்டிக்கொள்வாளோ, திட்டுவாளோ! அவள் உண்மையில் சுத்தமானவளாக விராவிடின் இவ்விதகோலம் பூண்டு விரக்தியுடனிருப்பாளா! எல்லாவற்றிற்கும் உள்ளே சென்று நாம் வேறுயாரோ அன்னியனைப்போல நடித்துப்பேசி விஷயத்தை யறிந்துகொண்டால்தான் மனம் நிம்மதியாகும்'' என்று எண்ணியவ னாய், தனது மேல் அங்கவஸ்திரத்தை எடுத்து தலைக்கு முக்காடிட் டுக்கொண்டு மெல்ல ஆசிரமத்தின் உள்புறம் தலையை நீட்டிப்பார்த் தான். அங்கு முன் பக்கத்தில் ஓர் சிறிய விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிந்துகொண்டிருந்தது. ஓர் ஓலைப்பாயின்மீது கிழவியொருத்தி படுத்துக்கொண்டிருக்கக்கண்ட முத்துக்ருஷ்ணன் மெல்லிய குரலால் "அம்மா! யாரங்கே! உள்ளே யாரிருப்பது?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட கிழவி அலறியவள்போல நடித்து எழுந்து உட் கார்ந்து "யாரங்கே வெளியில்? யாரைத்தேடுகிறீர்கள் ? என்றாள்.

முத்து:—அம்மா! தங்களைத்தான் கேட்டேன். தங்களிடம் யான் சில விஷயங்கள் பேசவேண்டியதாயிருக்கிறது. தாங்கள் வெளியில் வருகிறீர்களா! நான் உள்ளே வரலாகுமா! தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்.

கிழவி:—யாரய்யா அது? என்னிடம் என்ன விஷயம் பேசுவ தற்கு இருக்கின்றது! நாங்கள் ஆண்டிச்சிகளாய் அரனே! என்று கிடக்கின்றோம். அங்ஙனமுள்ள எங்களுடன் என்ன விஷயம் பேச வேண்டும்? எங்களுக்கு எல்லா விஷயங்களும்தான் தீர்ந்துவிட் டனவே! இனியும் பேசுவதற்குப் பாக்கி யார் இருக்கின்றார்கள்? என் அண்ணி அரசியால் ஆளனுப்பிவந்தீரோ! அன்றி நாத்தி, மாமிகள் தூதனாய் நவில வந்திரோ! நீர் யார்மூலம் வந்தீர் ?

முத்து:—(சற்று வருத்தமடைந்து) பாட்டீ! யான் ஒருவராலும் அனுப்பப்பட்ட தூதுவனல்லன். யானே நேரில் விசாரித்தறிய வந்தேன். அதாவது இங்கு ஓர் இள நங்கை காவியுடையும் சடைத் தலையுமாக இருக்கக்கண்டேன். அம்மாதை யான் இதற்குமுன் எங்கேயோ பார்த்திருப்பதுபோல நினைவிருக்கிறது. ஆகையால் அந்தம்மாள் யார்? என்ன காரணம்பற்றி இக்கோலம் பூண்டார் என்பதையறியவே வந்தேன். தயவுசெய்து கூறவேண்டும்.

கிழவி:—ஐயோ! அந்த பரதேசியைப்பற்றியும் விசாரிக்க இம் மண்ணில் மனிதரிருக்கின்றார்களா! உம். அவளுடைய சரிதையை ஓர் கதையாக வரைந்தால் படிப்போர்க்குப் பெரும் விருந்தாகுமே!

அவற்றை சொல்வதென்றால் வயிறு எரிகின்றது. துக்கம் தொண்டையை யடைக்கின்றதே! உலகத்தில் பெண்ணாய்ப்பிறந்த பாவிகளுக்கு ஒவ்வொரு காலபருவத்திற்கு ஒவ்வொருவர் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள் உண்டு என்று கூறக்கேட்டதுண்டு. உலகத்தில் நடத்தையிலும் கண்டதுண்டு. அத்தகைய அம்சத்தில் ஒரு அணுவும் இல்லாத அநாதையாகிய இப்பெண்ணைப்போல யான் இஜ்ஜகத்தில் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. மனிதர்களெல்லாம் அற்று அனாதைகளாக இருப்பது சகஜம். கல்லைப்போலக்கட்டிய கணவன்.—மகா கொடிய கல்நெஞ்சன்—அவள் விஷயத்தில் பெரும் பாதகன்—ப்ரமாதமாகப் போலீஸ்வேலை பார்க்கிறானாம். கணக்கற்ற பணம் சம்பாதிக்கின்றானாம். அத்தகையோனிருக்கிறான். உலக்கையைப்போல உடன்பிறந்தான் இருக்கிறான். பெருத்த குந்தாணிகளைப்போல மாமியும், நாத்தியும் பிடாரிமுண்டைகளிருக்கிறார்கள். இத்தனை மனிதர்களுமிருந்து எல்லோருடைய மனமும் வயிறும் துணிந்து ஒரு குற்றமுமறியாத நிரபராதியான என் தங்கக்கட்டியை —விலையிலா மாணிக்கத்தை—கல்யாண குணங்கள் நிறைந்த கல்யாணியை நடுச்சந்தியில் சங்கடப்படவிட்டு வேடிக்கை பார்க்கிறார்களே! இந்த வயிற்றெரிச்சல் அவள் செத்தாலும் ஆறுமா? சாம்பலானாலும் தீருமா! ஐயோ! உத்தமி என்றால் அவளல்லவா உத்தமி! அத்தகைய பத்தினியை வயிறெரியச்செய்து நொந்த மனத்துடன் சந்தியில் சிரிக்கச்செய்த பாபிகளை இந்த வேதகிரீசன் என்றாவது பார்த்துக்கூலிகொடாமல் போவானா! அந்த வார்த்தையை எடுத்தால் என் வயிறு அகாத தீயிட்டுப்பற்றுகின்றது. அதை ஏன் கிளறுகின்றீர்? ஐயா! இத்தனைபேரும் விலகி நிற்கையில் இடுக்குப்பல் முளைத்ததுபோல நீர் வெகு கனிகரத்துடன் விசாரிக்க வந்துவிட்டீர். நீர் யாரையா! எங்கள் விசனத்தைக்கிளப்பாதேயும்'' என்றாள்.

இந்த வார்த்தையைக்கேட்ட முத்துக்ருஷ்ணனுக்கு அவள் கல்யாணியா, அல்லவா என்ற சந்தேகம் கொஞ்சம் நஞ்சமிருந்ததுவும் தீர்ந்துவிட்டது. கிழவி உண்மையிலேயே வயிறெரிந்து சொல்லும் வார்த்தைகளைக்கேட்டும்,காலையில் கல்யாணியின் கோலத்தைக் கண்டதை எண்ணியும் அவனால் தாங்கமாட்டாத துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்துவிட்டது. தனக்குள் புலம்பிக் கொண்டே கண்ணைத்துடைத்துத் தேற்றிக்கொண்டு பின் பேசத் தொடங்கி "பாட்டீ! ஐயோ பாவம்! இத்தனை மனிதர்கள் இருந்தும் அந்தம்மாளை ஏன் தனிமையாக விலக்கிவிட்டார்கள்? அதற்குக் காரணம் யாது? போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துக்ருஷ்ணனுடைய சம்சாரமா என்ன இந்தம்மாள்?'' என்று மெல்ல கேட்டான்.

கிழவி:—ஐயோ! அந்தப்பெயரைக்கேட்கவும் பிடிக்கவில்லையே!

அந்த மகானுபாவனின் சம்சாரந்தான் என்று சொல்வார்கள். ஒரு பெண்டாட்டியை வைத்துக்கொண்டு வாழக் கையிலாகாதவன் மறு விவாகம் செய்துகொண்டு மினுக்குகிறானும். தனது வீட்டு சட்டத்தைத்தீர்ந்து நியாயவழியில் நடக்கச்சக்தியற்றவன் நீதிஸ்தலமாகிய போலீஸில்வேலை செய்து வாழுகிறானும். தன் வீட்டிலிருக்கும்—இருந்த—துஷ்டர்களான தாயார், தமக்கை, இரு பெட்டை முண்டைகளை அடக்கியாண்டு அவர்களுடைய குற்றங்களைக் கண்டு பிடித்து தண்டிக்கக் கையிலாகாதவன் நாட்டிலுள்ள குற்றவாளிகளை எல்லாம் பிடிக்க நாணமற்றுக் கிளம்பிவிட்டானும். தனது சொந்த மனைவி—தன்னையே நம்பிய பேதை—தனக்கே அடிமையான அபலை—தன்னைச் சரணமடைந்த சத்குண சம்பன்னை—தன்னோடு இரவும் பகலும் சகலவிதத்திலும் பழகிய பாவையின்மீது சாட்டிய குற்றங்களை உண்மையா அல்லவா என்பதைக் கண்டுபிடித்துத் தீர்ப்பு கூற மாட்டாத மனிதன் நியாயத்திற்காகவே பாடுபடும் போலீஸ்வேலை வகித்து நிரபராதிகளை விடுதலை செய்ய முன்வந்துவிட்டானும். வெட்கக்கேட்டைச் சொன்னால் வயிற்றெரிச்சல் தீருமா! விதிதான் துலையுமா (முத்துக்ருஷ்ணனின் ஹ்ருதயத்தில் ஈட்டியிட்டுக் குத்துகின்றது) அவளை ஏன் விலக்கிவிட்டார் என்று கேட்பதற்குப் பதில் இந்தவேதகிரீசன் தான் கூறவேண்டும். இந்தப்பெண்ணின் போதாத காலத்தின் கொடுமையால் இவளிடத்தில் இவளுடைய மாமி, நாத்திக்கு முதலிலிருந்தே த்வேஷமுண்டாகி இவளைப் பலவிதத்திலும் இம்சித்து இவள் கணவனிடம் இல்லாதவற்றை எல்லாம் கூறி அவனைக் கலைத்து அவனே இவளை வீட்டைவிட்டுப் போகச்சொல்லிய தாய் பயமுறுத்தி 'அடி! கல்யாணி! நீ வீட்டைவிட்டுச்சென்றுவிட்டால்தான் உன் புருடன் இன்று வீட்டிற்கு வருவானும்'' (கல்யாணி நவநீதத்தினிடத்தில் கூறிய சகல விஷயங்களையும் கூறி) இவ்விதம் பயமுறுத்தி அவளை நயவஞ்சகமாகப்பேசி, கர்ப்பவதியை வீட்டைவிட்டுத் தாங்களே துரத்திவிட்டு அவள் ஒரு மொட்டைப்பையனை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக ஓர் அனியாயமான வதந்தியைக் கிளப்பிவிட்டு (அதற்குமேல் நடந்தவற்றைக்கூறி) இவ்விதம் அவளை அடியோடு பாழ்படுத்திவிட்டார்கள், ஒரு உயிரை அனியாயமாய் கொலைசெய்யாத குற்றமாக வதைசெய்துவிட்டார்கள்'' என்று மேலே சொல்வதற்குள் முத்துக்ருஷ்ணன் இடைமறுத்து, "ஏனம்மா! அந்த பெண் கர்ப்பவதியாயிருப்பதை யறிந்த பின்னரா அவளை வீட்டைவிட்டுத் தள்ளிவிட்டார்கள்?'' என்றான்.

கிழவி:—ஐயோ! அவர்கள் நாசமாய்ப் போக! ஓர் வாழும் பெண்ணைத் தாழ வைத்த பாவிகள் பாழாப் போக—அவர்கள் நிர்மூலமாய்ப் போக—குழந்தை கர்ப்பவதி என்பதைத் தெரிந்து தான் செய்திருக்கிறார்கள். அவள் புருஷன்—புருஷனும்: புருஷன்

—தன் மனைவி கர்ப்பவதியாயிருக்கிறுள் என்பதையும் தானறியாது முட்டாளாக விருந்ததுடன், தன் தாயும் தமக்கையும் செய்யும் அனியாயத்தையும் கவனிக்காது அவளைச் சந்தியில் விட்டானே! அவனை என்னவென்று சொல்வது? அவளுடைய துரதிர்ஷ்டமும் வயிற்றெரிச்சலும் ஒன்ரு இரண்டா! படுபாவிகள் எல்லோருங் கூடி அவளைச்சீரழித்தது போதாதென்று வயிற்றிலிருந்தசிசுவும் அவளை சோதித்ததுபோல பதினெட்டு மாதங் கழித்துப் பெட்டைக் குழந்தையாய் பிறந்தது. உலகத்துக் குழந்தையைப் போல 10-வது மாதம் பிறந்திருக்கலாகாதா! அந்தசிசு 18 மாதங் கழித் தப் பிறந்த உள் மர்மத்தை கொடும் பாவிகளாகிய மாமியும் நாத்தியு மறிவார்கள். கடவுள் அறிவார். ஆஸ்பத்ரியிலுள்ள வனையோரு மறிவார்கள். யாரறிந்து யாது பயன்? அவளுடைய விஷயத்தில் எல்லாம் மடிந்துவிட்டன. அவ்விதம் 18 மாதங் கழித்துத் தான் பிறந்ததே! அப் பாழும் பெண் பூர்ண ஆயிசுடன் தாயுடன் இருந்து அவளுடைய விசனத்தைச் சிறிது தீர்க்க லாகாதா! அதற்கும் அவள் கொடுத்துவைக்கவில்லை என்பதற் கொப்ப அந்த சிசு நான்கு வயதில் காணப்படாது போய்விட்டது. அது காணுது தான் மறைந்ததோ, அன்றி அவள் தாயை வதை செய்த பாவிகள் அந்த குழந்தையையும் என்ன செய்து விட்டார் களோ! அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். தன் வயிற்றில் பிறந்த சிசுவையும் பறிகொடுத்து, பெற்ற தாயையும் பறிகொடுத்து சகல விதத்திலும் சகிக்க வியலாத துக்கத்தை யனுபவித்த பின்னர் அவள் ஒரு வினடியும் உயிருட னிருக்கமாட்டாது தற்கொலை செய் துகொள்ள முயற்சித்தவளை யான் தேற்றி ஏதோ கதைகளைக் கூறி அவளை இறக்கவொட்டாது தடுத்தேன். எல்லாந் தீர்ந்த பிறகு தான் எவ்விதமானுல் என்ன என்று அபாரமான சோகத் திஞல் அபரிமிதமான விரக்தியை அடைந்து இவ் வாண்டிச்சி கோலம் பூண்டு அனுதையாய்க் காலங் கழிக்கின்றுள். இந்த துக்க காமான செய்தியைக் கேட்க வந்த நீர் யார்? நீர் அவர்களுக்கு ஏதேனும் உறவினராக வேண்டுமோ!" என்றுள்.

இது பரியந்தம் முத்துக்ருஷ்ணனுக்கு குழந்தை பிறந்த விவா மும் கல்யாணியை வீட்டை விட்டோட்டிய விவாமும் சிறிதும் தெரியாதாகையால் இங்கு இவ் வரலாற்றைக் கேட்டதும் அவ னுடைய கோபம் முற்றும் தனது தாயிடத்திலும் தமக்கை யிடத் திலும் தாவித் தாண்டவமாடுகின்றது. "ஆ! இவ்வித அனியாயமா செய்துவிட்டார்கள்! ஐயோ, காலக்கொடுமையே!" என்று ஏதேதோ எண்ணி அவ்விடத்தையும் தன்னையும் அடியோடு மறந்து அபார மான வருத்தத்துடன் புலம்புகின்றுன். "ஐயோ! நாம் அறியாமை யால் பிறருடைய சதியான பேச்சை மதியாகக் கொண்டு ஓர்

பெண்ணை கதியற்று, விதியற்றுக் கலங்கும்படியாகச் செய்துவிட்டோமே! நாம் சற்று பராமுகமாக விருந்துவிட்டதன் பலனல்லவா இது! மகா உத்தமியை உடலெரிந்து சித்தங்கலங்கச் செய்ததினுல் தான் நாம் இத்தகைய எதிர்பாராத விபத்தில் அகப்பட்டுக்கொண்டோம். அதனின்றும் தப்பியது அவளுடைய நற்குணத்தினுலேயேயன்றி வேறில்லை. ஐயோ! பாவி எனது மவுட்டீகத்தன்மையால்—அன்பற்ற தன்மையால்—காதல் ஜெனிக்காத தன்மையால்—பிறர் சொல் கேட்கும் தன்மையால் நடந்துவிட்ட சம்பவங்களினுல் அப்பாவையின் மனம் எவ்விதம் தவித்ததோ! அவள் வயிறு காட்டுத் தீபோலப் பற்றிற்ரே! அவள் விழிமழை காறுற்று வெள்ளம் போல ஆய்விட்டதோ! அவள் மார்பு கோடை பிடிபோல குமுறிற்ரே! அவளது இருதயம் அபாரமான சோகத்தைச் சகிக்கவியலாது துடித்ததோ! அந்தோ! என்னையே தஞ்சமென்றடைந்த அஞ்சுகத்தைப் பஞ்சாய்ப் பறக்கவிட்டு மிதமிஞ்சிய சுக போகத்தில் சதா மூழ்கிவிட்ட வஞ்சகனும் பஞ்சமா பாதகனும் நஞ்சையுடைய நெஞ்சத்தினனும் கிஞ்சித்தும் இரக்க மில்லாத வஞ்சகனும் ஆய்விட்டேனே! என்ன செய்வேன்? 18 மாதங் கழித்துப் பிறந்த சிசுவை அபாண்டமான பழி சுமத்தி துராக்ருதமாகப் பிறந்ததாக வன்றே எனக்குரைத்தார்கள். இதுகாறும் இக்கிழவி கூறியதுபோல நான் எனது சொந்த குற்றங்களைக் கவனிக்கமாட்டாது இதர குற்றங்களைக் கண்டுபிடிக்க வெட்க மின்றி வேலை செய்கிறேனே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் எண்ணி அபாரமாய்ப் புலம்பி "ஆ! கல்யாணி! அன்றே நவநீதம் என்னைக் கேட்ட சமயம் உன் விஷயமாக யான் ப்ரவேசிக்காது போய்விட்டேனே! நவநீதமென்றுல் என் கண்மணி அவளுக் கல்லவா தகும்!" என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே அதற்குமேல் துக்கம் தாங்கமாட்டாது விழுந்துவிட்டான். ஏற்கெனவே கள்ளர்களால் அடிபட்டு வருந்த முற்று மெலிந்திருந்தமையால், திடீரென்றுண்டாகிய விசனத்தைத் தாங்கமாட்டாமல் உடனே மூர்ச்சையாகி விழுந்துவிட்டான்.

அந்த ஆசிரமத்தில் போஜனம் செய்வதற்கான மறைவான இடத்தில் இத்துணை நேரம் மூச்சுப் பேச்சின்றி பதுங்கியவாறு இங்கு நடந்த சகலமான விஷயங்களையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமிருந்த கல்யாணி, நவநீதம், ஏமாவதி, சிதம்பரம் ஆகிய நால்வருக்கும் கட்டு மீறிய ஆச்சரியமும் அபாரமான சந்தோஷமும் பொங்குகின்றது. கல்யாணி இன்னதென்று விவரிக்கவே சாத்யமற்ற நிலைமையில் தள்ளாடியவாறு நிற்கின்ருள். நவநீதம் கல்யாணியைப் பிடித்துத் தன் தோள்மீது சாத்திக்கொண்டு "அக்கா! நான் சொல்லியது உண்மைதானு பார்த்தனையா! நம்முடைய காதலரின் முகத்தைத் கவனித்தாயா! கண்ணீர் ஓடு

வதையும் பெரு மூச்சு விடுவதையும் சற்று உற்று கவனித்துப்பாரு. என தருமை அக்கா! இப்போது உன் மனம் தெளிவு பட்டதா! நான் கூறியது முற்றும் உண்மை என விளங்கிற்று! அவர் மனத்திற்குள் சதா உன்னை எண்ணி வருந்துவது எனக்குத் தெரியும். ஆனால் காரியம் மிகவும் கேவலமானதாயும் காண்போருக்கும் கேட் போருக்கும் ஆபாசமானதாயும் போய்விட்டமையாலும் அவருக்கு முக்கியமான விஷயத்தின் உண்மை தெரியாதாகையினாலும் இவ் வித சம்பவங்களெல்லாம் நேர்ந்துவிட்டன. இனிமேல் கலகக்காரப் பாவிகளின் வார்த்தையைக் கேட்கலாகாதென்று அவர் மனதில் நன்றாய் பட்டுவிட்டது. ஆ! அதோ! அவர் மூர்ச்சித்து விட்டார். இனி நாம் சும்மா விருக்கலாகாது.'' என்று கூறிக்கொண்டே ஓடி வந்து கிழே சாய்ந்து கிடக்கும் தன் நாதனைத் தூக்கி தன் மடிமீது சாய்த்துக்கொண்டு "அக்கா! கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா'' என்றாள்.

உடனே கல்யாணி ஓர் பாத்திரத்தில் சுத்த ஜலம் கொண்டு வந்து கையில் வைத்துக்கொண்டு நவநீதத்தை நோக்கி கண்ணீர் பெருகியவாறு பேசத் தொடங்கி "என்னுருயிர் நவநீதம்! எத்துணை அழகான பெயர்! நவநீதமானது எத்தகைய சிரேஷ்டமான பண்டம். சாக்ஷாத் கண்ணபிரான் உவந்து உண்ட வெண்ணை யல்லவா! அத்தகைய நவநீதம் எத்துணை மருந்துகளுக்கு உபயோக மாகி பிணிகளைத் தீர்த்து குணப்படுத்துகின்றது. அவ்வாறான நவநீதமல்லவா நீ! நீ உன்பெயருக்கொத்த வேலையைச் செய்து எனது மனப் பிணியை நீங்கவைத்துவிட்டாய். சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாவின் நாமத்தைக் கொண்ட நமது நாதரின் இஷ்டப் பொருளாயும் அமைந்திருக்கின்றாய். என் கண்ணான நவநீதம்! அன்று இவர் காலினால் உதைத்துத் தள்ளிய பிறகு இன்றே இவருடைய அருகில் கடவுளறிய உன்னால் வந்தேன். இத்தனை வருடங்களாகச் சிறையில் கிடந்த எனதாவி இன்றே சிறந்து மகிழ்ந் தது; எனினும் என் கண்மணி புஷ்பாவைப் பிரிந்து மகிழ்வதாவது! அந்த அக்கினியும் உன்னால் தான் அணையவேண்டும்.'' என்று கூறிக் கொண்டே கையிலிருந்த ஜலத்தை தன் நாதனின் முகத்தில் தெளித்து தனது முந்தாணியின் நுனியினால் விசிறினாள்.

நவநீதம்:—ஆகா! மறந்தேனே! அக்கா! நமது நாதர் கண் திறந்து பார்ப்பதற்குள் நீ உனது ஆண்டிச்சி கோலத்தைக்களைந்து விட்டு எனது சேலையைக் கட்டிக்கொள்—என்று கூறியவாறு தனது ஆபரணங்களைக் கழட்ட முயன்றாள். இதற்குள் கல்யாணி இடை மறுத்து "என் தங்கமே! என் கண்மணி! நவநீதம்! உன்னுடைய உத்தமமான குணமாகிய மது ஊற்றைக்காணக்கான எனக்குப்

பேசவும் நாவெழவில்லை. உன்னைக்கண்டு பொறுமைப்படக்கூடிய ஸ்தானத்திலுள்ள நீ எனக்குச் செய்யும் உபகாரமும் அனுகூலமும் அளவிட்டுக்கூறப்போகுமா! கண்ணே! நான் சொல்வதைக்கேள். உன்னுடைய அன்பே எனக்குச் செல்வமும், உனது அருங்குணமே எனக்குப் பூஷணமும், உனது அருமையான அமிருதம்போன்ற மொழிகளே எனக்கு விதவிதமான பட்டாடைகளாகவும் எண்ணி என் மனம் திருப்தியடைந்துவிட்டது. என் செல்லமே! நான் சொல்வதைக் கவனமாகக்கேள். உன்னுடைய தயவால் எனக்கு இழந்துவிட்டதான பதிபூஜை மீண்டும் கிடைத்துவிட்டதை எண்ணிப் பேரானந்தமடைகின்றேன். எனக்கு அவ்வொருபேறு கிடைத்ததுமட்டும் போதும். இனிமேல் எனக்கு பொன்னணியும், பூஷணமும், பட்டாடையும், இல்லறவின்பமும், ஸரஸகேளிகையும் முதலிய ஒன்றும் வேண்டாம். அவைகளில் என்னைப் புகுத்தாதே! இனி எனக்கு மக்கள் பிறக்கவேண்டுமென்ற அவா அணுவேனும் கிடையாது. உனக்குப் பிறந்து அவைகளை யான் சீராட்டிப் பாராட்டி வளர்த்து இன்பமனுபவித்தால் அதுவே எனக்குப் பேரானந்தமாகும். அதற்கே யான் காத்திருக்கின்றேன். இனி எனக்கு இத்தகைய போகங்கள் ஒன்றும் வேண்டவே வேண்டாம். எனது தெய்வமாகிய பதியின் பாதசேவைமட்டும் பணியாள்போலச் செய்துகொண்டு சந்தியில் அலையாமல் உன்னுடன் சத்சகவாசம் செய்துகொண்டு எனது பர்த்தாவினாலும் உன்னாலும் இடப்பட்ட அன்னத்தையுண்டு உங்களுடைய ஊழியக்காரியாக விருந்தால் போதும். எனது பாப ஜன்மத்திற்குக் கடவுள் அந்த ஒரு வரனையளித்தால் அதனாலேயே எனது ஜன்மம் ஸபல்யமாகும். ஆகையால் என்னை மற்ற விஷயத்தில் தொந்தரவு செய்யாதே! என் மனம் வெந்து புண்ணாகி மறத்துக் கட்டைபோலாகிவிட்டது. இனி அதைத் திருப்புவது என்பது கூடாத காரியம். இம்மட்டுடன் என்னைவிட்டுவிடு. நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன். கழிபட்டவைகளை இனி புதியதாகப் பற்றவேண்டாம். என் கண்ணே! என்மீது உனக்கு உண்மையான வாஞ்சை இருக்கும்பக்ஷத்தில் வீட்டுவேலையைத் தவிர மற்ற விஷயத்திற்கு என்னை இழுக்காதே! இப்போதே கேட்டுக்கொள்கிறேன்" என்று மிகவும் பரிதாபகரமாயும், நிரம்பவும் பணிவுடனும், அபாரமான துக்கத்துடனும் கூறினாள்.

இது கேட்ட நவநீதம் திடுக்கிட்டவண்ணம் பேசத்தொடங்கி "ஆகா! அக்கா! என்னவிது! இவ்விதம் வாய்ப்பூட்டு போட்டுவிட்டாயே! இவ்விதம் பேசுவது அழகாமா! நீ முன்னால் வந்தவளாகையால் நீ தலையாகிவிட்டாய். நான் பின்னால் வந்தமையால் நான் காலாகிவிட்டேன். தலையில்லாமல் கால் என்ன செய்யும்! நான்

தலையில்லாமுண்டமல்லவா? நீயும் கூட இருந்தாலல்லவா தலையும் காலும் சேர்ந்ததாகும். நான் காலானபடியால் கால்மனுஷிதான். நீதான் முக்கால் மனுஷியாவாய். ஆகையால் நீ நாதரின் தலையை ஏந்திக்கொள்; யான் காலைப்பிடித்துக்கொள்கிறேன். உம்; இப் படிவா!" என்று கூறிக்கொண்டே கல்யாணியை இழுத்து உட்கார வைத்து அவளுடைய மடியில் தன் நாதனின் தலையை வைத்துவிட் டுத் தான் கால் பக்கம் வந்து உட்கார்ந்துகொண்டாள். இந்த அத் புதமான காட்சியைக் கண்ட மற்றையோர் ப்ரமித்துவிட்டார்கள். தயாநந்தரும் வந்து சேர்ந்துகொண்டார். கல்யாணிக்குத் தன் கணவன் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் தான் அவனுடைய முகத் தில் எவ்விதம் விழிப்பது என்ற யோசனை பலமாக அவள் மனத் தில் போராடுகின்றது. அதோடு அவள் அவன் முகத்தை தண் ணீரால் நனைத்து விசிறிக்கொண்டேயிருந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் முத்துக்ருஷ்ணன் கண்ணைத் திறந்து மெல்லப் பார்த்தான். தன் தலை கல்யாணியின் மடியிலிருப் பதையறிந்தான். அவ்வளவுதான் அவனுக்கு நிலை கலங்கிவிட்டது. ஆவேசங்கொண்டவனைப்போல சடக்கென்று எழுந்தான். அப் போது கால்மாட்டில் உட்கார்ந்திருந்த நவநீதத்தையும் மற்றை யோரையும் கண்டுவிட்டான். அப்படியே நெருப்பை மிதித்த வன்போல நடுங்கிவிட்டான். "ஆ! என் கண்மணி! நவநீதம்! என் இன்பக்கிளியே நவநீதம்! நான் அப்போதே நினைத்தேன் உன்னுடைய சூழ்ச்சிகள் பல இங்கு நடந்திருக்கின்றனவென்று. அவ்விதமேதான் முடிந்திருக்கின்றது. மதிகெட்ட மாபாவியா னேன். என் பிரிய கல்யாணி! பாவி என்னை மன்னிக்கவேண்டும். எனது அறியாமையை எனக்கறிவித்த என் கண்மணி நவநீதத்தைக் கோயிலில் வைத்துத்தான் பூஜிக்கவேண்டும்" என்று மேலே சொல்வதற்குள் நவநீதம் பேசத்தொடங்கி "பேஷ் ப்ராணகாந்தா! வெகு அழகாகப்பேசினீர். ஒருத்தியை மணந்து அவளை ஆண் டிச்சியாக்கி அலையவிட்டாயிற்று. என்னைக்கோயிலில் வைத்து கும் பாபிஷேகம் செய்து குமுறவைத்துவிட்டு தமது தர்யார், தமக்கை இருவரிடமும் சென்றுவிடுங்கள். மூன்றாவதாக ஓர் கன்னியைத் தெரிந்தெடுத்து மணம் செய்துவைப்பார்கள். பிறகு ஆநந்தசாக ரத்தில் அகமகிழலாம். "முதலில் வந்த கொண்டைக்காரி பண்டார மானாள்; பிறகுவந்த பின்னல்காரி கோயிலில் சமாதியாகிவிட்டாள். மூன்றாவதாக (தற்கால நாகரிக) பிச்சோடாக்காரியாகிய நீயும் நானும் தேனும் பாலும்போல விருக்கலாம்" என்று கூறி களியாட்ட மாடுங்கள். அவளுக்கும் என்ன வழி செய்யலாமென்று பிறகு யோசித்து உமது அக்காள் வேலை தீர்த்துவிடுவாள். இவ்விதமே செய்துகொண்டுபோனல் அதையோர் நாவலாக வெளியிட்டுவிட

லாம். போதும்! போதும்! என்னைக்கோயிலில் வைத்துப் பூஜிக்கும் படி யான் உங்கள் கையில் அகப்படமாட்டேன். யான் அத்தகைய மதிசூனியையன்று; உங்களையே பிடித்து எனது இருதயமாகிய கோயிலில் வைத்துப்பூட்டி வெளியில் விடாது பாதுகாத்துப் பூஜை செய்வதற்கு எனக்கு சக்தியுண்டு. ஜாக்ரதை!" என்று வெகு அன்பாயும் அதிகார தோரணையிலும் கூறினள்.

இதைக்கேட்ட எல்லோரும் கொல்லென நகைத்தார்கள். நகைப்பைக்கண்டு நெடுநாளாகிய கல்யாணியின் முகத்திலும் நகைப்பு வந்துவிட்டது. முத்துக்ருஷ்ணன் எழுந்து நின்றவுடனே கல்யாணி அவன் காலில்விழுந்து பணிந்து "மன்னு! எனது பிறவியில் யான் மாபாவியாகிவிட்டேன். தங்களது திருவடிக்குப் பல அபசாரங்கள் செய்துவிட்டேன். எல்லாவற்றையும் மன்னித்தருள வேண்டுகிறேன்" என்று மேலே கூறமாட்டாது சிறு குழந்தையைப்போலத் தேம்பித்தேம்பி அழுதாள். இதற்குள் முத்துக்ருஷ்ணன் கல்யாணியைத் தூக்கி நிறுத்தி ஆலிங்கனம் செய்யப் போகையில் கல்யாணி சடக்கென்று விலகிக்கொண்டு "ப்ரபோ! என்னை யாரென்றெண்ணி ஆலிங்கனம் செய்ய முயற்சிக்கின்றீர்கள்? யான் தமது பணியாளேயன்றி — சேவகியேயன்றி — வேறல்ல. ஊழியக்காரியாகிய அடியேனுக்கு வேண்டுவது தங்களுடைய பாதத்திருப்பணியும், ஒருவயிற்று கஞ்சியும், ஒரு பழங்கந்தையுமேயாகும். மற்றபடி ப்ரபஞ்ச சுகத்திற்கு அடியேன் அருகதையல்ல. எனது கண்மணி நவநீதத்தினுல் எனக்கு இத்தகைய பேறு கிடைத்ததுபோதும். இதற்குமேல் யான் அன்னியமனுஷியேயாவேன். எனது குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு கும்பி எரிந்துபோன கட்டைக்கு இன்பசுகமும் வேண்டுமோ! ப்ரபோ! எல்லாம் துறந்த துறவியானேன். வேதகிரீசனின் திருவடியில் சேருவது ஒன்றுதான் மிஞ்சியிருக்கிறது. சாகப்போகும் செத்தைக்குச் சிங்காரமென்ன? வெந்துப்போன விறகுக்கு வேடிக்கை என்ன? இளமைக்காலமுற்றும் கழிந்த எனக்கு இன்பமென்ன? ஒன்றும் வேண்டாம். மற்ற எல்லாவித போகபாக்யத்திற்கும் என் கண்ணை நவநீதமே உரியவள். இது சத்யம்; எனக்குப்ரபஞ்சப்பற்று வேண்டாம். மக்கள் பிறக்கும் ஆசையும் வேண்டாம். இரண்டும் ஒழிந்த எனக்கு தங்களது ஊழியம்கிடைத்தால் ஊழ்வினை நீங்கியதாகும். இனிமேல் என்னைச் சோதிக்கவேண்டாம். எனையாளும் ஆண்டவனே!" என்று கண்ணீர் சோரவிட்டவண்ணம் கூறி மீண்டும் வந்தனம் செய்தாள்.

தாங்கமாட்டாத துயர மேலிட்டாலும், தான் இதுபரியந்தம் அனுபவித்த அளவிட வியலாத துன்பத்தின் முதிர்ச்சியால் ஏற்பட்ட

விரக்தியினாலும் கல்யாணி மனமுடைந்து போய்க் கல்லும் கரைந்துருகும் படியாகக் கூறிய வார்த்தையைக் கேட்ட எல்லோருக்கும் கண்ணீர் பெருகிவிட்டது. அதற்குமேல் எவருக்கும் பதில் கூறச் சாத்யமில்லாது போய்விட்டது. முத்துக்ருஷ்ணனும் தேம்பித் தேம்பி யழுதுவிட்டான். பின்னர் நவநீதம் அவனைத் தேற்றி காதோடு "நாதா! அந்தம்மாள் தற்போதுள்ள நிலைமையிலும் அவர்கள் பட்டுள்ள துன்பத்திலும் அவ்விதம் கூறுவது சகஜந்தான். இப்போது ஒன்றும் சொல்லவேண்டாம்; மெல்ல வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம்." என்று கூறினாள்.

இவ் வார்த்தையும் யுக்தமாய்ப் பட்டதால் அதற்கு இசைந்த முத்துக்ருஷ்ணன் கல்யாணியை நோக்கி, "என் அன்பான கல்யாணி! நீ இவ்விதம் கூறவேண்டியதற்கும் யான் கேட்கவேண்டியதற்கும் எனது மூட மதியும் விதியுமே காரணமாய்விட்டன. ஆகையால் நான் வேறு பதில் கூறுவதற்கு இடமில்லை. உன் னிஷ்டம்போலவே நடக்கத் தடையில்லை; இளம்பு. என்னுடன் கூடவே வந்துவிடு" என்றான். இதுகேட்ட கல்யாணி கண்ணீர் பெருகியவாறு "என் மன்னா! என் கண்மணி புஷ்பாவின் நினைவை எண்ணி இப் புஷ்ப கைங்கரியம் செய்து எனது வாணாளை போட்டி வந்தேன். இனி அக் கைங்கரியம் விட்டுப் போகின்றதே என்று ஒருபுறம் தோன்றுகின்றது. உம். இப் புஷ்பத்திற்குப் பதிலாக தாமரை புஷ்பம் போன்ற தமது பாத கமல சேவை செய்யும் பேறு கிடைத்த சந்தோஷத்தினால் இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு வேதகிரீசன் சன்னிதி பக்கமாக மண்டியிட்டு உட்கார்ந்து கண்ணீர் ஆறுய்ப் பெருகியவாறு "என்னப்பனே! வேதகிரீசா! உன்னை இக் கலிகாலத்தில் பஜிக்கும் எவர்க்கும் உனது அருளை கைமேல் பலனாகக் கொடுப்பாய் என்பதைக் கேட்டதுண்டு. என்னப்பனே! என் அனுபவத்தில் எனது ப்ராண நாதரின் தரிசனத்தையும் பாதசேவையையும் எனக்கு அளித்துவிட்டாய். எனினும் எனது குழந்தையை—என் கண்மணி புஷ்பாவை—என்னிடமிருந்து பிரித்துவிட்ட துக்கத்தை எனது கட்டை அக்கினி பகவானுக்கு இரையாகுமட்டும் என்னால் சகிக்க முடியாது—மறக்கமுடியாது— என்னப்பனே! வேதகிரீசா! உனக்கு இதுகாறும் நான் செய்துவந்த புஷ்ப கைங்கரியத்தை இழக்க நேர்ந்துவிட்டதை எண்ணினால் வருத்தமுண்டாகின்றது. என்னப்பனே! என்ப்ராணபதியை இவ்வூரிலேயே இருக்கும்படியாகச் செய்து எனக்குப் பதிசேவையும் செய்துகொண்டு உனது கைங்கரியத்தையும் செய்யும்படியான இருவரங்களையும் அருளவேண்டும். என்னப்பனே! கருணாமூர்த்தி! என்னை

யறியாது நான் செய்துள்ள குற்றங்களை க்ஷமிக்கவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். முத்துக்ருஷ்ணன் மத்தியிலும், இருபுறத்திலும் நவநீதம், கல்யாணி இருவரும் நிற்கும் காட்சியானது பேரானந்தமானதாக விருந்தது. அதைக்கண்டு ஆனந்தமுற்ற தயாநந்தர், "பேஷ்! மாப்பிள்ளை! இப்போது உமக்கு முத்துக்ருஷ்ணன் என்ற பெயர் தகாது. ராதாக்ருஷ்ணன் என்று கூறின் அதுவே சாலவும் பொருத்தமானதாகவிருக்கும். ராதா ருக்மிணீசமேத ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியே சேவை சாதிப்பதுபோல விருக்கின்றது. சென்ற விசனங்களெல்லாம் தொலையட்டும். இனி மூவரும் சுகமாக வாழவேண்டும்.'' என்று ஆசி கூறினர். சிதம்பரத்தின் தாயாரை முத்துக்ருஷ்ணனுக்குக் காட்டி அவளுடைய வரலாற்றைக்கூறினர்.

பிறகு எல்லோரும் சுவாமியை தரிசனம் செய்துகொண்டு முன் தங்கியிருந்த சத்திரத்திற்கு வந்தார்கள். அன்று இரவு ஒருவருக்கும் நித்திரையே கொள்ளவில்லை. அன்று நடந்த சம்பவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே வெகு ஆனந்தமாய் இரவைக் கடத்தினர்கள். எல்லோருடைய மனத்திலும் அன்று நடந்த சம்பவங்களே நாடகமாடுவதுபோலான தோற்றத்தை உண்டாக்கி விட்டன.

பொழுதும் புலர்ந்தது; புள்ளினங்கள் எழுந்தன. அத்தனை வருடங்களாகப் பதியைப் பிரிந்து பரிதவித்த கல்யாணியை அவளுடைய பர்த்தாவுடன் சேர்ந்து கண்ட சந்தோடத்தினுல் புள்ளினங்கள் எல்லாம் கோலமாக தம் தம் பாஷையில் கூச்சலிட்டு ஆரவாரம் செய்துகொண்டு இச் செய்தியை எல்லோருக்கும் அறிவிக்கச் செல்லும் தூதுவர்கள் போல அங்கு மிங்கும் ஓடி யாடி யலைகின்றன. மரங்கள், செடிகள் எல்லாம் இத்தம்பதியைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியை அடைந்து சங்கீதக் கச்சேரிவைத்திருப்பது போல காற்றினுல் கிளைகள் அசையும்போது ஹோ வென்ற ஒருவிதமான சப்தம் உண்டாவதும், ஒரு கிளையுடன் மற்ருெரு கிளை சேர்வதால் உண்டாகும் ஓசை அதற்குத் தாளம் போடுவது போலவும், அம் மரத்தின் மீதுள்ள குயிலினங்கள் கூவுவது பிடில் வாசிப்பது போலும், அந்த ஆனந்தமான சங்கீதத்தைக் கேட்டு இலைகள் தலையாட்டி சுகரூபமாக விருப்பது போலு மிருந்தது. இந்த ப்ரம்மாநந்த காட்சியைக் காண சூரிய ராஜன் தனது கிரணங்களாகிய பரிவாரத்துடன் வந்துவிட்டது போல அவனும் உதயமாகிவிட்டான். அந்த அபாரமான அற்புதக் காட்சி வெகு ரமணீகரமாக விருந்தது. அத்தகைய உதயத்தில் நமது கதா பாத்திரர்கள் எல்லோரும் தமது ஊருக்குப் போவதற்குப் பிரயாணமானர்கள். அப்போது

கல்யாணி தனது நந்தவனத்தை கோயிலுக்கு வழக்கமாக மாலை கட்டும் பண்டாரத்தின் வசம் ஒப்புவித்துவிட்டாள்.

நவநீதம் "நாதா! நாம் ஊருக்குப் போய்விட்டால் தங்களைக் காப்பாற்றிய பண்டார சாமியாரை நாம் எப்போது கண்டு மரியாதை செய்வது? மீண்டும் நமது ஊரிலிருந்து வருவதற்கு நமக்குச் சரிப்படாது. ஆகையால் நாம், இவ் வூருக்குச் சமீபத்திலேயே அவர் இருப்பிடம் என்று தெரிவித்திருப்பதால், அங்கு சென்று அவரையும் ஆசிரமத்தையும் பார்த்துவிட்டுப் போகலாம்" என்றாள். இதற் கிசைந்த முத்துக்ருஷ்ணன் முதலிய எல்லோரும் அப்போதே புறப்பட்டு நேரே பண்டாரத்தின் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

* * * *

பண்டாரம் அன்று வனஜவல்லியைக் கண்டது முதல் மனம் பேதித்துப் போய் அவனும் கண்டறியக் கூடாததும் இதற்கு முன் தான் அனுபவித்தறியாததுமான நூதன வேதனையால் கப்பிக்கொள்ளப்பட்டான். அது சக்கரம் போல சுற்றிச் சுற்றி அவனுடைய மனத்தையும் எண்ணத்தையும் பலவிதங்களில் சிதறடித்தும் வனஜவல்லியின் நினைவிலேயே வந்து நின்றுவிட்டது. "சீச்சீ! இது என்ன கர்ம வினையோ தெரியவில்லையே! பண்டாரக் கோலம் பூண்டு மன விரக்தி யடைந்து இத்தனை வருடங்களாகக் காலத்தைக் கடத்தி வந்த எனது துல்லியமான மனத்தில் இவ்வித நூதன எண்ணம் ஏன் உதித்து என்னை நிலைகலங்கச் செய்ய வேண்டும்?" என்று பலவிதமாகக் கலக்கத்தில் மூழ்கிப்போய் அன்று இரவு பூராவும் வருத்தத்துடன் இரவைக் கடத்தினான். மறுநாள் காலையில் வழக்கம்போல ஆசிரமத்திற்குச் சென்றான். அப்போது வனஜவல்லி தனது தலைவி செய்யும் பூஜைக்காக புஷ்பங்களைக் கட்டிக்கொண்டிருந்தாள். அவள் ஓர் பூங்கொடி போலும் அவளைச் சுற்றிப் பலவிதமான புஷ்பங்கள் கிடப்பது அப்போதே புஷ்பித்திருப்பது போலும் தோன்றிற்று. இக் காட்சியிலிருக்கும் வனஜவல்லியைப் பண்டாரம் கண்டதும் அவனுடைய மனோ வேதனை முன்னிலு மதிகரித்தது. அவனுடைய மனம் வனஜவல்லியுடன் பேசுவதற்குத் தவித்தது. அவன் இடத்தையும் தனது கோலத்தையும் கண்டு தன்னடக்கமடைந்து மெல்லிய குரலால் "அம்மா!" என்று கூவினான்.

புஷ்பங் கட்டிக்கொண்டிருக்கும் பூங் கொடியாகிய வனஜவல்லி அப்போதே அவனுடைய குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். தன்னெதிரில் நிற்கும் பண்டாரத்தின் தரிசனத்தைக் கண்டாள்;

ஆனந்தங் கொண்டாள். "ஆகா! தாங்களா! உட்காருங்கள்; என் தலைவி நீராடச் சென்றிருக்கின்றார்கள்; இதோ வந்துவிடுவார்கள். தாங்கள் சற்று இப்படி உட்காருங்கள்." என்று ஓராசனத்தைக் காட்டி அமரச் செய்தாள். பண்டாரம் அவ் வாசனத்தி லமர்ந்தானே யன்றி மன மென்னவோ நிலையில் நிற்கவில்லை. தன்னுள்ளெழும் வேதனைகளை அடக்கிக்கொண்டு ஒருவாறான முகத்துடன் உட்கார்ந் திருந்தான். இதைக் கண்ட வனஜவல்லி "ஐயா! என் தமது முகம் ஒருமாதிரியாக விருக்கின்றதே! உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்றாள்.

பண்டாரம்:—கூட்டிலடைபடாத சிங்கமொன்று காட்டி லலைந்து கிடந்தது. அச்சிங்கத்தை யோர் அழகிய வெட்டை மான் துரத்தி வாட்டமாகப் பிடித்துக்கொண்ட அதிசயங் கண்டேன். அதுவே எனது முகவாட்டத்தின் காரணமாகும்.

வனஜ:—(திடுக்கிட்டு, சமாளித்து) மேட்டிமையான மானின் வசம் தாட்டீகமான சிங்கமகப்படுவது கேட்டறியாத புதிய விஷய மன்றே; மாட்டை மேய்த்த (கோனும்) சிங்கமும், ஆட்டத்தில் சிறந்த (அரனும்) சிங்கமும் (வேத) பாட்டிற்குகந்த (பிரமனும்) சிங்க மும் வாட்டமான மானின் வசம் அகப்பட்டு ஆட்டமாடி உலகிற்குக் காட்டிய அதிசயம் புதிதான ரகஸியமன்றே! இதற்குத் தமது முகம் வாட்டமடையக் காரணமென்ன? க்ருஷ்ண பக்ஷம் சென்றால் சுக்லபக்ஷம் (பர்வகாலம்) தானே வந்து சேருகின்றது. இது ஓர் வியப்பா?

பண்டாரம்:—(ப்ரமிப்படைந்து போய் தனக்குள் வனஜவல்லி யின் புத்தி சூக்ஷ்மத்தை எண்ணி வியந்து பின் பேசத் தொடங்கி அந்த மான் சிங்கத்தின் சொந்த மானுகிவிட்டால் சிந்தை களித்து அந்தமுட னிலகும்.

வனஜ :— கோவர்த்தனகிரிதாரியாயும், கோபாலர்க்குப காரியாயும், சகல லோக போஷகனுயும், அகில ஜன பூஷகனுயும், துஷ்டர்களுக்குக் காலனுயும் இஷ்டர்களுக்குப் பாலனுயும், விளங் கும் என்னப்பன் மந்தகாசவதனனின் அந்தமான கடாக்ஷ பல முண்டாயின் அந்த மான் சொந்த மானுவதற்கு விந்தை என்ன?— என்றாள். இதற்குள் தலைவி வந்துவிட்டாள்; பண்டாரம் எழுந்து வணங்கி வழக்கம்போல பேசிவிட்டுப் போய்விட்டான். அவன் மனம் ஏற்கெனவே குழம்பிக் கிடந்ததற்கு அனுகூலமாய் இங்கு நடந்த சம்பாஷணையினுல் முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்த கலவர முண்டாகிவிட்டது. அவன் அந்த வேதனையுடன் அன்று

பொழுது செல்ல மறுதினம் காலையில் ஜப தப பூஜைகள் எல்லாம் முடித்துக்கொண்டு ஆசிரமத்திற்குப் புறப்படுகையில் நாம் முன் குறித்த எல்லோரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்ட பண்டாரம் அளவற்ற ஆநந்த மடைந்து அவர்களை உப சரித்து ஆசிரமத்தின் உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்தான். அப்போதே கல்யாணி பண்டாரத்தை உற்றுநோக்கிய தால் திடுக்கிட்டு வியப்புக் குறியுடன் 'ஆகா! நீ அப்பாசாமியின் குமாரன் சாமிநாத னல்லவா? இதென்ன வேஷமடா! ஐயோ! உன் தாய் தந்தையர் உன்னை இக் கோலத்தில் கண்டு வாளா விருக்கின் றார்களா! நீ ஏன் இவ்விதம் பண்டாரக் கோலத்துடன் திண்டாடி நிற்கிறாய்? உனது விஷயமென்ன விளங்கக் கூறு.'' என்றாள். இதைக் கேட்ட எல்லோரும் அதி யாச்சரிய மடைந்தார்கள்.

பண்டாரமும் தாங்க வியலாத அபாரமான ப்ரமிப்படைந்து "ஆகா! என்னை ஆண்டிக்கோலமென்றுகேட்கிறீர்களே! உங்களுடைய கோலம் இவ்விதமாகிவிட்டதே! ஆ! நீங்கள் கல்யாணி அத்தை தானே! இதன்ன அதிசயம்! எனக்கொன்றும் விளங்கவில்லையே! தாங்கள் அம்பலவாணர் வீட்டிலிருக்கையில் தங்கள் பர்த்தா போலீஸ் இன்ஸ்பெக்டர் என்றும், ஏதோ காரணத்தினால் தள்ளி விட்டார் என்று என் தாயார் கூறக் கேட்டதுண்டு. இதோ இவரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் எனத் தெரிந்தது. தாங்கள் இவருடன் வந்திருப்பதால் தங்கள் பர்த்தாவா இவர்? அடடா அதிசயமே! தங்களுக்கு 18 மாதங் கழித்துப் பிறந்த குழந்தை யொன்று புஷ்பா என்று இருந்ததே! அக் குழந்தை எங்கே! நீங்கள் வீட்டைவிட்டுச் சென்றதும் எங்கள் கதி யொரு வழியாகிவிட்டது. (தனது வரலாறு முற்றும் தலைவியுடன் கூறியதைக் கூறி) என் கதி இவ்விதமாகி விட்டது; தங்கள் குழந்தை எங்கே?'' என்று அடுக்கடுக்காக மீண்டும் கேள்விகளைக் கேட்டான்.

இதைக்கேட்ட எல்லோரும் ஆச்சரியமடைந்து "இதென்ன அற்புதம்! பண்டாரசன்னிதிகளும் நமது உறவினராகவே ஆகி விட்டனரே! ஐயோ! தான் பட்ட துன்பத்தினால் விரக்திபடைந்து இவ்வித கோலம் பூண்டுவிட்டார்போல விருக்கின்றது.'' என்று வியந்து கூறிக்கொண்டார்கள்

கல்யாணி:—ஐயோ! சாமிநாதா! புஷ்பாவின்கதி அதோகதி யாகிவிட்டதே! அவள் குழந்தையாகவிருக்கையில் நீ அடிக்கடி அவளைத்தூக்கி மடியில் வைத்துக்கொண்டு 'நானே உன்னை மணக்கப்போகிறேன்' என்று கொஞ்சிக்குலாவியதும், நீங்கள் வாழ்ந்துவந்ததும் எல்லாம் கனவாகிவிட்டன. அவளுடைய நாலா

வது வயதில் அவளைக் காணாது பறிகொடுத்துவிட்டேன். உம். எங்கள் விதி ஒருவழியாகிவிட்டது. உங்கள் குடும்பம் பாழாகி விட்டதைக் கேட்க மனம் பதறுகின்றது. ஐயோ! இதென்ன ஆண் டிக்கோலமடா? இதை உன் பெற்றோரிருந்தால் கண்டு சகிப் பார்களா!" என்று கண்ணீர் விட்டாள்.

சாமிநாதன்:—அத்தை! ஐயோ! குழந்தை புஷ்பாவைக் காணாது பறிகொடுத்துவிட்டாயா? அது எங்குபோய்விட்டது? அகப்படவே இல்லையா! உம். நாம் ஒன்று நினைத்தால் கடவுள் ஒன்று நினைக்கின்றார். தங்களுடைய பர்த்தாவினிடம் சேர்ந்துவிட்டது ஓர் அதிசயந்தான்.

நவநீதம்:—ஏனையா! இது பெண்பிள்ளைகள் பாடசாலையா! ஆண் பிள்ளைகளுடையதா!

சாமிநாதன்:—இது ஆண்பிள்ளைகளுடையதே! பெண்பிள்ளைகள் பாடசாலை அடுத்த வீதியிலி ருக்கிறது. அழைத்துச்செல்கி றேன்—என்றுகூறி அந்த பாடசாலை முற்றும் அவர்களுக்குக்காட்டி பிள்ளைகளையும் காண்பித்துப் பிறகு பெண்கள் பாடசாலைக்கு அழைத்துச் சென்றான்.

அவ்வமயம் பாடசாலையில் தலைவி பூஜைசெய்து முடித்ததும் அங்குள்ள எல்லாப்பெண்களும் ஒன்றாகச்சேர்ந்து கடவுளை துதித் துப் பாடிக்கொண்டிருந்தார்கள். அதை அங்கு சென்ற எல்லோரும் வெகு ஆநந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பண்டாரம் தலைவியிடத்தில் இங்கு வந்திருக்கும் மனிதர்களைப்பற்றி தெரிவித் தான். தலைவியும் இவர்களை வரவேற்று, "ஆகா! போலீஸ் இன்ஸ் பெக்டர் முத்துக்ருஷ்ணனைக் காணவில்லை என்று கேள்விப்பட்டு வருந்தினோம். (அப்போது வனஜவல்லியின் வளர்ப்புப்பாட்டனார் வருகிறார்) ஆகா! அதோ பெரியவர் வந்துவிட்டார். தாதா! தாங் கள் அன்று தமது தம்பியின் குமாரனைக் காணவில்லை என்றதைக் கேட்டு மிகுந்த வருத்தப்பட்டுப் புலம்பினீர்களே! அந்த மனிதர் இதோ வந்துவிட்டார். இனி சந்தோடமடையுங்கள்" என்றாள். இந்த வார்த்தையைக்கேட்ட எல்லோரும் அதியாச்சரியமடைந்து கிழவரை உற்றுக்கவனித்தார்கள். அதே தருணம் கிழவர் "ஆ! என் தம்பி வைத்துச்சென்ற முத்துக்ருஷ்ணா! இப்போதும் என் னிடம் பேசுவதற்கு உன் தமக்கையின் உத்தரவுவேண்டுமா! என் னப்பா! என்னிடம் நீங்கள் த்வேஷமாகவிருப்பினும் எங்காவது க்ஷேமமாகவிருந்தால் போதும் என்று எண்ணி இருக்கிறேன். உன் னைக்காணவில்லை என்ற செய்தியைக்கேட்டு வருந்தியது கொஞ்ச

மல்ல. உன்னைக்கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தேன்'' என்று அவனைக் கட்டியணைத்து உச்சிமோந்தார்.

தனது பெரிய தந்தை என்பதை யறிந்த முத்துக்ருஷ்ணனும் விசனமேலீட்டால் புலம்பியவாறு "பெரியப்பா! சென்றுபோன நாட்களையும், சென்று மறைந்துபோன விஷயங்களையும் மறந்து விடுங்கள். எனது தப்பிதங்களை மன்னித்து என்னை உமது மகனாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.'' என்று கூறி அவரது காலில் விழுந்து வணங்கி தனது மனைவிகளையும் வணங்கச்செய்து தனது க்ஷேம லாபங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அங்கு எல்லா சிறுமிகளுடனும்கூட நின்றிருந்த நமது வனஜவல்லியைக் கண்ணுற்ற நவநீதம், அவளைப்பார்க்கிறாள்; தன்னுயகனைப் பார்க்கிறாள். இருவர் முகமும் ஒரே அச்சாகவிருப்பது கண்டு தனக்குள் வியப்படைந்து "ஒருவேளை காணாமல்போன குழந்தை இவளாகவிருக்குமோ?'' என்று எண்ணி கல்யாணியைநோக்கி "அக்கா! அதோ நீலப்புடவை யணிந்திருக்கும் பெண்ணைப்பார்த்தால் நமது ப்ராணநாதரின் சாயலைப்போலவே இருக்கின்றதே! அவள்தான் நீ இழந்துவிட்ட புஷ்பாவாகவிருக்கலாமோ? பார்'' என்று காட்டினாள்.

ஆகா! கல்யாணி வனஜவல்லியை உற்றுக் கவனித்ததுதான் தாமதம். அவளுடைய அடையாளங்களை எல்லாம் ஒரு நொடியில் தெரிந்துகொண்டாள். கண்ணிலிருந்த மச்சத்தையும் பார்த்தாள். அவளே தான் இழந்துவிட்ட புஷ்பா என்பதை உணர்ந்துகொண்டாள். புத்திரவாஞ்சை அவளைச் சூழ்ந்துகொண்டது. "ஆகா! என் குறையை நீக்கவந்த குலதெய்வமே! நவநீதம்! அவளே எமது குழந்தை புஷ்பா!'' என்று கூறிக்கொண்டே ஆவேசங்கொண்டவள் போல ஓடி வனஜவல்லியை இழுத்துக்கட்டிக்கொண்டு "என் கண்ணே! என் செல்வமே! என் கண்முன்படாது மறையவிருந்து என்னை வருத்திய குழந்தாய்! புஷ்பா! என் குறையைத் தீர்த்த கண்மணி!'' என்று தாறுமாறாகப் பேசிக்கொண்டு அவளை முத்தமிட்டு, உச்சிமுகந்து அழைத்துக்கொண்டுவந்து "என் மன்னா! இதோ உமது பொருளை உம்மிடம் ஒப்புவித்துவிட்டேன். இவளே எனது கர்ப்பத்திலிருந்து 18 மாதங்கள் சென்று பிறந்த பாவை; உங்கள் பொருளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.'' என்று படபடத்துகூறினாள்.

அதுபரியந்தம் கிழவருடன் முத்துக்ருஷ்ணன் பேசிக்கொண்டிருந்தமையால் இதையொன்றும் கவனித்தானில்லை. கல்யாணி ஒரு பெண்மணியைக் கொண்டுவந்து தன்னிடம் விடும் சமயத்திலேயே கிழவர் தனது வரலாற்றைக்கூறி "இந்த பெண்ணைநான் 4 பிராயத்தில் வீதியில்கண்டு எடுத்து இங்குசேர்த்து வளர்க்கிறேன்'' என்று கூறிமுடிக்கவே, முத்துக்ருஷ்ணன் ஒன்றுமே தோன்றாது

திகைத்துக் கல்போல நின்றுவிட்டான். வனஜவல்லி அவர்களுடைய புதல்வி என்ற செய்தி அந்த க்ஷணத்திலேயே அங்குள்ள எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. தலைவி அதிசயமடைந்து "ஆகா! இன்ஸ்பெக்டரவாள்! உமது குழந்தையை உமது பெரிய தந்தை யாரே எடுத்து வளர்த்து இங்கு சேர்த்துக் காப்பாற்றி உம்மிடம் தக்க பருவத்தில் ஒப்புவித்த அதிசயத்தை என்னவென்று கூறுவேன்? இதென்ன விநோதமான சம்பவம்! ஆகா! எல்லாம் கடவுளின் திருவிளையாடலே யன்றி வேறல்ல. 'இக்குழந்தை எவ்விதம் காணுது போயிற்று?' என்று தலைவி நவநீதத்தைக் கேட்க அதற்கு அவள் அது காணுதுபோன வரலாற்றைத் தெரிவித்தாள்.

கிழவர் தான் எடுத்து வளர்த்த அனுதைக்குழந்தையானது தனது தம்பியின் பேத்தியாகவே இருந்ததை எண்ணி அளவற்ற மகிழ்ச்சியடைந்து ஆநந்தக்கூத்தாடுகின்றூர். முத்துக்ருஷ்ணன் தன் பெண்ணைக்கண்டு மெய்ம்மறந்து அவளிருகரங்களையும் கண்ணில் ஒற்றிக்கொண்டு ஆநந்த பாஷ்பம் பெருகியவண்ணம் "என் கண்ணே! மறைய வளர்ந்த மாணிக்கமே! என் செல்வமே! தேடரிய செந்தேனே! தெவிட்டாவமுதே! கடவுள் கண்ணைக் கொடுத்திருந்தும் கண்ணில்லாக் குருடனுகக் காலங்கழித்தேனே!" என்று அன்பின் பெருக்கால் கொஞ்சிக்கூத்தாடுகிறுன். நவநீதமோ, புஷ்பாவைக் கட்டியணைத்து முத்தமிட்டு அவளைக் கசக்கித்துவையல் செய்து கன்னத்தில் கணக்கற்றமுத்தமிட்டு அதை ஒட்டையாகிவிடுகின்றுள். எங்கள் குலவிளக்கே! இணையிலாக் கற்பகமே! திங்கள் மதிமுகத்தோய்! தீங்கனியின் தீஞ்சுவையே! எங்கள் குறை தீர்த்த எழில் மானே! மின்னிடையே! அங்கம் குளிர்ந்தோமடி. ஆருயிர்க் கிள்ளையே! அற்புதஜோதியே! அருமைக்கண்ணே! கண்ணின் மணியே! மணியுள் பாவையே! என்னுவிக்குகந்த புஷ்பமே!" என்று வாஞ்சை மிகுந்து அன்பு பெருக்கெடுத்து அரியமொழிகளால் கொஞ்சுகின்றுள்.

இந்த அற்புதமான காட்சியைக் கண்டதும் வனஜவல்லி அபாரமான ப்ரமிப்படைந்துவிட்டாள், தனது தாயார் நவநீதமா, கல்யாணியா! என்பது அவளுக்குப் புலப்படவில்லை. இருவரையும் கட்டித்தழுவிக்கொண்டாள்; வணங்கினுள். ஆநந்தக்கண்ணீர் விட்டாள். "அம்மா! அப்பா!" என்று அனற்றுகின்றுள். அவள் இன்னதென்று தெரியாதவிதம் மகிழ்ச்சியால் மயங்கிவிட்டாள். தான் முன்னெரு தினம் வந்த அநியாயக் கடிதத்தைக்கண்டு புலம்பியதும் தலைவிதேறுதல் கூறியதும் நினைவிற்கு வந்தது. 'நமது தாயும் தந்தையுமிருக்கையில் வீணை கடிதத்தால் வேதனையுற்றேமே' என எண்ணினுள். தனது நெடுநாளையகுறையைத் தீர்த்துவைத்தக் கடவுளை மனதார வணங்கித் துதித்தாள். தன்னை வளர்த்த பாட்டனர் தனது உறவினராகவே வந்துவிட்டதை

எண்ணி மட்டிலா மகிழ்ச்சியை அடைந்தாள். சற்று முன் புஷ்பாவுக்காக வருந்திய சாமிநாதன் (பண்டாரம்) தான் காதலிக்கும் மாதே புஷ்பா என்பதைத் தெரிந்து அளவிலா மகிழ்ச்சியடைந்தான். இந்த கோலாகல ஆநந்த மேலீட்டால் அன்று ஆசிரமத்திற்கும் விடுமுறை நாளாகிவிட்டது. ஒவ்வொருவரும் தம் தம் மனம் போனவாறெல்லாம் பேசி தமது ஆநந்தத்தைத் தீர்த்துக் கொள்கிறார்கள். அன்று எல்லோருக்கும் ஆசிரமத்திலேயே தலைவி விருந்து செய்வித்தாள்.

எல்லோரும் போஜனம் ;செய்கையில் தலைவி எல்லோரையும் நோக்கி "அன்பீர்காள்! எனக்கும் 70 வயதாகின்றது. இந்த 70 வருடகாலத்தில் யான் இன்று கண்ட பேரானந்தமானதும் அபாரமான வியப்பைத்தரக் கூடியதானதுமான விஷயங்களைக் கண்டதுமில்லை: கேட்டது மில்லை. வெகு காலமாகப் பிரிந்திருந்த உங்கள் குழந்தையை நீங்கள் அழைத்துக்கொண்டுபோய் விடப் போகிறீர்களே என்று என் மனம் ஏங்க வாரம்பித்துவிட்டது. மகளைத் தனியாக அழைத்துச் செல்லாது இந்தப் பண்டார கோலத்தைக் களைந்து அவரை மருமகனாக்கி இருவரையும் அழைத்துச் செல்லுங்கள். நான் வளர்த்து வித்தை சொல்லிவைத்ததற்காக விவாகத்தையும் முடித்து அனுப்புகிறேன். சாமியாரய்யா! இக் கோலத்தை இம் மட்டுடன் களைந்து விடுங்கள். நேற்று நீரும் வனஜாவும் பேசிக்கொண்ட விஷயத்தை யான் மறைந்து கேட்டுக் கொண்டிருந்தேன். திருவள்ளுவர்,

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று"

என்று கூறியுள்ளாரல்லவா? தமது மனம் பேதித்த பிறகு துறவறம் நடத்துவதைவிட மனமொத்த இல்லறம் நடத்துவதே மேலானது. மேலும் இப்போது சிங்கத்தினிடம் மான் கிடைத்துவிட்டது. யான் நேற்று அதைக் கேட்டது முதலே விவாக விஷயமாக யோசிக்கலானேன். இன்று தெய்வச் செயலால் எல்லாம் ஒன்று கூடிவிட்டது. இப்பொழுதே சமீபத்தில் ஓர் முகூர்த்தத்தைப்பாரும்." என்று தயாநந்தரை நோக்கிக் கூறினாள்.

இந்த வார்த்தைக்கு எல்லோரும் சம்மதித்தார்கள். போஜனமாகிய பிறகு தயாநந்தர் சுப முகூர்த்தம் பார்த்தார். அடுத்த சுக்ரவாரத்தில் முகூர்த்தம் அகப்பட்டது. விவாகத்தை திருக்கழுக்குன்றத்திலேயே செய்து விடவேண்டு மென்று கல்யாணி இஷ்டப்பட்டமையால் அவ்விதமே செய்ய ஏற்பாடு செய்து, முத்துக் கிருஷ்ணன் தனது தாய், தமக்கை, அம்பலவாணன் ஆகியவர்களைத் தவிர மற்ற பந்துக்களுக்குக் கடிதம் போட்டு விட்டான். தலைவி, பாடசாலைப் பெண்கள் உள்பட எல்லோரும்

திருக்கழுக் குன்றத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். முத்துக்ருஷ்ணனின் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள். இந்த அதிசயமான வரலாற்றையும் முத்துக்ருஷ்ணனின் தாயும் தமக்கையும் செய்த கொடிய அக்ரமத்தையும் கேட்டு எல்லோரும் வருந்தி அவர்களைத் திட்டினார்கள்.

கல்யாணி அப்போது சடையும் காவியுமாக இருப்பது கூடாதென்று நவநீதமும், முத்துக்ருஷ்ணனும், ஏமாவதியும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டு அவளை ஆடை யாபரணங்களை அணிந்துகொள்ளும்படியாகச் செய்வித்தார்கள். அது அவளுக்குச் சம்மதக் குறைவாகவே இருந்தது; எனினும் தனது நாயகன், நவநீதம் ஆகிய இருவருடைய கட்டாயத்தினால் அணிந்து கொண்டாள். நவநீதம் அவளுடைய சடைகளைக் கத்தரித்துச் சீவிச் சிறுக முடிந்துவிட்டாள். விவாக தினமும் வந்தது. விவாக மண்டபத்தில் தம்பதிகளிருவரையும் வெகு அற்புதமாக அலங்கரித்து உட்காரச் செய்து குறித்த சுப லக்னத்தில் சாஸ்திர விதிப்படி விவாகத்தைச் செய்து முடித்தார்கள். இந்த விவாக மகோற்சவம் வெகு சிறப்பாயும் பலவிதமான தான தர்மங்களுடனும், மேளவாத்தியத்துடனும், சங்கீதக் கச்சேரிகளுடனும் நடைபெற்றது. முத்துக்ருஷ்ணனுக்கும் நவநீதத்திற்கும் உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

விவாகம் முடிந்ததும் வந்திருந்த எல்லோரும் தம் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். பிறகு அவர்கள் ஊருக்குச் செல்வதற்குத் தயாராயிருக்கும் சமயத்தில் முத்துக்ருஷ்ணனை திருக்கழுக்குன்றத்திலேயே மாற்றிவிட்டதாக ஆபீஸிலிருந்து உத்தரவு வந்துவிட்டது. இதனால் எல்லோரும் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்தார்கள். தனது புஷ்ப கைங்கரியம் நிலைத்ததற்குக் கல்யாணி மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தாள். திருக்கழுக்குன்றத்தில் ஓர் பங்களா வாங்கிக்கொண்டு அதில் எல்லோரும் குடியேறினார்கள். கல்யாணி தான் முன்னர் வைத்திருந்த நந்தவனத்திலுள்ள புஷ்பங்களைத் தானே பறித்துவந்து அதை மாலை கட்டி வேதகிரீசனுக்கும் திருபுரசுந்தரி அம்மனுக்கும் சமர்ப்பித்து வரத் தொடங்கினாள். சாமிநாதனுக்கு முத்துக்ருஷ்ணன் போலீஸிலேயே ஓர் உத்தியோகம் செய்து வைத்தான். நவநீதமும் முத்துக்ருஷ்ணனும் தமது மகளும் மருமகனும் சந்தோடமாயும் ஆநந்தமாயும் விளையாடும் விநோதக் காட்சியைக் கண்டு மனம் பூரித்துப் புளகாங்கிதமடைகின்றார்கள். மூத்தவளோ வீட்டிலுள்ள சகல வேலைகளையும் தானே செய்வதும், தனது அருமைத் தங்கையை ஒருவேலையையும் செய்யவிடாது உடன்பிறந்த பிறப்பைக்காட்டிலும் அதிகமான பாசத்துடன் நடத்தி, தேனும் பாலும் போலவும் சர்க்கரையும் இனிப்பும் போல

வும் இருந்து வருகிருள். "நவநீதம் நடந்தால் கால் தேய்ந்துவிடும்; பேசினுல் தொண்டை யதிர்ந்துவிடும்.' என்று அத்தகைய ப்ரீதி மிகுந்து அன்பு சுரந்து பெற்ற தாயின் வாஞ்சையைவிட அதிகரித்த கனிகரமாக அவளிடம் நடந்து வருகிருள். நவநீதமோ தன்ஞல் கூடியமட்டில் தனது தமக்கையுடன் கலந்து வேலை செய்வதும் குடும்பத்திலுள்ள சகலமான பொறுப்புகளையும் தன் தமக்கையின் வசமே ஒப்புவித்து விட்டதுடன் பெட்டி சாவியையும் அவளிடமே கொடுத்துவிட்டாள். காலணுவுக்கு ஓர் பண்டம் வாங்குவதற்கும் அவளைக் கேட்டே வாங்கி வருகிருள். அவளைத் தனது நாதரிடம் தனிமையில் ஒன்று சேர்த்து வைப்பதற்குத் தன்னுலான வரையில் முயற்சி செய்தும் அதுமட்டும் பயன்படாது போய்விட்டது. பக்தி வைராக்யத்தில் சென்று லயித்துவிட்ட மனத்தை என் சேற்றில் அமுத்தவேண்டுமென்று எண்ணி வாளாவிருந்து விட்டாள். முத்து க்ருஷ்ணன் தனது அத்தையின் புதல்விகளாகிய அம்புஜம், பங்கஜம் இருவரையும் தன்னிடத்தில் அழைத்து வைத்துக்கொண்டு தனது சிநேகிதர்களின் புதல்வர்களுக்கு விவாகம் செய்து கொடுத்தான். வனஜவல்லியின் சிநேகிதையான லக்ஷ்மி, மனேன்மணியின் உறவினள் என்பதையும், மனேன்மணியின் செய்தியையும் கேட்டறிந்த தயாநந்தர் அந்த பெண்ணிடத்தில் இரக்கங் கொண்டு அவளையும் தக்க விடத்தில் விவாகம் செய்துவைத்தார். தயாநந்தர் தனது ஆஸ்தி பூராவையும் நவநீதத்தின் அனுமதியின் பேரில் வனஜவல்லி கல்வி கற்ற ஆசிரமத்திற்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டார். ஓர் தினம் பத்திரிகை யொன்றில் கீழ் வரும் விஷயங்கள் ப்ரசுரமாயிருந்தன. அதை முத்துக்ருஷ்ணன் உரக்கப் படிக்க எல்லோரும் கேட்கலானுர்கள்.

ஆச்சரியமான சம்பவம்.

"வீரப்பன் நாடகக் கம்பெனியில் நேற்றிரவு நடந்த சம்பூர்ண அரிச்சந்திராவில் மனேன்மணியம்மாள் என்ற நடிக மாது சந்திரமதியாக நடித்தார்கள். அந்தம்மாளால் பலவிதத்திலும் துன்பத்தையும், கஷ்டங்களையும், நஷ்டங்களையும், அவமானத்தையும் அடைந்த சிவராமன் என்பவர்—அம்பலவாணனுடைய புதல்வர் — அந்தம்மாளைப் பழிதீர்க்கும்பொருட்டு தான் இன்னுரென்று அவர்களுக்கு அறிவிக்காது, தான் ஓர் பிரபல நாடக பாத்திரர் என்று மாறுவேடத்துடன் கூறி,ஸ்பெஷலாக அரிச்சந்திர நாடகத்திற்கு வேண்டியவற்றைக் கற்றுக்கொண்டு நாடகமாடச்சென்றதாயும் அன்று இருவரும் சந்திரமதி, அரிச்சந்திரனுக நடிக்கையில் கடைசி சீனில் காசிராஜ

னுடைய உத்தரவுப்படி சந்திரமதியின் சிரத்தைக் கொய்யும்போது உண்மையான கத்தியினல் வெட்டிவிட்டார். அவரை உடனே கைது செய்துவிட்டார்கள். அந்தம்மாளை ஆஸ்பத்ரியில்கொண்டுவிட்டிருக்கிறார்கள். கேஸ் விசாரணையின் விவரம் பின்னர் வெளியாகும்.''

மேற்கூறிய விஷயங்களைப் படிக்கக் கேட்ட தயாநந்தரின் மனம் பெரு மகிழ்ச்சியை அடைந்தது. "ஆகா! இன்றே என் மனம் சந்தோடத்தையடைந்தது. கடவுள் என்பால் க்ருபை செய்து அந்த மனிதன் மூலம் உலகிற்கெல்லாம் பெருத்த துஷ்டையாகவிருந்த சனியனைத் தொலைத்தார்.'' என்றார். ஆனல் ஏமாவதியும் சிதம்பரமும், உண்மையாகவே வருத்தமடைந்து "ஐயோ! சின்னம்மா! உன் கதி இவ்விதமான ஆபாஸமாகவா முடியவேண்டும்?'' என்று மிகுந்த கவலையடைந்தார்கள். ஏமாவதிக்கும் சிதம்பரத்திற்கும் மனேன்மணியின்மீது உண்மையான ப்ரியமிருந்தமையால் அவளைத்தாம் எவ்விதமேனும் பார்க்கவேண்டுமென்ற அவா உண்டாகியது. தயாநந்தருக்கு அவ்விஷயத்தில் சம்மதமில்லையெனினும் தாங்கள் பார்க்கவேண்டுமென்ற அவாவை அவருடன் தெரிவித்து உத்தரவு பெற்றுக்கொண்டு மனேன்மணியிருக்கும் ஆஸ்பத்ரிக்குச் சென்று, அவளுடைய கோரமான படுக்கையைக் கண்டு சகியாது வருந்தி கண்ணீர் விட்டவண்ணம் "ஆ! சின்னம்மா! உன் கதி இவ்வண்ணமாகவா முடிந்தது! நாங்கள் யார் தெரிகின்றதா! எங்களைப் பார்'' என்று கேட்டார்கள். இதுகேட்ட மனேன்மணி சிறிது கண் திறந்து பார்த்து திடுக்கிட்டு இருவருடையகைகளையும் பிடித்துக் கொண்டு "ஆகா! சிதம்பரம்.! ஏமாவதி! உங்களை வதைசெய்ததின் பலனை கைமேல் கண்ணுடியைப் போல அனுபவித்துவிட்டேன். உத்தமரான என் ப்ராணநாதரை த்ரோகஞ்செய்துவிட்ட பாபி என்னைக் கடவுள் சரியாக தண்டித்துவிட்டார். ஐயோ! நல்லொழுக்க மற்றதன் பலனைக்கண்டேன். கற்பிழந்ததின் கதியை அனுபவிக்கின்றேன். பொறுமையின் கேட்டை அறிந்தேன். கல்வியற்ற நிலைமையின் கஷ்டத்தைத் தெரிந்தேன். தெய்வபக்தியில்லாத் தன்மையின் பலனை உணர்ந்தேன். ஆ! உயிர் துடிக்கின்றதே! ஏமாவதி! உன்னிடத்திலும், சிதம்பரம்! உன்னிடத்திலும் பாவி யான் கொண்டிருந்த த்வேஷத்தினல் உங்களுக்குப்பிறந்த மகா உத்தமியான நவநீதத்தையும் இம்சித்து அவளும் அவள் புருஷனும் பகைமை அடைந்து கஷ்டப்பட்டு அதைக்கண்ட பெற்றோர்களாகிய நீங்கள் வயிறெரியும் பொருட்டு அதிரூபம்மாள் என்ற பெயருடன் அனியாயக்கடிதம் நவநீதத்தின் புருடனுக்கு எழுதினேன். ஐயோ! நான் செய்த சதியை எனக்கே ஈசன் திருப்பியதுபோலாய்விட்டது. ஆகா! சிறிய அழகிய பெண்களை நாடகத்தில் சேர்த்தால் மிகுந்த

பணம் சம்பாதிக்கலாமென எண்ணி சிவராமனைக் கைவசம் செய்து கொண்டு ஆசிரமத்துப்பெண்களிடம் நேசங்காட்டி அவர்களை அடித்துக்கொண்டு வரும்படியாக நல்ல மனிதனைத் தூண்டி அவனைத் தீயவனுக்கினேன். அவன் பெண்களைக் கொண்டுவராமையால் ஆசிரமத்தின் பெயரைக் கெடுக்கவெண்ணி அதிலுள்ள ஓர் பெண்ணின் வரலாற்றை யறிந்து அதை வளர்த்த பாட்டனுருக்கு அக்ரமக்கடிதம், பெண்ணைக்கொண்டுவிடும்படியாக பயமுறுத்தி, எழுதினேன். பயந்துகொண்டு விட்டுவிடுவார்கள் என்ற மூடம்நம்பிக்கைகொண்டு அவ்வாறு செய்தேன். அப்பெண்ணை வைத்துக் கொண்டு நாம் ப்ரபலமாகலாமென எண்ணினேன். அதிலும் தோல்வியடைந்தேன். அதற்கு முன்னர் ஓர் ஆளை எனது கைவசம் செய்துகொண்டு அழகிய பெண்பிள்ளைகளைக் கொண்டுவந்தால் தகுந்த பரிசளிப்பதாகத் தெரிவித்தேன். என் துர்ப்போதனையை நம்பிய அந்த ஆள் திருக்கழுக்குன்றத்தில் கோயிலில் ஓர் அழகிய பெண்ணைக்கண்டு சாமர்த்தியமாய் அவளைத் தன்பெண்ஜாதி எனக் கூறி தந்திரமாய் வீட்டிற்குக் கொண்டுவந்தும் பயனளிக்காது அம்மடந்தை தன்னை கல்பாறையில் மோதச்செய்து தான் தப்பித்துக்கொண்டுவிட்டதாயும் இனிமேல் தான் இவ்விதமான கொடுந்தொழில் புரியமாட்டேனென்றும் என்னிடம் சண்டையிட்டு என்னை அவமானப்படுத்த எண்ணி ஆத்திரங்கொண்டான். அவனால் எனக்கு என்ன விபத்து நேருமோ என்று எண்ணி அவனுக்கு விஷமிட்டுக்கொன்றுவிட்டேன். அந்த பாபமே என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டது. அவனுடைய ஆவேசமே கத்தியாகி என் தலையை வெட்டிற்று. ஐயோ! மாபாவியாகிய யான் செய்த சதிகளையும் கணக்கிலடங்காத கொடுமைகளையும் சிறிதும் பாராட்டாது என்னை—இச்சண்டாளியை—கொலைக்காரியை—பார்க்கவந்த உங்களுடைய நன்மைக்கே மழைபொழிகின்றது. உலகம் செழிக்கின்றது. என் மாமனின் மகளையும் பாழாக்கினேன். ஐயோ! என் செய்கையை எண்ணிடில் என்னகம் துடிக்கின்றதே! ஆ! ஆ! பதியை மதியாத பாவி என்றும், கற்பழிந்த கன்னி என்றும் உலகம் நகைக்கும் உதவாப்பண்டமென்றும், கண்டவர்கள் காரியுமியும் கங்காலாகவும் விலையிலாத கற்பை வீணாக இழந்து என்னுயுள் முற்றுமுள்ள ஒவ்வொரு அவப்பொழுதையும் தவப்பொழுதாக்காது பாபமூட்டையைச் சுமந்துகொள்ளும் பவப்பொழுதாக்கிக் கழித்துக் கடைசியில் வெட்டுண்டு மாளவும் விதி நேர்ந்துவிட்டது. ஆ! கருணையங்கடவுளே! நான் செய்த பாபங்கள் முற்றும் என்னெதிரில் தாண்டவமாடுகின்றன. ஐயோ! பயமாயிருக்கிறதே! ஆ! ஆ!'' என்று ஒரு க்ஷணநேரம் அடித்துப் புரண்டு உயிரை இழந்தாள்.

இந்த ஆச்சரியமான வரலாற்றைக் கேட்டதும், அவளுடைய

பரிதாபகரமான மரணத்தைக் கண்டதும் இவர்களுடைய மனம் கலங்கிக் குழம்பி வருத்தமேலிட்டால் தவித்தது. அதிரூபமென்ற பெயருடன் கடிதம் வரைந்ததும், நமது மூத்த பெண்ணுக்குக் கோயிலில் நேர்ந்த விபத்திற்குக் காரணமாயிருந்ததும், சிவராமனைச் சிரழியச்செய்ததும் ஆக எல்லா கேடுகளுக்கும் காரணகர்த்தா இவள்தானு! அடடா! என்ன துற்புத்தி! என்ன அநியாயம்! உம். கடவுள் நம்மை இங்கு வரும்படிச்செய்தது இவ்விரகஸியத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுத்தான் போலும். ஆகா! என்னப்பனின் மகிமையை யாரே யறிவார்!" என்று வியந்து பேசிக்கொண்டு திரும்பித் தம்மிடம் வந்து சேர்ந்து, அங்கு கேட்ட ஆச்சரியச் செய்திகளையும் அவளுடைய மரணத்தையும் தெரிவித்தார்கள். இதைக் கேட்ட எல்லோரும் அளவற்ற ஆச்சரியத்தை அடைந்தார்கள். கல்யாணி மட்டும் தனது அண்ணனின் மகன் கதி இவ்விதமாக முடிந்ததை எண்ணி விசனித்தாள். எனினும் தன் அண்ணியால் தான் அடைந்த துன்பத்தை எண்ணி அவ்விடத்திற்குச் செல்லாதிருந்துவிட்டாள். அம்பலவாணனின் புதல்வனுக்கு அவன் செய்த குற்றத்திற்குத் தக்கபடி தண்டனை விதிக்கப்பட்டது. மகன் இத்தகைய தண்டனை யடைந்ததைக் கேட்டுச் சகியாத தாயும் தந்தையும் தற்கொலை செய்துகொண்டு உயிர் துறந்தார்கள். இக்கோர சம்பவத்தைக் கேட்ட கல்யாணி தீராத் துயர மடைந்தாள். "ஐயோ! எல்லாம் உலகத்தவரைப் போல நடந்திருக்குமாயின் நமது அண்ணனின் மகனுக்கு நம் குழந்தையைக் கொடுத்து உலகத்தவரைப் போல ஒற்றுமையாய் வாழலாகுமே! எல்லாம் சின்னபின்னமாய்ச் சிதறிவிட்டதே! என் தாயின் குடும்பமே தரையோடு மடிந்துவிட்டதே!" என்று அபரிமிதமான வருத்தத்தை யடைந்து கண்ணீர் விட்டாள். கல்யாணியின் மாமியும் நாத்தியும் தமது மகன் நவநீதத்தைத் தம்மிட மிருந்து பிரித்து அழைத்துக்கொண்டு போய்விட்டதால் அவர்களிடம் பகைமை கொண்டு தேச யாத்திரை சென்று தமது கையிலிருந்த பணத்தைச் செலவிட்டுக்கொண்டு சுமார் 5-6 வருடங்கள் வரையில் ஊரூராய்ச் சுற்றிவிட்டு வந்தார்கள். அவர்கள் தமது ஊருக்கு வந்ததும் முத்துக்ருஷ்ணனுடைய சகல வரலாறுகளையும் தற்போது திருக்கழுக்குன்றத்திலிருப்பதையும் கேள்விப்பட்டதுதான் தாமதம் குடல் நடுக்கமெடுத்துக்கொண்டது. தாம் செய்திருந்த சதிகளெல்லாம் தமது மகன் தெரிந்துகொண்டுவிட்டதனால் தம்மை என்ன செய்வானே! பழித்துக்கொண்டு சண்டையிட்டுத் தம்மை சந்தியில் இழுத்து அவமானம் செய்துவிடுவானே! என்று பயந்துகொண்டு இரவோடிரவாய் மீண்டும் காசிக்கு ஓடிவிட்டார்கள். இப்பக்கமும் தலைகாட்டலாகாதென்று தீர்மானித்துவிட்டார்கள். இச்செய்தி முத்துக்ருஷ்ணனுக்குத் தெரியவாராது.

சிதம்பரத்தின் அண்ணனும் தன் தாயார் தம்பியுடன் சேர்ந்து கொண்டதைக் கேட்டு பழய பகையைவிட்டு இவனுடன் வந்து கலந்துகொண்டான். முத்துக்ருஷ்ணன் தனது பெரிய தந்தையின் கீழ்படிந்து அவரை வெகு பக்ஷமுடன் ஆதரித்து வீட்டிலேயே வைத்துக்கொண்டான். எல்லோரும் ஏகோபித்த குடும்பமாய் ஒரு மைப்பட்டுப் பூவும் மணமும் போலும், கனியும் இனிப்பும் போலும் நித்யகல்யாண வைபோகத்துடன் குடும்பம் நடத்துகிறார்கள். சில மாதங்களாயின. நவநீதம் கர்ப்பவதியானாள். கர்ப்பவதியாகிய நவநீதத்தை அவள் தாயும் தமக்கையும் இருகரங்களிலும் தாங்கி யுபசரித்து இஷ்டமான பண்டங்களைச் செய்வித்துக்கொடுத்து பூமுடித்து, சீமந்தம் செய்து வெகு பக்ஷத்துடன் அவளை நடத்தி னார்கள். 10வது மாதத்தில் ஓர் ஆண்குழந்தை எழில் விளங்கவும் எல்லோரையும் களிப்பிக்கும் பொருட்டும் பிறந்தது. கோடி சூர்ய ப்ரகாசம்போலப் பிறந்த குழந்தைக்கு முறையே 11வது தினம் ஸ்நானம் செய்வித்து வேதகிரீசன் என்று நாமமிட்டு நாளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார்கள். கல்யாணி யும் புஷ்பாவதியும் குழந்தைக்குத் தமது கரமே தொட்டிலாகவும், தமது மடியே சயனக்கட்டிலாகவும் செய்து ஒரு விநாடியும் கீழே விடாது வளர்த்துவந்தார்கள். குழந்தையின் அப்த பூர்த்தி தினத்தை வெகு சிறப்பாய் திருவிழாபோலக் கொண்டாடி அதி யத்புதமாகவும் அபாரமான செலவுகள் செய்தும் நடத்தினார்கள். குழந்தையை மாலையில் கோயிலுக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு வருகையில் வழியில் ஓர் சாது உட்கார்ந்திருப்பதைக்கண்ட கல்யாணி திடுக்கிட்டு "ஆ! ஆதியில் ஓர் தினம் நமக்கு வழியில் குறிசொல்லிய மகானுபாவனல்லவா?" என்று எண்ணி அருகில் சென்று வணங்கி அவரை "சுவாமி! அடி யேனை நினைவிருக்கின்றதா?" என்று கேட்டாள்." அதே சமயம் அவர் கல்யாணியைக்கண்டு "அம்மா! உனது கஷ்டந் தொலைந்து நீ சுகமாயிருக்கும் செய்தியை எனது தேவதையின் மூலமறிந்தேன். உனது பூர்வ வினையை அனுபவித்துவிட்டாய். இனிமேல் உனக்குக் குறைவில்லை. உன் பர்த்தாவுக்கு இன்னும் உயர்தர வேலையாகப் போகிறது. உனது குழந்தை புஷ்பாவின் வயிற்றில் தற்போது சிசு இருக்கிறது. இன்றைக்கு எட்டாவது மாதம் உனக்கு ஓர் பேரன் பிறக்கும். உனது தங்கை உலகத்தில் பிறத்தற்கரிதானவள். நீ செய்த பாக்யமே அவளை தங்கையாக அடைந்தாய். தயாநந்தரை நோக்கி "ஐயா! நீர் வெகு காலத்திற்கு முன் இழந்துவிட்டபொருளை நாளைக் கைப்பற்றப்போகிறீர். அதாவது,—உமது புதல்வனை உமது தங்கைக்கு வளர்ப்பு அளித்துப் பின்னர் மனஸ்தாபத்துடன் மறந்துவிட்டீரல்லவா! அவர்களும் கண்காணாத தேசயாத்திரை செய்யச் சென்றுவிட்டார்களல்லவா? அந்த மகன் நாளை இவ்வூர்

கலெக்டராக வரப்போகிறான். அவனுடைய வளர்ப்பு தாய்தந்தை முதலியோர் காலவியோகமாய்விட்டார்கள். உமது மகனை நீர் அடையும் காலம் வந்துவிட்டது. சங்கரா! நாராயணு!" என்று கூறிக்கொண்டே போய்விட்டார். அவர் முற்றுந் துறந்த முனிவர் என்றும், ஆழ்ந்த ஞானி என்றும், அபாரமான வல்லமையுடைய ஜோஸியர் என்றும் இவர்களுக்கு விளங்கிவிட்டது. அவர் கூறிய வார்த்தையைக்கேட்ட தயாநந்தருக்குக் கரைகாணுத ஆச்சரியமுண்டாகிவிட்டது. "ஆகா! இழந்துவிட்ட என்மகனை—என் சுதனையா—மீண்டுமடையப்போகிறேன்?" என்று பெருமகிழ்ச்சிகொண்டு அந்த சன்னியாசியின் எதிரில் ஓடி, சுவாமின்! என் மகன் இங்கு வந்திருக்கிறுனு! வரப்போகிறுனு!" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

சன்யாசி.—நாளைக்காலையில் கல்யாண விலாசத்திற்குச் சென்றுல் அவனைக் காணலாம்—என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

இந்த ஆச்சரியமான செய்தியைக் கேட்ட எல்லோரும் வெகு சந்தோடத்துடன் கடவுளை துதித்துவிட்டு வீட்டையடைந்தார்கள். மறுநாள் உதயத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தயாநந்தர் முதலிய எல்லோரும் உதயமானதும் சாமியார் தெரிவித்த கல்யாண விலாசத்திற்குச் சென்றுர்கள். தயாநந்தர் அங்கு வந்திருக்கும் புதிய கலெக்டரை நோக்கி, உற்றுப்பார்த்துப் பின்னர் "ஐயா! உங்கள் பெற்றோரின் பெயரென்ன?" என்றுர். திடீரென்று இவ்விதம் கேட்ட தயாநந்தரைநோக்கி "தாங்கள் யார்? ஏன் கேட்கிறீர்கள்? என் வளர்ப்பு பிதாவின் பெயர் சிவலிங்கம். மாதாவின் பெயர் கமலம்மாள். சொந்த பிதாவின் பெயர் எனக்குத்தெரியாது. "என்று கூறிமுடிக்குமுன் "ஆ! என் செல்வா! யான் உனது சொந்த பிதா! என் வயிற்றில் பிறந்த உத்தமனே நீ!" என்று தமது சகலமான வரலாற்றையும் கூறினுர். பின்னர் கலெக்டராகிய சிவப்ரகாசம் தயாநந்தர் தனது தந்தை என்பதையும், ஏமாவதி தனது உடன் பிறந்தவள் என்பதையுமறிந்து வெகு சந்தோடப்பட்டு விசாரித்து வணங்கி தனது வரலாற்றைத் தொடங்கி—தன்னுடைய வளர்ப்பு பெற்றோர் இறந்துவிட்டதாயும், தன்னை யோர் சீமான் காப்பாற்றி கல்விகற்கச்செய்து பின்னர் பெருத்த உத்தியோகத்திலமர்த்தி அதன் பிறகு விவாகம் செய்வித்ததாயும். தனக்கு தன் வளர்ப்பு தாய் தந்தையர்கள் சொந்த தாய்தந்தையர்கள் இறந்துவிட்டதாக கட்டுக்கதைக்கூறிவிட்டமையால் ஒன்றுமறியக்கூடவில்லை—என்று கூறி தனது மனைவியை அழைத்து அவர்களுக்கு வந்தனம் செய்வித்துத் தனது குழந்தைகளையும் கொணர்ந்து அவர்களிடம் கொடுத்தார். குழந்தைகளைக்கண்ட எல்லோரும் பரம சந்தோடமடைந்து அவர்களையும் தமது பங்களாவிற்கே வரும்படியாக அழைத்துச்சென்றுவிட்டார்கள். பிறகு எல்லோரும் ஒன்றுபட்ட குடும்பமாகவே இருக்கவேண்டுமென்று தயாநந்தர் பிரியப்பட்டமையால் சகலரும் ஒன்றுகூடி நித்யாநந்த சுகத்தை அநுபவிக்கின்றுர்கள்.

தயாநந்தர் நீங்க மற்ற எல்லோரும் தம்பதிகளாக விருப்பதைப் பார்த்த சிதம்பரத்தின் வேலைக்காரனுக்கு அபாரமான வியப்புண்டாகிவிட்டது. மேலும், முத்துக்ருஷ்ணன் இருமனைவிகளுடனிருப்பதைக் கண்டு கட்டிலடங்காத ஆச்சரியமடைந்து ஒரு தினம் முத்துக்ருஷ்ணனை நோக்கி "எஜமானே! தாங்கள் ஒரு விவாகம் செய்துக்கொள்ள அத்தனை பாடு பட்டதாகக் கூறினீர்களே! மற்றொரு மனைவி இருக்கிறார்களே! அவர்களை மணப்பதற்கும் தாங்கள் முன்னர் எனக்குச் சொல்லியது போலான கஷ்டங்களைத் தானே யனுபவித்திருப்பீர்கள். ஐயோ! வேண்டாம்; விவாகமே வேண்டாம்." என்றான். அப்போது அருகிலிருந்த நவநீதம் "நாதா! தாங்கள் முன்னொரு நாள் இவனுக்குக் கூறிய விளையாட்டுச் செய்திகளை இன்னமும் உண்மை என்று நம்பி யிருக்கிறானே பாவம்! ஐயோ! இத்தகைய சாதுக்களும் இக் கலியில் உண்டா!" என்றாள். இது கேட்ட முத்துக்ருஷ்ணன் "அடேய்! நான் பட்ட கஷ்டத்திற்கு உன்னையும் ஆளாக்கி விடுகிறேன் இரு; பயப்படாதே" என்று கூறிக் கொண்டே போய்விட்டான்.

தனது மகனுடைய குழந்தைகளையும், பேத்தியின் குழந்தையையும் வைத்துக்கொண்டு தயாநந்தரும், சிதம்பரமும், ஏமாவதியும் சதா குலாவும் வேலையைத்தவிர மற்றவேலைகிடையாது. சன்னியாசி சொல்லியதுபோல முத்துக்ருஷ்ணனுக்குப் பேரன்பிறந்து, அவன் பாட்டனாராக ஆகிவிட்டான். அவனுடைய சம்பளம் உயர்ந்தது. சாமிநாதனும் அவன் மனைவியும் சதா கடவுள் பக்தியுடன் மனமொத்த வாழ்க்கையாய் இல்லறம் நடத்துகின்றார்கள். பதிகளுக்கேற்றபாவைகளாயும், பெரியோரும் போற்றும் பொற்கொடிகளாயும், எல்லோரும் வெகு மேன்மையாய் நித்திய கல்யாண வைபவ சுகத்துடன் நிமலனடி மறவாது நித்தமும் தொழும் பத்தராய் சீலமுடைய சிரோமணிகளாய், ஒழுக்கமுள்ள ஒப்பற்ற திலகங்களாய், கற்பிற்சிறந்த கண்மணிகளாய் நாட்டில் சிறந்த நாரீமணிகளாய் விளங்குகின்றார்கள். ஆடவர்களும் தேடரிய மாணிக்கங்கள்போல இல்லறத்திற்கேற்ற நல்லறிவுடனும் சொல்லறியாத பக்தி ப்ரதாபத்துடனும் சகலருக்கும் சற்குண சம்பன்னர்களாய் விளங்குகின்றார்கள்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (திருக்குறள்)

சுபம். சுபம். சுபம்.

"நவநீத கிருஷ்ணன்" முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

182858
சென்னை 600 008

நமது அன்பார்ந்த சந்தா நேயர்கட்கு அறிவிப்பு.

சென்ற வாண்டின் 11-12வது சஞ்சிகைகளில் தெரிவித்தபடியே நமது சந்தா நேயர்களின் விருப்பத் திற் கிணங்கி நாம் இவ்வாண்டு முதல் நமது சஞ்சிகை யின் பக்கங்களை அதிகப் படுத்தி இந்த 8-வது சஞ்சி கையில் "நவநீத கிருஷ்ணன்" எனும் நாவலை முடித்து விட்டோம். அடுத்த சஞ்சிகையில் "சாருலோசனா" எனும் புதிய நாவல் ஆரம்பிக்கப்படும். நாம் பக்கங்களை அதிகப்படுத்தியும் சந்தாத் தொகையை அதிகப் படுத் தாது அதிக செலவுக்குள்ளாவது நேயர்கள் அறிந்த விஷயம். இதைக் கருதியே அநேக சந்தாதாரர்கள் தங்களது நண்பர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொடுத்ததற்கு எமது மனமுவந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அப்படியே மற்ற சந்தா தாரர்களும் தமது நண்பர்களுக்குச் சிபார்சு செய்து உதவினால் நாம் இன்னும் உற்சாகத்துடன் நமது சஞ்சிகையை நடத்துவதுடன், அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடவோம்.

நிற்க, சென்ற டிசம்பர் மீ வெளியான "ராதாமணி" முதற் பதிப்புக் காபிகள் எல்லாம் செலவாகிவிட்டன வாகையால் தற்போது கேட்பவர்களுக்கு உடனே அனுப்ப முடியாமைக்கு நாம் மிகவும் வருந்துகிறோம். இரண்டாம் பதிப்பு வெகு துரிதமாக அச்சாவதால் கூடிய சீக்கிரத்தில் அதை வெளியிட்டு அனுப்புகிறோம். மற்றும் வேண்டியவர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டால் புத்த கத்தை தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

மானேஜர்.

"Gopala Rathnam"

(THE HINDU)

17—7—29.

In this novel, the talented young authoress has depicted in a very realistic fashion the difficulties that beset a young Brahmin and his wife in modern social life: The hero, Gopalan, is a graduate who falls in love with Ratnambal, the pet daughter of a poor villager; it is with great difficulty that he persuades his father, a retired Government servant, to agree to lessen the bridegroom's price so as to enable Ratnambal's father to give her in marriage to him. The story, which is skilfully told is woven round the hero's difficulty in securing employment and the ruthless efforts of his parents to extract money from his father-in-law. The loving couple bravely struggle against these odds and ultimately throw off the shackles of custom and solve the problem by opening a coffee hotel.

The authoress commands an easy flowing style and the narrative keeps the reader's interest sustained throughout. The faithfulness with which some of the social aspects of modern Brahmin life are described adds largely to the other merits of the novel.

பரிசுகளின் விவரம்.

ஆறாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா. ந.

4393 Srimathi Mangalammal. Ramnad.
4445 Mr. S. A. Kader Mian, Penang.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

1000 கைத்தொழில் முறைகளடங்கிய
அருமையான நூல் வெளிவந்துவிட்டது.

கைத்தொழில் முறைகள்

இந்நூலில் மாதம் 100-ரூபா முதல் 500-ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய அரிய போதனைகளடங்கியன.

இதில் பலவிதமான சோப்புகள், மெழுகு வர்த்திகள், வச்சிரங்கள், சாக்குகள், பாணவேடிக்கைகள், வார்னிஷ்கள், தீக்குச்சி, இங்கிகள், சாயங்கள், வெள்ளி தங்கம், மாஜிக் இங்கி, வர்ண தினுசுகள், பெப்பர்மிண்டு தினுசுகள், ஓமம் வாட்டர், பலவித பல்பொடி, பிஸ்கத் தினுசுகள் கேக்குகள், கூந்தல் தைலங்கள், அத்தர் செண்டு தினுசுகள், வாஸலயின், பன்னீர் ஷர்ப்பத்துகள், விரப்புகள், பூட்பாலிஷ், அரக்குகள், சோடா, லிமினெட், லேம்ஜ ஓஸ் பவுடர்கள், லேகியம் முதலிய பலவித மருந்து தினுசுகள், கறிமசாலை பவுடர், பென்ஸல்கள், மூக்குத்தூள், சிகரெட்டுகள் முதலிய அநேக செய் முறைகள் பிரபல அனுபவசாலிகளால் எழுதப்பட்டிருக்கின்றன. சுமார் 1000 முறைகளுக்குமேல் இந்நூலில் இருக்கவேண்டு மென்பதை நேயர்களே நன்கு அறிந்துகொள்ளலாம். இதன் விலை ரூபா 1—8—0

கர்ப்பாட்சி அல்லது

சுவாதீன கர்ப்பம்

என்ற இந்த நூல் இதுவரையில் தமிழில் வெளிவராததும், இல்லற வாழ்க்கையின் மகோன்னத கர்ப்பாட்சி ரகசிய முறைகளைத் தெளிவாக அநுபவ சித்தமாய் விளக்கக்கூடியதுமாகும். உலகத்திலுள்ள பல தேசத்தாரும் கையாண்டு அநுபவித்துவரும் கர்ப்பாட்சி முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்கால் அநுபோகத்திலிருக்கக்கூடியதான இந்த சுவாதீன கர்ப்ப ரகசிய முறைகளை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

இந்நூலில் காணப்படும் விஷயங்கள்

கர்ப்பம் எப்படி உண்டாகின்றது? அதிக பிள்ளைகளைப் பெறுவதினல் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களென்ன? ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய இன்ப சுகத்திற்கு இடையூறில்லாமல் போதுமான பிள்ளைகளைப் பெறுவதெப்படி? பிள்ளை வேண்டாம் என்று எண்ணுகிற காலம்வரையில் கர்ப்பம் வாராமலே தடுத்து வைத்துக்கொள்ளுவதெப்படி? மறுபடியும் வேண்டும் போது கர்ப்பம் அடைவதெப்படி? என்றிவைபோன்ற மிக நுண்மையான ரகசிய ஆராய்ச்சி முறைகளும், கர்ப்பந் தடுக்கும் கருவிகளின் உபயோகங்களும் அநேக ரகசிய சித்திரப் படங்களுடன் அந்நூலுள் செவ்வனே விளக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்நூல் அவசியமாக இருக்கவேண்டியதாகும். இதன் விலை அணு 0 8 0

வாவஸன் புஸ்தக சாலை
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

கவனியுங்கள் ! நல்ல லாபம் !!

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறுகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3 \times 2\frac{1}{4}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2-15-0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.



ரூ. 2—14—0 ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறைாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2—14—0.

கண்டியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-டி.) ஜார்ஜு டவுன், மதராஸ்.

---

2 எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல் கைக்கெடியாரங்கள்.



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச் சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்தரவாதமானது.

ரூபா 4—15—0 வி. பி. வேறு.

ஜீனோன் வாட்சு கம்பெனி,
மிண்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

சொற் புதிர் நெம்பர் 2. அறிக்கை.

சரியான விடை. 1. தேசபந்துதாஸ். 2. சத்தியாக்கிரகம். 3. உண்மைக்காதல். 4. ஸ்தனபாரம். 5. மன்மதன். 6. சுதேச மித்திரன். 7. மடமயிலாள். 8. மனோரஞ்சிதம். 9. பாரததேவி. 10. லஜபதிராய்.

எமது விளம்பரப்படி சரியான விடைகளைத்தான் இத்தடவை போட்டியிற் சேர்த்துக்கொண்டோம்.

பரிசு பெற்றவர்கள்.

1. எஸ். முத்து. No. 1. லாரி டிரைவர். C/o. மெஸர்ஸ் தி. பி. பி. டி. ஸி. லிமிடெட் டன்னீடா. ரங்கூன்

2. லைஸ. மரகதம் C/o. ஸி. தாமஸ், லேடி டாக்டர். திருப்பூர் S.I.Ry.

முதல் பரிசு 15 ரூபாய் விலை மதிக்கக்கூடிய ரோல்ட் கோல்ட் பாக்கட் வாட்சும், இரண்டாம் பரிசு. 5 ரூபாய் விலை மதிக்கக்கூடிய டைம்பீஸ் ஒன்றும். பரிசு பெற்றவர்களுக்கு தபாலில் அனுப்பிவிட்டோம். மற்றவர்களுக்கு மாதவமணி அல்லது மாசிலாக் காதல் என்ற காதல் ரஸம் ததும்பும் நாவல் தபாலில் அனுப்பிவிட்டோம். அநேக நண்பர்கள் சொற்புதிரை தொடர்ச்சியாக நடத்தும்படி கேட்டுக்கொண்டார்கள். சில தொந்திரவுகளால் சில காலம் நிறுத்தி வைத்துவிட்டுப் பிறகு தொடர்ச்சியாக நடத்த விளம்பரமூலம் வெளியிடுவோம். R. K. S. Balu Iyer.

இனம் ! இனம் ! ! இனம் ! ! !

உங்கள் புஸ்தக சாலையில் அடியிற் குறிப்பிட்டுள்ள புஸ்தகங்கள் இருக்கின்றனவா? அல்லது நீங்கள் படித்ததுண்டா? இல்லாவிட்டால் எமக்கு எழுதுங்கள் நாங்கள்; அனுப்புகிறோம்.

அற்புதமான தமிழ் நாவல்கள்.

ஸ்ரீமதி வி. எம். கோதைநாயகி அம்மாள் எழுதியவை.

வைதேகி	2—8—0	சண்பக விஜயம்	1—12—0
பத்மசுந்தரன்	2—8—0	கௌரீ முகுந்தன்	1—12—0
ராதாமணி	2—8—0	கோபாத ரத்நம்	0—14—0
நவநீத கிருஷ்ணன்	2-0-0	மாதவமணி	0— 3—0

போலீஸ் கிளி பொதிவியர் 0–2–0 ராவ் பகதூர் ரஸகுல்லா சாகிப் 0-2-0. விடா நகைப்பைத். தரும் 0-6-6 ஸ்டாம்பு அனுப்பினால். ரஸகுல்லா சாகிப், போலீஸ் கிளிபொதிராயர், மாதவமணி ஆகிய மூன்று நாவல்களும், 1-4-0 மணியார்டர் செய்தால் கோபால ரத்நம் சேர்த்து 4 நாவல்களும் தபால் சிலவன்னியில் அனுப்புவோம்.

நீங்கள் உங்கள் மனைவியர்களுடன் சந்தோஷமாய் இன்புற்றிருக்கவேண்டாமா? அவர்களை களிப்பிக்கச் செய்யவேண்டாமா? அவர்கள் எப்பொழுதும் உங்கள் நினைவாகவே யிருக்கவேண்டாமா? ஒருயிரும் ஈருடலுமாக இருக்கவேண்டாமா? அதற்கான முறைகள் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால், புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதைப் போலக் கிளம்பும் பல புஸ்தகங்களையும் படிக்காமல் பொறுக்கி எடுக்கப்பட்ட அடியிற் கண்ட புத்தகங்களை வரவழைத்துப் படியுங்கள்.

இல்வாழ்க்கைக் கிரமரகசியம்	3.0.0	சதிபதி மர்மம்	1.0.0
இல்வாழ்க்கையின் ரகசியங்கள்	2.0.0	மங்கையின் முத்தம் ரப்	2.0.0
இன்ப வாழ்க்கையின் ரகசியங்கள்	2.0.0	" கிளேஸ்	3.0.0
		முத்தத்தின் மர்மம்	1.8.0

அழகு பெற அலங்கரித்து ஆடவர்களை அழைத்து மயக்கிப் பணத்தைப் பறிக்கும் பரத்தையர்களின் லீலைகள் தெரியுமா? தெரியாவிட்டால் விறலி விடுதூது என்ற நூலைப் படியுங்கள். விலை. 0—12—0 பதின்மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு காபி தங்கள் வீடு தேடி ஓடிவந்து உங்கள் கையிலேறும்.

ராஜீய நூல்கள்

இந்திய மாதா	1-8-0	அநதிர்ஷ்ட இந்தியா	2-8-0
இந்திய பிதா	2-0-0	சத்திய சோதனை	2-8-0
மாயாமேயோ	2-0-0		

வியாபார நூல்கள்

வர்த்தகக் கணித நூல்	2-0-0	வர்த்தக யுக்தி	0-12-0
வியாபார தந்திரம்	1-8-0	ஹென்ரிபோர்ட்	1- 8-0
கைத் தொழில் முறைகள்	1-8-0		

நான்கு ரூபாய்க்குக் குறையாமல் ஆர்டர் செய்தால் தபாற் சிலவு இனாம். உடனே எழுதுங்கள் சில பிரதிகளே இருக்கின்றன. முந்துங்கள்!

விலாசம்
ஆர். கே. எஸ். பாலு அய்யர்
காரியதரிசி. டி. ஸி. ஆர். வாசகசாலை
ரெட்டகுடி, அம்பல் போஸ்ட்
தஞ்சை ஜில்லா

Address:—
R. K. S. Balu Iyer
Secretary D. C. R.
Vachakasala
Rettakudi, Ambal Post
Tanjore Dt.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

சென்னை வர்த்தமானி

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவருவது, சனி ஞாயிறில் வரும் தந்திகளோடு, அநேக அரிய வியாசங்களும், அயல் நாட்டு சம்பவங்களும் அடங்கப்பெற்றது. மாணவர்களுக்கு இன்றியமையாதது.

வருஷ சந்தா ரூ 3—0—0. 6 மாதத்திற்கு ரூ 1—12—0.

மானேஜர்,
அங்கப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்கராஜு
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

JAGANMOHINI. Regd. No. M. 2210

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.